# டி. கே. சி. வரலாறு

UNIVERSITY EXTENSION
LIBRARY, MADURAI

வித்வான்
ல. சண்முகசுந்தரம்

ஸ்டார் பிரசுரம்

திருவல்லிக்கேணி சென்னை-5
மேலக்கோபுரத் தெரு மதுரை

முதற் பதிப்பு - ஆகஸ்ட், 1955

விலை ரூ 1—8—0

STAR PUBLICATIONS

TRIPLICANE
MADRAS-5

★

WEST TOWER STREET
MADURAI

Printed at the National Art Press, Teynampet, Madras-18

# டி. கே. சி. வரலாறு

## பிறப்பு

தமிழ்த் தந்தை ரசிகமணி, டி. கே. சிதம்பரநாத முதலியாரவர்கள் தமிழ் நாடும், தமிழ் மொழியும் செய்த தவப்பயனாக கி. பி. 1882-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 7-ம் தேதி (தமிழ் 1057 ஆவணி 1) ஸ்ரீவில்லிபுத்தூரில் தாய் மாமனாராகிய தீத்தாரப்ப முதலியார் அவர்கள் வீட்டில் அவதரித்தார்கள்.

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிமணியும், சுதந்திர வீரரும், கவிதைகளின் மந்திர சக்தி மூலம் மக்களைத் தட்டி எழுப்பி அன்னிய ஆட்சியை அதிரச் செய்தவரும், தமிழ் மொழிக்கு விறுவிறுப்பும், நயமும், வளவும் கொடுத்துப் பெருமைப் படுத்தியவருமான மகா கவி சி. சுப்பிரமணிய பாரதியார் அவர்களும் ரசிகமணி பிறந்த அதே வருடந்தான் அவதாரம் செய்தார்கள்.

ரசிகமணி அவதரித்த ஸ்ரீ வில்லிபுத்தூர் தண்டமிழ் மணங் கமழ்ந்து சான்றோர் பலர் அவதரித்து, தமிழ்ப் பண்பை வளர்த்த தவப் பெருமையுடைய பேரூராகும்.

பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரும், முதல் ஆழ்வார் மூவருள் முதல்வரும், கனவிலும், நனவிலும் கண்ணன்

திருவடியையே நினைந்து நினைந்து கசிந்து பல பாசுரங்கள் பாடியவருமான பெரியாழ்வார் அவதரித்த பெருமை ஸ்ரீவில்லிபுத்தூரைச் சார்ந்தது.

பெரியாழ்வார் இறைவனுக்காக மலர் எடுக்க வருகின்ற காலை, மலர்ச் செடியின் நிழலில் இன்முகங் காட்டிக் காலுங் கையும் உதறிக் கொண்டிருந்த ஆண்டாள் என்னும் பெண்குலமணி பிறந்து வளர்ந்த ஊரும் ஸ்ரீவில்லிபுத்தூரே.

பெரியாழ்வாரும், ஆண்டாளும், மற்றும் பல கவிஞர் பெருமக்களும் அவதரித்த ஸ்ரீவில்லிபுத்தூரில் நம் ரசிகமணி டி. கே. சி. அவர்கள் அவதாரம் செய்ததும் இருபதாம் நூற்றாண்டின் கவி உலகத்திற்கு வழி காட்டியும், வாடா விளக்குமாகிய சுப்பிரமணிய பாரதியாரும், ரசிகமணி டி. கே. சி. யும் ஒரே ஆண்டில் அவதரித்ததும் சாலப் பொருத்தமுடைய திருவுளச் செயலே என்பது நுனித்தறியற் பாலதாம்.

டி. கே. சி. யின் தந்தையார் தென்காசியை அடுத்த களங்காடு என்னும் சிற்றூரைச் சார்ந்த தீத்தாரப்ப முதலியார். அவர்கட்குக் களங்காடு பூர்விகமான ஊர் என்பதைத் தவிர தீத்தாரப்ப முதலியாரோ, டி. கே. சி. யோ அங்கு வசித்ததில்லை. அவர்கள் வசித்தது தென்காசியில் தான்.

டி. கே. சி. யின் தாயார் ஸ்ரீவில்லிபுத்தூரில் பிறந்த மீனம்மாள் அண்ணி ஆவர். மீனம்மாள் அண்ணி, அன்பும், அருமையும், பக்தியும், பண்பாடும் ஒருங்கமைந்த புண்ணியவதி என்று பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

டி. கே. சி. அவர்கள் தம் அன்னையின் அன்பையும் அருளையும் வியந்து பன்முறை சொல்லி இருக்கிறார்கள்.

டி. கே. சி. க்கு, குத்தாலலிங்க முதலியார் என்னும் தமையனார் ஒருவரும் கோதை அம்மாள் என்னும் தமக்கையார் ஒருவரும் ஆக இருவர் உண்டு.

டி. கே. சி. யின் தமையனார் பல்லாண்டுகள் தொடர்ந்து திருக்குற்றாலம் தேவஸ்தானத்தின் தர்மகர்த்தாவாக இருந்து கோவிலுக்கும் பொதுமக்களுக்கும் அரிய காரியங்கள் பல செய்திருக்கிறார்கள். மேலும் டி. கே. சி. யின் தந்தையார் தீத்தாரப்ப முதலியார் காலமான பின்பு சில ஆண்டுகள் நம் டி. கே. சி. யை அவர்களின் தமையனார் குத்தாலலிங்க முதலியார் அவர்களே பார்த்து வந்தார்கள்.

குத்தாலலிங்க முதலியாரவர்கள் முப்பது ஆண்டுகளுக்கு முன்பே காலமாகிவிட்டார்கள். டி. கே. சி. யின் தமக்கையார் கோதையம்மாள் ஒருவர்தான் தற்சமயம் இருக்கிறார்கள்.

டி. கே. சி. யின் தந்தையார் வழியிலுஞ்சரி, தாயார் வழியிலுஞ்சரி இரு குடும்பத்தார்களும் உயர்ந்த பண்பாடும் கல்வியும், தயாளமும் நிறைந்தவர்கள். இரண்டு குடும்பத்தாரும் பெரிய நிலக்கிழார் ஆவார்கள். டி. கே. சி.யின் தாய் மாமனார் குடும்பத்திற்கு ஸ்ரீவில்லிபுத்தூர்ச் சரகத்தில் ஏழு கிராமங்கள் உண்டு. அப்படியே, டி. கே. சி. க்கும் நிலபுலங்கள் ஏராளம். தென்காசிச் சரகத்தில் உள்ள கடவாக்கத்திக் கிராமம் டி. கே. சி. க்குச் சொந்தம். அது போக கட்டாக்குடி, கண்டமங்கலம் முதலிய இடங்களிலும் நிலம் தோப்பு முதலிய வருமானம் நிறைந்த சொத்துக்கள் உண்டு.

டி. கே. சி. யின் குடும்பம் தொன்மையான பண்பாடு நிறைந்த குடும்பம். உயர்ந்த குலம். வழி வழியே வந்த கல்விச் செல்வமும், பொருட் செல்வமும் குறைவறப் பெருகிய குடும்பம். அப்படியானுற் செல்வத்திற்குக் (செல்வாக்கிற்கு) கேட்பானேன். தென்காசிச் சரகத்திலும், மற்றைய வட்டாரங்களிலும் எங்கு கலியாணம் நடப்பினும் டி. கே. சி. குடும்பத்தாருக்குத்தான் முதல் தாம்பூலம் என்று வயதான அறிஞர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். டி. கே. சி. குடும்பத்தாரைக் கற்ருேரும், மற்ருேரும், பணம் படைத்தவர்களும், ஏழைகளுமாகிய சகல பகுதியினரும், பொதுமக்கள் சகலரும் இத்துணை உயர்வில் வைத்துப் பாராட்டியதின் காரணம் என்ன ? டி. கே. சி. குடும்பத்தாரிடம் அதிகாரமோ, அல்லது தடபுடலோ இருந்தது என்று எண்ண முடியுமா? இல்லை. டி. கே. சி. குடும்பத்தில் நெடுங் காலமாய்த் தவருது ஒழுங்காக வந்த பண்பாடு, கல்வி, அருமை, இவைதான் காரணம். இவற்ருேடு அவர்களுடைய செல்வ வளம், குல வளம் முதலியவற்றையும் சேர்த்துக் கொள்ளலாம்.

# இளமையும் படிப்பும்

டி. கே. சி. இளமைப் பருவத்தில் தென்காசித் திண்ணைப் பள்ளியிற்றான் படித்தார்கள். பனையோலையும், எழுத்தாணியுந்தான் அந்தக் காலத்தில். மாணவர்களும் ஆசிரியரும் உட்காருவது மணலிற்றான். தமிழ்ப் பாடல்கள், கணக்கு முதலியவை நடைபெறும். டி. கே. சி. ஆரம்பப் பள்ளிப் படிப்பில் அவ்வளவு சுறுசுறுப்பு என்று சொல்ல முடியாது. காரணம் டி. கே. சி. யின் இதயம் பிறவியிலிருந்தே தனித்த முறையில் அருமையும் ஆனந்தமும் கொண்ட இதயமாகும்.

"எனக்கு ஆறு ஏழு வயதிருக்கும். என் தாயாரின் அன்பும் பரிவும் அப்படியே இன்னமும் என் ஞாபகத்தில் இருக்கின்றன. என் தாயார் வேலை முடிந்த பின்பு பாரதம் போன்ற வசன நூல்களை ஒவ்வொரு நாளும் வாசிப்பார்கள். பக்கத்து வீட்டுப் பெண்கள் அந்தக் கதைகளைக் கேட்டுக் கொண்டிருப்பார்கள். நானும் அதைக் கேட்டு ஆனந்தமடைவேன். எனக்கு அவ்வளவு லகுவாய் விளங்கி விடும். எனக்கு எப்பொழுதும் ஏதாவது வேலை செய்வதில்தான் ஆசை. பத்து வயதிலேயே தென்னை மரத்தில் ஏறித் தேங்காய்களைப் பறித்துப் போடுவேன். தலையில் ஒரு குடம் தண்ணீரும் கையில் ஒரு குடம் தண்ணீருமாக ஒரே வேளையில் இரண்டு குடம் கொண்டு வருவேன். ஒரு நாள் வேலைக்காரன் ஒரு வண்டி விறகைக் கொண்டு வந்து தட்டி விட்டான். வீட்டில் ஒருவரும் இல்லை. நான் ஒருவனாக இருந்து அவ்வளவு

விறகையும் சமயலறைக்குக் கொண்டு வந்து, கொண்டு வந்த அவ்வளவு விறகையும் சமையலறையிலுள்ள பரணி யில் (தீத்தாங்கியில்) அடுக்கி வைத்துவிட்டேன். என் தாயாருக்கு அன்று அளவில்லாத ஆனந்தம்.

"தன் மகன் தனியாக இருந்து இவ்வளவு விறகையும் கொண்டு வந்து அடுக்கி விட்டான் என்பதை நினைக்க நினைக்க ஆனந்தம்தானே. ஆனால் பள்ளிக்கூடமும் பாடப் புத்தகங்களும் எனக்கு இப்படி மகிழ்ச்சியைக் கொடுக்க வில்லை.

"வீட்டிற்கு நான் வந்ததிலிருந்து இரவு பத்து மணி முடிய ஒரே டியூசன். திண்ணைப் பள்ளிக்கூடத்து ஆசிரி யர் தவிர, ஆங்கிலப் பாடத்திற்கும் டியூசன் வாத்தியார்களை வைத்து என் தந்தையார் என்னைச் சங் கடப்படுத்தினார்கள். என் தாயார் என் மீது வைத்திருந்த அன்பும், என் தந்தையார் எனக்கு டியூசன் வாத்தியார்களை வைத்து உண்டாக்கிய கொடுமையும் சரிநிகர் சமான மாகும்."

மேலே உள்ள வாக்கியங்களைக்கொண்டு டி. கே. சி.யின் மனோநிலையை ஒருவாறு உணரமுடியும். டி. கே. சி.யின் இத யமும் உணர்ச்சியும் சோர்வற்றவை. துடிப்போடு கூடி யவை. சோம்பல் இல்லாமல் சுறு சுறுப்போடு வேலை செய்வதில் ஆனந்தமும் மகிழ்ச்சியும் கொண்டவர்கள். அதன் மூலம் மனோ வளர்ச்சியும், பண்பாட்டு வளர்ச்சியும் பெறலாம் என்பதை அனுபவபூர்வமாகக் கண்டவர்கள். கல்விச்சாலைகள் குழந்தைகளுக்கு விளையாட்டும் வேலையும் அவை மூலம் உற்சாகமும் கொடுக்கவேண்டும். உற் சாகத்தை ஏற்படுத்தித்தான் கல்வியைப் போதிக்க

வேண்டும். போதிக்கப்பட வேண்டிய கல்வி உற்சாகத்தை எந்த வகையிலும் வளர்க்கக்கூடியதாக இருக்கவேண்டும். அத்தகைய கல்விச்சாலைகள் நாட்டில் ஏற்படுமானால் சமுதாயத்தில் உண்மையும், ஒழுங்கும், அனுபவமும், ஆனந்தமும் ஏற்பட முடியும் என்பதை மிக்கத் தெளிவாகக் கண்டறிந்தவர்கள்.

டி. கே. சி.யின் தந்தையார் தம் சொந்தக்காரர்கள் வீட்டில் நடக்கும் கல்யாணம் முதலிய விசேசங்களுக்கு டி. கே. சி. யை உடன் அழைத்துப் போவதும் சில சமயங்களில் டி. கே. சி. யை மட்டும் தனியாக அனுப்புவதும் உண்டு. கல்யாண வீடுகளுக்குப் போவதென்றால், டி. கே. சி.க்கு ஒரே மகிழ்ச்சி. காரணம் என்ன? கல்யாண வீட்டில் ஓடி ஆடிப் பல வேலைகள் செய்யலாம். தண்ணீர் எடுக்கலாம். பந்திக்கு இலை போடலாம். பரிமாறலாம். எடுபிடி வேலை செய்யலாம். இவைகளை உத்தேசித்துத் தான், டி. கே. சி. மகிழ்வார்கள்.

டி. கே. சி.க்கு பரதநாட்டியம் பார்ப்பதிலும், கதைகள் கேட்பதிலும் மட்டற்ற ஆசை. நாட்டியக் கலையின் உன்னத அம்சங்களை இளமை முதலே கல்யாண வீட்டுக் கச்சேரிகளின் மூலம் தெரிந்து கொண்டவர்கள் டி. கே. சி. அதே போன்று பாகவதர்கள் கதைகளை எடுத்தாள்கிற வனப்பும், இடை இடையே கதையோடு தொடர்புடைய பாடல்களைப் பாடி விளக்குகிற முறையும், தமிழ்மொழி வளைந்து நெளிந்து சுகமாகப் பேசுகிற தன்மையும், டி. கே. சி.க்கு மிகப் பிடித்துவிட்டது. இளமையில் அவர்கள் ஆசையோடு பார்த்து அனுபவித்த பரத நாட்டியமும், கேட்டு அனுபவித்த கதா காலட்சேபமும்

அவர்களுடைய வருங்கால வளர்ச்சிக்கு எத்தனையோ உதவி செய்தன.

ரசிகமணியவர்களின் இளமைப் பருவத்தில் திண்ணைப் பள்ளிக்கூடங்கள்தான். ஓலையும் எழுத்தாணியுந்தான். அத்துடன் மக்களின் வாழ்க்கைத் தரமும், படாடோபமும் எவ்வளவு குறைவாகச் சமுதாயத்தில் இருந்தன என்பதையும் மக்களின் வாழ்க்கை எத்துணை அமைதியாய், சுகமாய் இருந்தது என்பதையும் ரசிகமணி அவர்களின் சொல்லிலிருந்தே பார்க்கலாம்.

"அந்தக் காலத்தில் யாருடைய வீட்டிலும் வெண்கலப் பாத்திரம் கிடையாது. தண்ணீர் குடிப்பதுகூட மண்ணாலாகிய பாத்திரத்தில்தான். சட்டை, ரவிக்கை என்பவை இல்லை. வீட்டிலுள்ள சகல சாமான்களும் அடுக்களைப் பலகையில்தான் வைக்கப்படும். வேட்டியும் துண்டும், சேலையும் கொடிகளில்தான் கிடக்கும். பீரோ என்பது இல்லை. காலைச் சாப்பாடு பெரும்பாலான வீடுகளில் பழையதுதான். கல்யாண வீட்டிற்கூட அப்படித்தான். காபி என்பது கிடையாது. தம்பிடிக்கு மூன்று தீப்பெட்டிகள் விற்கப்பட்டன. அப்பொழுதும் தெருக் கடந்து தீ எடுத்து வந்துதான் பல வீடுகளில் தீப்பற்ற வைப்பார்கள். சில வீடுகளில்தான் மூன்று வேளைகளிலும் சமையல் நடக்கும். அவ்விடங்களில் எப்பொழுதும் தணல் இருக்கும். அவ்வீட்டார் தணற் கங்கை நெல் உமியிற் போட்டு வைத்திருப்பார்கள். மற்ற வீட்டார் எருவட்டியிலோ கொட்டாங்கச்சியிலோ தணற் கங்கை எடுத்துக்கொண்டு போவார்கள். நெருப்பின் முக்கியத்தை உத்தேசித்துத்தான் குற்றம் செய்து கட்டுப்படாதவர்கள் வீட்டிற்கு "நெருப்பும் நீரும் கொடுக்கக்கூடாது" என்று

விதித்துவிடுவார்கள். அதை ஒட்டியே "நீரும் நெருப்பும் தள்ளி வைத்தல்" என்னும் பஞ்சாயத்துத் தீர்ப்பும் வந் திருக்கிறது. மூன்று வேளையும் சமையலாகிற வீடு பணக் காரர் வீடல்லவா? பணக்காரர்கள் நிறைந்த ஊர் ஒரு சிறப்பான அம்சந்தானே? அதை அநுபவித்த புலவர் "நல்லம்பர், நல்ல குடி உடைத்து சித்தன்வாழ் இல் லந்தொறும் மூன்று எரியுடைத்து" என சித்தன் வாழ்வு என்னும் ஊரில் மூன்று நேரமும் சமையலாகிற காரணமாக அடுப்பு எரிந்துகொண்டிருக்கும் என்று செல்வச் சிறப்பைப் பாராட்டி இருக்கிறார்.

"இனி என்னுடைய வாத்தியாருக்கு மாதச் சம்பளம் நான்கு ரூபாய்தான். அந்த நான்கு ரூபாயில் கோட்டுத் தான். ஜரிகைத் தலைப் பாகைதான் கவலையற்ற வாழ்க் கையும் கூடத்தான். மாதா மாதம் சீட்டுக்கு இரண்டு ரூபாய் வேறு போட்டு வந்தார் வாத்தியார்.

"இப்போது நானூறு ரூபாய்ச் சம்பளம் வாங்குகிற வர்கள் கூட அவ்வளவு அருமையான சுகவாழ்க்கை நடத்த முடியவில்லை. காரணம் என்ன? வேண்டாத ஆடம்பரச் செலவுகள் பெருத்துவிட்டன. சமுதாயம் முழுவதும் படாடோபத்திற்கும் டாம்பீகத்திற்கும் இரையாகித் தத் தளிக்கின்றது.

"அந்தக் காலத்தில் டியூசனுக்கு மாதம் கால்ரூபாய் தான். எங்கள் வீட்டில் என்னுடைய டியூசனுக்காக வருடம் ஒன்றிற்கு (ஆறு ரூபாய் பெறுமானமுள்ள) ஒரு கோட்டை நெல்லைக் கொடுத்து வந்தோம்.

"அவ்வளவுதான் டியூசன், டியூசன் என்று என் உயி ரையே வாங்கிவிட்டார், என் வாத்தியார். விளையாட்டும்

ஓய்ந்தது, மகிழ்ச்சியும் ஓய்ந்தது. சாப்பாடுகூடச் சரிவரச் சாப்பிட முடியாது. அவ்வளவும் டியூசன் மயம். அது மாத்திரமா, பள்ளிக்கூடத்திற்கு மணல் சுமந்து வருவதிலிருந்து பெருக்குவது வரை எதற்கும் என்னை ஆசிரியர் கட்டளை இடுவதில்லை. காரணம் என்ன? வருடத்திற்கு மூன்று ரூபாய் பெறுமானமுள்ள டியூசனுக்கு ஆறு ரூபாய் பெறுமானமுள்ள நெல்லைக் கொடுத்துவிட்டார்கள் என் தந்தையார். அந்த வினையின் பயன்தான் அவ்வளவும்.

"ஆசிரியர் சில பையன்களை அழைத்துச் சிதம்பரத்தை வீட்டு வரைக்கும் சுமந்து போங்கள் என்று கட்டளை இடுவார். சுமக்காவிட்டால் பையன்களுக்கு முதுகுத் தோல் உறிந்துவிடும். ஏறி அமராவிட்டால் டியூசனில் என்னை ஒரு கை பார்த்துவிடுவார். டியூசனுக்கென்று என் தந்தையார் அதிகமாய்க் கொடுத்த பணம் என்னையே கொடுமைப் படுத்தியது. மனித வர்க்கத்தையே கொடுமைப்படுத்தியது.

"அந்தக் காலத்தில் எல்லோருடைய கையிலும், பணம் அதிகமாகப் புழங்கவில்லை. எல்லோரும் ஆடம்பரத்தில் இருக்கவில்லை. ஆனால் ஆடம்பரம் நிறைந்து சகல வசதிகளும் பெருகிப் பண வெள்ளம் மறுகால் எடுத்து ஓடுகிற இந்த நாளில் அல்லவா மனிதன் சாப்பாட்டிற்குக் கஷ்டப் படுகிறான்! சாப்பாடு ஒரு பெரும் பிரச்சினையாக வந்து அது பெரும் பிரச்னையாகி மனிதவம்சத்தையே சீரழிக்கிற அலங்கோலத்தை இந்தக்காலத்தில்தான் பார்க்கமுடிகிறது"

மேலே உள்ள பகுதியைத் திரும்பத் திரும்பப் படித்துப் பாருங்கள். டி. கே. சி.யின் இளமைப் பருவத்து நிலை மட்டுமா, டி. கே. சி.யின் பேருள்ளமும் அதில் நிறைந்த இரக்க உணர்ச்சியும் தெள்ளெனப் புலனாகும்.

# உயர்தரப் படிப்பு

நம் தமிழ்த் தந்தை டி. கே. சி. அவர்கள் இங்ஙனம் தென் காசியில் ஆரம்பப் பள்ளியில் படித்து முடித்த பின்பு உயர் தரக் கல்வி கற்கத் திருச்சிராப்பள்ளியில் உள்ள தேசியக் கல்லூரி உயர்நிலைப் பள்ளியில் மாணவராகச் சேர்க்கப்பட்டார்கள்.

டி. கே. சி. படித்த காலத்தில் உயர்நிலைப் பள்ளியில் சகல வகுப்புகளிலும், சகல பாடங்களும் ஆங்கிலத்தில் தான் சொல்லிக் கொடுக்கப்பட்டன. ஒரு நாட்டின் இயல்பு, அங்குள்ள மலைகள், நதிகள், மக்களின் பழக்கவழக்கங்கள், தாவரங்கள், விளைபொருள், அரசர், போர், அரசாட்சி இத்தகைய எளிய விஷயங்களைக்கூட இந்நாட்டின் பண்பிற்குச்சிறிதும் ஒவ்வாத ஆங்கிலமொழியில் போதித்து வந்தார்கள். வருடா வருடம் ஆயிரக்கணக்கான இளஞ்சிறார்கள், சமுதாயத்தின் இளம் வாழைக்குருத்துக்கள், அடிமை நிலை என்னும் கொடுமைக்காக விளங்காத, விளங்க முடியாத ஆங்கிலம் என்னும் பலிபீடத்தில் வைத்துப் பழி வாங்கப்பட்டனர். நம் நாட்டின் செல்வங்களாகிய குழந்தைகள் தாய்மொழி மூலம் எளிதாக விளங்கி ஆனந்தமடையக்கூடிய கல்வியைப்பெரியவர்களாலும் விளங்கி அனுபவிக்க முடியாத அன்னிய மொழியிற் பயின்று, விளங்கி விட்டதுபோன்று பாசாங்கு செய்து, கண்ணைக் கட்டிக் காட்டில் விடப்பட்ட கதையாய், உருப்போட்டு, உருப் போட்டதைத் தப்பும் தவறுமாகப் பரீட்சையில் எழுதி,

எழுதியதில் வெற்றி என்றும், தோல்வி என்றும் உளைந்து, அதையே வாழ்க்கையின் குறிக்கோளாக வைத்து ஏமாந்து விட்டார்கள். ஆயிரக் கணக்கான இளஞ்சிறுர்களின் இதய வளர்ச்சியும், பண்பாட்டு வளமும் அந்நிய மொழியால் நசுக்குண்டு வதங்கின. நம் டி. கே. சி. அவர்கள் பள்ளிப் படிப்பில் ஒவ்வொரு பாடத்தையும், கூடியவரை விளங்கியே படித்தார்கள். அது காரணமாக உயர்நிலைப் பள்ளியில், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், சரித்திரம், பூகோளம் போன்ற ஒவ்வொரு பாடங்களிலும் சிறந்த மதிப்பெண் பெற்றுத் தேறி வந்தார்கள். இருந்தாலும் டி. கே. சி. யின் இதயம் உயர்நிலைப் பள்ளிப் படிப்பில் எவ்வளவோ ஏமாந்து வாடி வதங்கியது என்றுதான் சொல்லவேண்டும். இதன் காரணம் பாடத்தின் ஒரு சிறு பகுதி விளங்காவிட்டாலும் சரி, ஒரு வரி, ஒரு வார்த்தை விளங்காமலிருப்பினும் சரி அதை மனனம் பண்ணுவதற்கோ, கண்ணை மூடிக் கொண்டு உருப்போட்டு, எது எவ்வாறிருப்பின் நமக்கென்ன, நமக்கு வேலை ஒப்புவிப்பது தானே என்கிற முறையிற் படித்துத் தீர்த்துவிடுவதற்கோ நம் டி. கே. சி. யின் இதயம் ஒரு பொழுதும் இடந்தந்ததில்லை. ஒவ்வொன்றும் விளங்கவேண்டும், விளங்கியதைப் படித்துப் படித்து அனுபவிக்க வேண்டும் என்னும் கொள்கையை ஆதிமுதலே பெற்றிருந்த காரணத்தால் எத்துணையோ பாடப் பகுதிகள் விளங்காமலே இருந்துவிட்ட காரணமாக டி. கே. சி. யின் உள்ளம் படிப்பிற் சோர்வுற்றது. சோர்வுற்ற டி. கே. சி.யின் உள்ளத்திற்கு உற்சாகம் ஊட்டியவை உயர்நிலைப் பள்ளியில் நடைபெறுகிற விளையாட்டுக்களும், பல்வேறு இடங்களிலிருந்து வந்து கல்வி பயிலும் மாணவர் குழாத்தோடு நெருங்கி உறவாடுகிற நட்பும்தான்.

"நான் உயர்நிலைப் பள்ளியில் படிக்கிற பொழுது எனக்குச் சம்பந்தமில்லாத, இந்த நாட்டிலுள்ள யாருக்குமே சம்பந்தமில்லாத பல விஷயங்கள் சொல்லிக் கொடுக்கப்பட்டன. அவை ஒன்று கூட எனக்கு விளங்க வில்லை. மத்திய அமெரிக்காவிலுள்ள மக்களின் வாழ்க்கையும், வட துருவத்தின் சீதோஷ்ண நிலையும், ஆஸ்திரேலியாவிலிருந்து ஏற்றுமதியாகும், ஆட்டு ரோமத்தின் மதிப்பும், அமேஷான் நதியின் நீளமும், ஏசுநாதர் பிறப்பதற்கு முன்பு கிரேக்கர்களின் போர்ச் செயல்களும், அவர்கள் உபயோகித்த படைக்கலங்களும், மத்தியதரைக் கடற் பிரதேசங்களில் வளரும் தாவர வர்க்கங்களும் அவற்றின் பயனும் இன்னும் இவை போன்ற பல விஷயங்களும் சொல்லிக்கொடுக்கப்பட்டன. அதுவும் யாருக்கும் புரியாத ஆங்கில மொழியில் சொல்லிக் கொடுக்கப்பட்டன. பதினைந்து பதினாறு வயதுள்ள நானும், என்னைப் போன்ற இளைஞர்களும் இவைகளை அந்தக் காலத்திற் படித்து அனுபவித்துவிட்டோம் என்று எங்ஙனம் கூறமுடியும்? எனக்கு இப்பொழுது எழுபது வயதாகிறது. எவ்வளவோ அனுபவங்களைப் பெற்றிருக்கிறேன். இன்னமும் நான் உயர்நிலைப் பள்ளியிற் பயின்ற பல விஷயங்கள் எனக்கு விளங்கவில்லை. அப்படி இருக்க என்னுடைய பள்ளி வாழ்க்கையிற் படிப்பின் மூலம் ஆனந்தம் அடைந்தேன் என்று சொல்வது பொருந்துமா? எனக்கு ஆனந்தம் கொடுத்தது நண்பர்களும், விளையாட்டுந்தான்" இப்படி அடிக்கடி தம் படிப்பைப் பற்றி ரசிகமணி சொல்வதுண்டு.

உயர்நிலைப் பள்ளியில் டி. கே சி. கல்வி பயிலும் பொழுது அவர்களுக்கு மிக்க மகிழ்ச்சிதந்த காரியம் ஒன்றுண்டு.

திருச்சி மலைக் கோட்டையில் ஒரு சிறு வீட்டில் பாப்பம்மாள் என்னும் கற்புடை அம்மையார் ஒருவர் வாழ்ந்து வந்தார். அருங்குணவதியாகிய அவ்வம்மையார் தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருவாரூர்ச் சரகத்தில் ஒரு குக்கிராமத்தில் பிறந்து வளர்ந்தவர். தொண்டை மண்டல முதலியார் குலத்தைச் சேர்ந்த அப்புனிதவதி பக்கத்துக் கிராமத்திலுள்ள தம் நெருங்கிய உறவினருக்கு மணஞ் செய்விக்கப்பட்டு அன்பும், அடக்கமும், பண்பும் ஒருருக்கொண்டவராய் வாழ்ந்து வந்தார். ஆனால் பாப்பம்மாளின் அத்தை ஒரு பெருநீலி, பொல்லாத துற்குணம் வாய்ந்த பிசாசு என்றுதான் சொல்லவேண்டும். தன் கணவனோ அப்பாவி. எது நல்லது, எது கெட்டது என்று பகுத்துணர முடியாத, பகுத்துணரவைப்பினும் செயலிற் காட்டத் திராணியற்ற சாது. அத்துடன் முழுச் சோம்பேறி. ஆனால் யாருக்கும் ஒரு கெடுதலும் மனத்தானும் எண்ணியறியாத உத்தமர். மாமனாரோ மானமே உயிரினும் பெரிதென மதித்து வாழும் மாண்புடைச் சீலர். அப்பெரியார் தம் மனைவியின் வாய்த் துடுக்கிற்கும் அட்டூழியத்திற்கும் ஒடுங்கி, எதிர் வார்த்தை பேசாமல் இருக்கின்றவர். பாப்பம்மாளின் பெற்றோர்கள் மிக்கவறுமையில் கிடந்துழலும் எளியவர்கள். அவர்களுக்குத் தன்னாலும் மேற்கொண்டு கவலையும் பொறுப்பும் அதிகமாக வந்து அழுத்தக்கூடாதே என்கிற கவலை பாப்பம்மாளுக்கு உண்டு. இந்நிலையில் மாமியாரின் கொடுமை நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்தது. பாப்பம்மாளைப் பேசுகிற பேச்சும் ஏசுகிற ஏச்சும் காது கொடுத்துக் கேட்க முடியாது. இங்ஙனம் பல்லாற்றானும் கொடுமை பொறுக்க முடியாத பாப்பம்மாள்

தன்னிலையையும், தன் பெற்ரோர்கள் வறுமையில் வாடித் தன்னை ஆதரிக்க முடியாத நிலையையும் எண்ணி எண்ணி வருந்தினாள். தன் கணவனின் நிலையையும் நினைந்து நொந்தாள். கணநேரமேனும் இவ்வீட்டில், மாமியாரோடு இருந்து காலந்தள்ள முடியாது என்னும் முடிவிற்கு வந்த பாப்பம்மாள் தன் கணவனிடம் வேறு இடத்திற்குப்போய் நாம் பிழைத்துக் கொள்ளலாம் என்றும் தன்னுடன் வரும்படியாகவும் கணவனிடம் எவ்வளவோ கெஞ்சிக்கேட்டாள். கணவன் அதற்கு ஒத்து வரவில்லை. கடைசியில் பாப்பம்மாளே தனியாகப் புறப்பட்டு மலைக்கோட்டையில் ஒரு சிறு வீட்டை வாடகைக்கு அமர்த்திப் பள்ளியிற் பயிலும் இளஞ்சிறுர்களுக்குச் சமையல் செய்து போட்டு அதன் மூலம் கிடைக்கும் ஊதியத்தில் தன் வாழ்க்கைச் செலவையும் கழித்துச் சிறிது சிறிதாக மிச்சமும் சேர்த்து வந்தாள்.

பாப்பம்மாளிடம் மாணவர்கள் பலர் சாப்பிட்டுப் படித்து வந்தனர். நம் தமிழ்த் தந்தை ரசிகமணி, டி. கே. சி. யும் அங்குதான் சாப்பிட்டுப் படித்து வந்தார்கள்.

பாப்பம்மாள் குழந்தைகளை மிக்கப் பரிவுடனும், அன்புடனும் தாயினும் சாலச் சிறந்த முறையிற் கவனித்து வந்தாள். மாணவர்களின் விருப்பத்திற்கு ஏற்ற ருசியுள்ள ஆரோக்கியமான உணவைத் தயாரித்து வேளா வேளை கொடுத்து வருவதில்தான் பாப்பம்மாளுக்கு அக்கறை. பணத்தை எப்படியாவது திரட்ட வேண்டும் என்கிற நோக்கம் அறவே பாப்பம்மாளுக்குக் கிடையாது. மாணவர்கள் இருபது பேரும் கவலை இன்றி உண்டு அங்கேயே தங்கி நிம்மதியாகப் படித்து வந்தனர். மாணவர்கள் ஒவ்வொரு

வரும் மாதந்தோறும் சாப்பாட்டிற்குக் கொடுத்த ரூபாய் நான்குதான். பாப்பம்மாள் தினந்தோறும் காலை நான்கு மணிக்கு எழுந்திருந்து வீடு முழுவதும் நன்றாக மெழுகிப் பாத்திரங்களை விளக்கிக் குளித்து விட்டுத் தண்ணீர் எடுத்துச் சமையல் செய்வது வழக்கம். எட்டு மணிக்குள் ளாகச் சாதம், கறி வகைகள் அவ்வளவும் தயாராகிவிடும். உடனே பாப்பம்மாள் தயிரைக் கெட்டியான மோராகக் கடைந்து, வெண்ணையை உருக்கி ஒவ்வொரு நாளும் மணங் கமழும் புது நெய்யையே மாணவர்களுக்கு ஊற்றி வந்தாள். மாணவர்கள் எல்லோருக்கும் சாப்பாடு செய்து விட்டு நண்பகலுக்கு வேண்டிய உணவையும் அன்போடு பள்ளிக்கு அனுப்புவது வழக்கம். பாப்பம்மாள் சொந்தமாக இரண்டு பசுவினை வாங்கி அவற்றையும் அருமையோடு வளர்த்து வந்தாள். விலைக்கு வாங்கி விடுகிற பாலோ, நெய்யோ, மோரோ அவ்வளவு உகந்ததல்ல என்னும் சீரிய குணத் தினால் தன் மீதிப் பணத்தைக் கொண்டு மாடு வாங்கி இவ்வளவு வேலைகளுடன் அவற்றையும் கவனித்து வந்திருக்கிறாள்.

ஒவ்வொரு நாளும் மாலையில் பாப்பம்மாளே நேரிற் கடைக்குச் சென்று, நல்ல, ருசியுள்ள காய்கறிகளை வாங்கி வருவதுண்டு. இரவிற் சமைத்து மாணவர்களுக்கு இலையில் சாதம் கறி வகை பரிமாறிக் கொண்டிருக்கும் பொழுதே வெண்ணையை உருக்கிப் புது நெய்யைக் கொண்டு வந்து ஊற்றுவது பாப்பம்மாளின் செயல். மாணவர்களைத் தேடிப் பெற்றோர்களோ, உறவினர்களோ வந்துவிட்டால் அவர்களையும் தம் உற்றார் உறவினர் போலப் பாவித்து நல்ல உணவளித்து, அருமை பெருமை யோடு அனுப்புவது பாப்பம்மாளின் வழக்கம். மாணவர்

களை இவ்வாறு உண்டியாலும் உபசரிப்பாலும் தாயினுஞ் சாலக் கவனித்துக் கொள்ளும் பாப்பம்மாள் மாணவர் களுக்கு எப்பொழுதேனும் காய்ச்சல் மண்டையிடி வந்து விட்டால், மருந்து, கஷாயம் முதலியவற்றைத் தயாரித்து, பத்திய உணவளித்துப் பாதுகாப்பாள். மாணவர்களில் ஒருவருக்குக் குறிப்பிட்ட காலத்திற் பணம் வராவிடின் உணவிற்கு அவர்களிடம் பணம் கேட்காதது மட்டுமன்றி மாணவருக்குச் சம்பளம் கட்டத் தன் கையிலிருந்து பணம் கொடுத்து உதவுவதோடு, வேண்டும் செலவுகளுக்கும் கொடுத்து உதவும் அருங்குணம் பாப்பம்மாளிடம் உண்டு. மாணவர்கள் விடுமுறையில் ஊருக்குப் போகும்போது இதமான முறையில் ஊரில் நன்கு படிக்க வேண்டு மென்றும், பெற்றோர்களிடம் மிக்க மரியாதையுடனும், பக்தியுடனும் இருக்க வேண்டுமென்றும், ஏழைகளுக்குத் தம்மாலியன்ற உதவி செய்ய வேண்டுமென்றும், யாருடைய இதயத்தையும் புண்படுத்தலாகாதென்றும் சொல்லி அனுப்புவாள். மாணவர்களுடைய வழிச் செலவுக்குப் பணம் தேவையாக இருப்பின் கொடுத்து அனுப்புவாள்.

பாப்பம்மாளின் ஒழுக்கம், மரியாதை, உழைப்பு, அன்பு, நாணயம், பக்தி இவைகளைக் கண்ணுற்ற மக்கள் கோட்டைப் பகுதியிலுள்ள ஆண் பெண், குழந்தைகள் சகலருக்கும் பாப்பம்மாளிடம் மிக்க பக்தியே உண்டாகி விட்டது. எல்லோருக்கும் பாப்பம்மாள் என்றால் ஒரு அதிதேவதை. பாப்பம்மாளின் சொல்லுக்கு ஏகப் பட்ட செல்வாக்கு. பாப்பம்மாளை மக்கள் மிக்க மதிப்போடு வைத்திருந்தது போன்று பாப்பம் மாள் வீட்டில் உண்டு தங்கி இருக்கிற மாணவர் வர்களிடத்திலும் அம்மக்களுக்கு மிக்க மரியாதை உண்டு.

மாணவர்கள் பள்ளிக்குப் போகிற பொழுதும், பள்ளியி லிருந்து வருகிற பொழுதும் தெருத் திண்ணையில் உட்கார்ந் திருப்பவர்கள் எல்லோரும் எழுந்து விடுவார்கள். அப்படி யானல் பாப்பம்மாளை எவ்வளவு உயர்ந்த நிலையில் வைத்து மதித்திருக்கிறார்கள்! மாணவர்கள் ஒவ்வொருவரும் குளித்து, இறை வழிபாடு செய்து அகத்தும் புறத்தும் பரிசுத்தமாக இருந்து பண்பாடு பெறச் செய்வதில் பாப்பம் மாளுக்கு மிக்க ஈடுபாடு. பாப்பம்மாளின் கணவன் அடிக்கடி வந்து ஒரு வாரம், இரண்டு வாரம், இருந்து விட்டுப் போவது வழக்கம். தம் கணவரிடம் மிக்க அன்பு காட்டி, வரவேற்று, உபசரித்துத் தன் னுடனேயே தங்குமாறும் கணவனை வேண்டிக் கொள்வாள். கணவன் மாதக் கணக்கில் மனைவியின் விருந்தருந்திவிட்டுப் போகுங்கால் செலவிற்குப் பணம் பெற்றுப் போவது வழக்கம். தம் கணவரைக்கூட இறை வழிபாடு செய்து நெற்றியில் திருநீறிட்டு ஆசாரத்தோடு இருக்க வற்புறுத்துவது பாப்பம்மாளின் பண்பாடு.

இத்தகைய அருங்குணவதியின் வீட்டிலிருந்து சாப்பிட்டுப் படித்த மாணவர்களில் நம் டி. கே. சி. ஒருவர். டி. கே. சி. அவர்கள் பாப்பம்மாளின் அரிய பெரிய பண்பாட்டைச் சொல்லிச் சொல்லி மகிழ்வார்கள். "நான் திருச்சியிற்கற்ற உண்மையான கல்வி ஒன்றுதான். அதாவது பெண்ணினத்தின் பெருமை. தாய்மாரின் இதயத்தில் இருக்கிற அற்புதமான பரிவும், பண்பாடும் தான் உலகத்தையே அழிந்து போக விடாமற் காப்பாற்றுகிறது என்பதைச் சாப்பாட்டு விடுதி நடத்திய பாப்பம்மாளிடம் நேரில் தெரிந்து அனுபவித் தேன். பாப்பம்மாள் அற்புதமான ஒரு இதிகாச பாத்திரம்.

"தாய்மார்களின் இதயத்திலுள்ள அன்பும், அன்பு செயல் படுகிற காலை அதற்கு வாய்க்கிற உறுதியும் இப் படிப்பட்டவை என்பதைப் பாப்பம்மாளைப் பார்த்துத்தான் தெரிய முடிந்தது. நாட்டிலுள்ள தாய்மார் ஒவ்வொரு வரிடமும் பாப்பம்மாளின் இதயம் போன்ற அன்பும் உறுதியும், நாணயமும், சுறுசுறுப்பும் உள்ள இதயம் செயற்பட வேண்டும். பாப்பம்மாள் தாய்மார்களுக்கு ஒரு எடுத்துக் காட்டு" இப்படியாக ரசிகமணி பாப்பம் மாளைப் பற்றி அடிக்கடி பாராட்டுவார்கள். அவ்வளவு பாராட்டும் பாப்பம்மாளுக்கு ஏற்ற பாராட்டுத்தான்.

ரசிகமணி, டி. கே. சி. திருச்சி தேசீய உயர்நிலைப் பள்ளியிற் படித்துக் கல்லூரிப் படிப்பிற்காகச் சென்னைக் கிறித்துவக் கல்லூரியிற் சேர்ந்து 1905 முதல் படித்து வந் தார். அஞ்ஞான்று கிறித்துவக் கல்லூரியிற் பணியாற்றிய பேராசிரியர்கள் அனைவரும் ஆங்கிலேயர்களே. ஒவ்வொரு ஆசிரியரும் ஆன்றமைந்த கல்வி கேள்வி உடைய பெரியார் ஆவர். சிறந்த புலமையும் தெளிந்த உரை வளமும், நுண் ணுணர்வும் வாய்ந்த அப்புலவர் பெருமக்கள் தத்தம் துறையில் ஐயம் திரிபறக் கற்றறிந்த வல்லுநர் ஆவர். கிறித்துவக் கல்லூரியில் தமக்குப் போதித்த ஆசிரியப் பெருமக்களின் பெருமையை டி. கே. சி. அடிக்கடி எடுத் துச் சொல்வார்கள். அவர்களில் லாய் ஹெண்டர்சன், ஸ்கின்னர் முதலியவர்களின் அறிவின் திறத்தையும், அன்பாய்ப் பாடஞ் சொல்லிக் கொடுக்கும் இயல்பையும் பன்முறை வியந்து பாராட்டியதுண்டு. கிறித்துவக் கல்லூரி யிற் பயின்ற மாணவர்கள் வயதான காளைகள். இருபத் தைந்து வயது முதல் முப்பது வயதுள்ள மாணவர்கள் பலர் பயின்று வந்தனர். அவர்கள் அவ்வளவு பேரையும்

குழந்தைபோலப் பாராட்டிப் பாடம் நடத்தி வந்தவர் ஸ்கின்னர் என்று டி. கே. சி. சொல்வார்கள்.

அக்காலப் பாடங்களில் பல விஷயங்கள் மாணவர்களுக்கு விளங்குவதில்லை. ஷேக்ஸ்பியர் நாடகமும் அப்படித்தான். இவ்வாறு மாணவர்கள் விளங்கமாட்டாது தவிக்கிற நிலை ஸ்கின்னருக்குத் தெளிவாய்த் தெரிந்துவிடும். அது காரணமாக ஸ்கின்னர் அடிக்கடி வருந்துவாரென்றும், தமிழ் நாட்டுக் குழந்தைகளின் இருதயத்தைத் தொடக்கூடிய பாடங்கள் வைக்கவில்லையே என வருந்துவாரென்றும் டி. கே. சி. சொல்வார்கள்.

டி. கே. சி. க்கு ஆங்கிலம் நன்றாக வந்தது; விஞ்ஞானம், தாவர இயல், தேகதத்துவம் முதலிய துறைகளில் டி. கே. சி. க்கு அளவு கடந்த ஆசை. தாவர இயல், தேகதத்துவம் போன்ற விஞ்ஞான நூல்கள் பலவற்றை வாங்கிப் படிப்பது டி. கே. சி. யின் வழக்கம். விஞ்ஞான ஆசிரியர்களிடம் சென்று தம் ஐயங்களைத் தெரிவித்துத் தக்க விடைகளைப் பெற்றுத் தெளிவுறுவதிலும் டி. கே. சி. கண்ணும் கருத்துமாய் இருப்பார்கள். நூல்களிற் சொல்லி உள்ள உண்மையைப் பொருள்களிடம் கண்டு நேரடி அனுபவத்தின்மூலம் ஆனந்தம் அடைவதிலும் டி. கே. சி. க்கு அளவற்ற அவாவுண்டு. டி. கே. சி. யவர்கள் பல பல துறைகளைக் கொண்ட விஞ்ஞான நூல்கள் பல கற்றுத் தெளிந்தவர்கள். விஞ்ஞானிகள் பலரோடும் கலந்து தம் கருத்துக்களைத் தெரிவித்து அவர்கள் கூறும் கருத்துக்களை வாங்கியும் அனுபவிப்பார்கள். டி. கே. சி. தம்முடைய விஞ்ஞான அறிவையும் அனுபவ வாயிலாக அப்பொழுதைக்கப்பொழுது கிடைக்கும் விஞ்ஞானக் கருத்துக்களையும் சேர்த்து அனுபவித்து

வந்தார்கள். விஞ்ஞானிகளின் சொற்பொழிவைக் கேட்பதிலும், அவர்களுடைய கட்டுரைகள், நூல்கள் முதலியவற்றைப் படித்து அனுபவிப்பதிலும் அளவற்ற ஆசை கொண்டவர்கள். டி. கே. சி. யின் விஞ்ஞான வேட்கையும், அனுபவமும் அவர்களுடைய வாழ்க்கையில் வளர்ச்சியுற்று அவர்களுக்கு எத்துணையோ சிறந்த அனுபவத்தைக் கொடுத்திருக்கிறது.

தமிழிலும், தமிழ்க் கவிகளிடத்திலும் டி. கே. சி. க்கு உண்டாகிய மோகம் இவ்வளவென்று அறுதியிட்டுச் சொல்ல முடியாது. அது அவர்களுடைய கல்லூரிப் படிப்பிற்கு முன்பிருந்தே அவர்களிடம் ஏற்பட்டுவிட்டது. திருக்குறள், பெரிய புராணம், காஞ்சிப்புராணம், திருவிளையாடற்புராணம், கலிங்கத்துப் பரணி, சிறு பிரபந்தங்கள், தனிப் பாடல்கள் முதலியவற்றில் டி. கே. சி. க்கு நல்ல அனுபவம் இருந்தது. தாம் படித்து அனுபவித்த கவிகளை நண்பர்களிடமும், சக மாணவர்களிடமும் நன்முக விளக்கிப் பாட்டைச் சுவைத்துச் சுவைத்துப் பாடுவார்கள். டி. கே. சி. விளக்குகிற முறையிலும், பாட்டின் கருத்தை விளக்கிய பின் பாடலைப் பாடி அனுபவிக்கிற பாணியிலும் கேட்பவர்கள் மனத்திற் பாடலும் கருத்தும் பசுமரத் தாணிபோற் பதிந்துவிடும். கேட்பவர் மனத்தில் ரீங்காரம் செய்து கொண்டிருக்கும் பாடல். அது மட்டுமல்ல, டி. கே. சி. கிறித்துவக் கல்லூரியிற் பயிலுங் காலத்திற்கு முன்பிருந்தே பல பாடல்களைச் சுயமாக எழுதி வந்திருக்கிருர்கள். டி. கே. சி. இயற்றிய பாடல் ஒவ்வொன்றும் கருத்தழகும், சொல்லழகும் பொருந்தி ஓசை இன்பம் உடைத்தாய்ப் பூர்வமான தமிழ்ப் பண்பும், கவிப் பண்பும் சேர்ந்து பொலிவோடு மிளிரும் அற்புதக் கவிக

ளாகும். வெண்பா, விருத்தம், கட்டளைக் கலித்துறை, தாழிசை முதலிய பல பாவினங்களை நவரசமும் ததும்பும் வண்ணம் டி. கே. சி. இயற்றியுள்ளார்கள். அவையன்றி யமகம், திரிபு முதலிய சாதுரியக் கவிகள் இயற்றுவதிலும் டி. கே. சி. நிகரற்றவர்கள். டி. கே. சி. இயற்றிய பாடல்களில் பூர்வமான கவி மரபும், கட்டுக் கோப்பும், கருத்தாழமும், சொல்லழகும், இருப்பதோடு தமிழ் மொழியின் கம்பீர நடையும், விஷயத்திற்குத் தெளிவும், பிரகாசமும் உண்டாக அழுத்தம் கொடுத்து விளக்குகிற வனப்பும் பாடிப் பாடி அனுபவிக்க வேண்டியவை.

டி. கே. சி. கிறித்துவக் கல்லூரியிற் பயின்று வரும் நாளில், மதுரைத் தமிழ்ச் சங்கத் தாபகரும், வள்ளலும், தமிழறிஞருமாகிய பாலவனத்தம் ஜமீன்தார் ஸ்ரீமான் பாண்டித்துரைத் தேவர் அவர்களுக்குக் கல்லூரித் தமிழ்க் கழகத்தின் சார்பில் ஒரு வரவேற்புக் கொடுக்கப்பட்டது. கல்லூரியின் சொற்பொழிவு அரங்க மண்டபத்தில் ஆயிரக் கணக்கில் தாய்மார்களும், பெரியவர்களும், திரண்டு வீற்றிருக்கிறார்கள். கூட்டத்தில் உயர்ந்த வழக்கறிஞர்கள், நீதிபதிகள், பேராசிரியர்கள், தலைவர்கள், அரசாங்கத்தின் உயர்தர அதிகாரிகள், பொதுமக்களிற் சிறந்த கல்வி கேள்வி யுடையவர்கள் முதலிய பலதிறப்பட்ட பெரியார்கள் குழுமி இருந்தனர்.

கல்லூரி மாணவர்கள் மண்டபத்துள் இடமின்மையால் தாழ்வாரத்திலும், வாசலிலும் நூற்றுக்கணக்கில் நிற்கிறார்கள். இவ்வளவு பெரிய மாபெரும் அவையில், கற்றோர் பலர் குழுமிய அவையில் தமிழ்க் கழகத்தின் செயலாளராய்ப் பணியாற்றிய நம் டி. கே. சி. கொஞ்சமேனும் தயங்காமல் இன்முகத்தோடு மேடைக்கு வந்து தலைவரை

வரவேற்று அரிய சொற்பொழிவு ஒன்று நிகழ்த்திஞர்கள். டி. கே. சி. யின் சொற்பொழிவிலுள்ள நிதானமும், கட்டுக் கோப்பும், தெளிவும், அழுத்தமும், இடை இடையே சபை யைக் குலுங்க வைத்து நகைச்சுவையில் ஆழ்த்தும் திறமும் சபையினரை மெய் மறக்கச் செய்துவிட்டது. ஸ்ரீமான் பாண்டித்துரைத் தேவர் அவர்களும், கூட்டத்திற்கு வந்திருந்த வெள்ளேகால், வி. பி. சுப்பிரமணிய முதலியார், டாக்டர் உ. வே. சாமிநாதையர் போன்றவர்களும், டி. கே. சி. யின் தமிழறிவையும், கூரிய ஞானத்தையும், பேச்சு வன்மையையும் வியந்து வியந்து பாராட்டிஞர்கள். கல்லூரி யின் தலைவருக்கு அன்று ஏற்பட்ட ஆனந்தத்திற்கு அளவே இல்லை. கல்லூரியில் இருந்த ஆசிரியர் எல்லோரும் டி. கே. சி. பேசிய அருமையான பேச்சைப்பற்றிப் பலநாள் பேசிக் கொண்டிருந்தார்கள். இத்துணை கொள்ளேயில் மாணவர்கள் சும்மா இருப்பார்களா ? டி. கே. சி.யைக் குருவாக வைத்து ஒவ்வொரு நாளும்; டி. கே. சி. யிடம் தமிழ்ப் பாடல் கேட்டு அனுபவிப்பது, பாட சம்பந்த மான ஐயங்களேக் கேட்டுத் தெளிவான விடை பெறுவது இப்படிப் பலவிதத்திலும் டி கே. சி. யை மதித்துப் பாராட்டி வந்தனர் மாணவர்கள். டி. கே. சி. கிறித்துவக் கல் லூரியிற் பேசிய பேச்சுக் கூட்டத்திற்கு வந்திருந்த பெரியார் களின் மனத்தைக் கொள்ளே கொண்டுவிட்டது. "இப்படியும் எளிமையாகத் தெளிவாகப் பெரிய உண்மைகளேத் தமிழில் எடுத்துப் பேச முடிகிறதே" என்று பல பெரிய உத்தியோ கஸ்தர்கள் வியந்தார்கள். மற்றும் பலர் டி. கே. சி. யினிடத் தில்வந்து, "உங்களுடைய பேச்சைக் கேட்ட பின்புதான் எங்களுடைய படிப்பின் தரம் எங்களுக்குத் தெரிகிறது" என்று சொன்ஞர்களாம்.

டி. கே. சி. யுடன் கல்லூரியிற் படித்த மாணவர்கள் பலர். அவர்களில் டி. கே. சி. யுடன் பள்ளித் தோழர்களாய் இருந்து நெருங்கி உறவாடியவர்களும், நெடுங்காலம் அருமை நண்பர்களாய் இருந்து ஒரு குடும்பத்தார் போன்றே ஒட்டினவர்களும் பலர் உண்டு. அவர்களில் சிலருடைய பெயரைப் பாருங்கள்:

டாக்டர் சர் ஏ. ராமசாமி முதலியார் இந்திய அரசாங்கத்தின் பல உயர்ந்த பதவிகள் வகித்தவர். டாக்டர் ஏ. லட்சுமணசுவாமி முதலியார் (சென்னை சர்வகலாசாலைத் துணை வேந்தர்) டாக்டர் ஜான் மத்தாய், (சுதந்தர இந்தியாவின் நிதி மந்திரியாக இருந்தவர்). கே. சந்திரசேகரன், (சுப்ரீம் கோர்ட்டின் தலைமை நீதிபதியாக இருந்தவர்). ஏ. ஸி. பால் நாடார், திவான் பகதூர் ஆவுடையப்ப பிள்ளை (திருநெல்வேலியில் பிரபல வழக்கறிஞராகவும், மாவட்ட அரசாங்க வழக்கறிஞராகவும் இருந்தவர்). கடையம் சங்கர ராயர், (பிரபல வழக்கறிஞராய் இருந்து இப்பொழுது குற்றாலத்தில் வசித்து வருகிறார்கள்). டாக்டர் நூரம்ப நாயுடு.

டி. கே. சி. கல்லூரியிற் படிக்குங்கால் மிகச் சிக்கனமும் செட்டும் உடையவராக இருந்தார்கள். அனாவசியமான டாம்பீகச் செலவோ, ஊதாரித்தனமோ எள்ளளவும் இல்லாதிருந்தார்கள். தம்முடைய வேட்டி, சட்டை முதலிய துணிமணிகளைச் சலவைக்குப் போடாமல், துவைத்துக் காயப்போட்டுத் தாமே மடித்து எப்பொழுதும் சுத்தமாக உபயோகித்துத் தம் தோழர்களுக்கும் வழிகாட்டியவர்கள், நம் டி. கே. சி. பாட சம்பந்தமாக வகுப்பிற்குப் போகிற நேரம் தவிரத் தமிழ்க் கவிகளைப் படித்து அநுபவிப்பதையும், புதுப் புது விஞ்

ஞான நூல்களை வாங்கிப்படிப்பதிலும், தாம் கற்ற பொருள் களை மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் எளிதில் பொருள் விளங்குமாறு எடுத்துச் சொல்வதிலுமே காலத்தைக் கழித்து வந்தார்கள் டி. கே. சி.

இளமை முதலே அடக்கமும், மரியாதையும் நிறைந்த டி. கே. சி. கல்லூரி மாணவர்கள் எல்லோருடைய அன்பையும் ஆரம்ப முதலே பெற்றிருந்தார்கள். விவகாரம் உள்ள இடம், பூசல் உள்ள இடம் இவைகளில் டி. கே. சி. யைப் பார்க்கவும் முடியாது, அவர்கள் குரலைக் கேட்கவும் முடியாது. அவ்வளவு ஒதுங்கி, தாம் உண்டு, தம் படிப்பு உண்டு என்று வாழ்ந்தவர்கள்.

டி. கே. சி. சென்னையிற் கல்வி பயின்று வருங் காலத்திலேயே கவிஞர் சுப்பிரமணிய பாரதியாருடன் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. அடிக்கடி பாரதியார், டி. கே. சி. தங்கி இருக்கும் இடத்திற்கு வருவதுண்டு. வந்து தாம் பாடிய பாடல்களை டி.கே.சி.யிடம் பாடிக் காட்டுவதுண்டு. பாடல்களை அற்புதமாக அனுபவித்துத் திளைக்கிற நம் டி. கே. சி. கவி பாரதியை, பலவாறுகப் பாராட்டியும், நண்பர் பலருக்கு அறிமுகம் செய்து வைத்தும், அன்பர் பலரிடம் பாரதியின் பாடல்களை உணர்ச்சி பாவத்தோடு பாடிக் காட்டியும் பாரதியின் பெருமையைப் பரப்பி வந்தார்கள். கவி பாரதியார், தாம் பாடிய பாடல்களை டி. கே. சி. யிடம் பாடிக் காட்டுகிற காலை, சில பாடல்களில் ஏதாவது புரியாத, ஒட்டாத, தாளத்தோடு முரண்படுகிற இடங்கள் வருவதுண்டு. அவ்விடங்களைப் பாரதியாருக்கு நம் டி. கே. சி. சுட்டிக் காட்டி, இவ்விடத்தில் இப்படி இருந்தால் நல்லதல்லவா என்று தெரிவிப்பார்கள். கவி பாரதியார் அவர்கள் டி. கே. சி. யின் கவிதாஞானத்தையும்,

அதில் டி.கே.சி. க்கு இருக்கிற அதிநுட்பத்தையும் வியந்து, டி. கே. சி. சொல்லிய திருத்தமான முறையிற் பாடிப் பார்ப்பதுண்டு. பாடி அனுபவித்துத் தம் மனத்திற்கு டி. கே. சி. சொல்லிய திருத்தம் சரியென்று பட்டவுடன் துள்ளிக் குதித்து ஆனந்தம் அடைவதும் உண்டு.

இங்ஙனம் டி. கே. சி. சொல்லிய திருத்தங்களும், அவற்றைப் பாரதியார் ஏற்றுக்கொண்டதும் ஒரு சில பாடல்கள்தான். பாரதியின்பெரும்பாலான பாடல்களைப் பாரதியாரிடமே நேரில்கேட்கும் வாய்ப்புப் பின்னர் டி. கே. சி. க்குக் கிடைக்கவில்லை.

டி. கே. சி. கல்லூரியில் பயின்று வருங்கால் தம் பாடங்களிலிருந்தும், ஆசிரியர்களின் விளக்கங்களிலிருந்தும் அருமையான குறிப்புகள் எடுத்து வைப்பது வழக்கம். டி கே. சி. யின் குறிப்புக்களை உடன் பயிலும் மாணவர் குழாம் போட்டியிட்டு வாங்கிப் படிப்பார்கள். வேறு கல்லூரி மாணவர்களும் டி. கே. சி. யின் குறிப்புகளுக்கு நகல் எடுத்துப் பரீட்சையில் வெற்றி பெறுவார்கள். கல்லூரி ஆசிரியர்களே டி. கே. சி.யின் குறிப்புக்களைப்பார்த்து வியப்புறுவார்கள் எனில் அதன் பெருமையை என்னென்று சொல்வது? டி. கே. சி. விடுமுறையை ஒட்டித் தம் ஊருக்கு வந்த காலை டி. கே. சி. யின் நண்பர்கள், நண்பர்களுக்கு வேண்டியவர்கள், சுற்றத்தார்கள், சுற்றத்தாரின் நண்பர்கள் இவர்களில் யாரேனும் வேறு கல்லூரிகளில் பயில்வதாயின், டி. கே. சி.யிடம் வந்து டி. கே. சி. எழுதிய குறிப்புக்களுக்கு நகல் எடுத்துக்கொண்டு போய்ப் படிப்பார்கள். எவ்வளவு சிக்கலான, ஆழமான கருத்துக்களையும் எளிமையாக, தெளிவாக, இரண்டு சொற்றொடர்களில் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் வனப்பு டி. கே. சி.

யிடம் இளமை முதலே உண்டென்பதை அவர்கள் எழுதிய பாடக் குறிப்பை மாணவர்கள் பலர் நகல் எடுத்துக் கற்ற தன் மூலம் அறியலாம். இவ்வளவு எளிய முறையில் பாடங்களை விளங்கிக் கொண்டாலும், பிறருக்கு எடுத்துச் சொன்னாலும், டி. கே. சி.யின் மனம் பாடப் புத்தகங்களில் அவ்வளவிற்குப் பற்று வைக்காமல் விஞ்ஞான நூல்களைக் கற்பதிலும், கவிதைகளைப் படித்து அநுபவிப்பதிலும், பிற ருக்கும் எடுத்துரைத்து அனுபவிக்கச் செய்வதிலுமே டி. கே. சி. க்கு முழு நாட்டம். அத்துடன் தாவரங்கள், பிராணிகள், இயற்கைக் காட்சிகள், மனிதர்கள், அவர் களின் குணாதிசயங்கள், யந்திரங்கள், அவற்றின் நுட்பங்கள் இவற்றைக் கூர்ந்து கவனிப்பதிலும் உணர்ந்து அனுபவிப் பதிலும் டி. கே. சி.க்கு என்றும் தணியாதவேட்கை உண்டு.

டி. கே. சி. யுடன் படித்த கல்லூரி நண்பர் ஒருவர் ஆந் திர நாட்டைச் சேர்ந்த ஜமீன்தாரின் குமாரர். அவர் தலை முடி வளர்த்து அழகாகக் கொண்டை போட்டுக் கொள் வார். இரண்டு கைகளிலும் கனமான தங்கக் காப்புக் களை அணிந்துகொள்வார். கழுத்தில் ஒரு சரட்டைச் சுற்றி அதில் ஒரு தங்க உருண்டையைப் போட்டுக் கொள்வார். ஜமீன்தாருக்கு நெற்றியில் அகலமான பொட்டு வைத்துக் கொள்வதிலும், வேட்டையாடுவதிலும் அளவிறந்த ஆசை. அந்த ஜமீன்தார் மாணவர் ஒரு முறை வேட்டைக்கு மலை யில் போகிற காலை, ஒரு புலி வழியில் நின்றுகொண்டிருந் ததாம். நல்ல வேளையாக அந்தப் புலி எதிர்ப்புறம் பார்த்து நின்றுகொண்டிருந்ததாம். பூனைபோன்று மெது வாக நடந்து சென்று புலியின் முதுகில் ஒரு தட்டுத் தட்டினாராம் ஜமீன்தார். அவ்வளவுதான் புலி கலைந்து வெருண்டு ஓடிவிட்டதாம். ஜமீன்தார் மாணவரின் அஞ்

சாமையும், ஊக்கமும் எத்தகையது என்று பாருங்கள். இனி, ஜமீன்தார் மாணவர் விடுமுறைக்குத் தம் ஊருக்குப் போய் (ஆந்திர நாட்டில்) சில அற்புதங்களை நடத்திக் காட்டுவதுண்டு. அவற்றில் ஒன்று. கோதாவரி, கிருஷ்ணா நதிகளில் முதலைகள் ஏராளம். முதலைகளை வேட்டையாடுவதில் ஜமீன்தாருக்கு மிக்க விருப்பம். பாலத்திலிருந்து ஜமீன்தார் நதியில் குதிப்பார். முங்கி முக்குளித்து முதலையின் அடிவயிற்றைத் தம் இடுப்பில் சொருகி இருக்கும் பிச்சுவாளைக் கொண்டு கிழித்தெறிந்துவிடுவார். ஜமீன்தார் மாணவரின் வீர தீரச் செயல்களில் நம் டி. கே. சி. க்கு ஒரே ஈடுபாடு. அத்துடன் மற்றைய மாணவர்கள் ஜமீன்தாரின் நடை உடை பாவனைகளைக் கருதி அவ்வளவாக நெருங்குவதில்லை. ஆனால் நம் டி. கே. சி.யோ நடை உடை பாவனைகளை ஒதுக்கிவிட்டு ஜமீன்தாரின் கள்ளங்கபடமற்ற இதயத்தோடும், வீர உணர்ச்சியோடும் தோய்ந்து அடிக்கடி பாராட்டி அவ்ருடன் நன்கு பழகி வந்தார்கள்.

கலைச்செல்வன் (பேட்சலர் ஆப் ஆர்ட்ஸ்) என்னும் பட்டத்தைக் கல்லூரியிற் பெற்று வழக்கறிஞர் (B. L.) படிப்பிற்காகச் சென்னை சட்டக் கல்லூரியில் டி. கே. சி. பயின்று பி. எல். தேர்வில் வெற்றி பெற்றார்கள்.

# வழக்கறிஞர் !

டி. கே சி. க்கு கி. பி. 1908-ம் ஆண்டு மே மாதம் சிறப்பாகத் திருமணம் நடந்தது. டி. கே. சி.யின் வாழ்க்கைத் துணைவியாய்வாய்த்த அம்மையார், டி. கே. சி.யின் தாய் மாமனாராகிய ஸ்ரீ வில்லிபுத்தூர் தீத்தாரப்ப முதலியாரின் புதல்வி பிச்சம்மாள் அண்ணி. பிச்சம்மாள் அண்ணி அருங்குணமும், பெருஞ்சிறப்பும் வாய்ந்த உத்தமப் பெண் மணியாவர். பிச்சம்மாள் அண்ணியவர்கள் தம் கணவரைத் தெய்வமாகப் பாவித்து அவர்கள்மீது பக்தி கொண்டு, கணவரையும், குடும்பத்தையும் பெருமைப்படுத்தியவர்கள். டி. கே. சி.யின் இதயமும், பண்பாடும் எத்தகைய அன்பும், அடக்கமும் நிறைந்த பேருள்ளமோ அத்தகைய பேருள்ளம் பிச்சம்மாள் அண்ணியிடமும் வாய்த்தது பெருஞ் சிறப்பாகும். வந்த விருந்ினரை வரவேற்று உபசரிக்கும் தாராள குணமும், ஏழை மக்களிடத்தும் பணியாட்களிடத்தும் அன்பு செலுத்தி ஆதரிக்கும் அருஞ் சிறப்பும், உற்றார் உறவினர்க்கு உதவிப் பாராட்டுகிற பண்பும், கணவரையும், குடும்பத்தையும் கண்ணும் கருத்துமாகப் பேணிப் பாதுகாக்கும் சீலமும் சிறப்பும் ஒருருவாய் அமைந்த கற்புக்கரசி பிச்சம்மாள் அண்ணி.

பிச்சம்மாள் அண்ணி பிறந்த குடும்பம் பெரிய குடும்பம். பொருட் செல்வமும், கல்விச் செல்வமும் பூத்துக் குலுங்கியவை போன்று அருட் செல்வமாம் மக்கட் செல்வமும், அன்பு, அடக்கம், பொறை, விருந்தோம்பல், இன்

சொல், முதலிய பண்புச் செல்வமும் மலிந்த பெருங் குடும்பமாகும்.

பிச்சம்மாள் அண்ணி என்னும் கற்புக்கரசியோடு டி. கே. சி. இல்லறம் என்னும் நல்லறத்தை இனிது நடாத்தி வருங்காலை, திருநெல்வேலியில், வண்ணார்ப் பேட்டை என்னும் பகுதியிலிருந்து வழக்கறிஞராகப்பதிவு செய்து வாழ்ந்து வந்தனர்.

தமிழ்க் கவிகளிலும், தமிழ்க் கலைகளிலும் திளைப் புண்டு சதா ஆனந்தத்தை அனுபவித்தும், அனுபவித்த ஆனந்தத்தை அன்பர்களிடம் வாரி வாரி வழங்கியும் வாழ் கின்ற டி. கே. சி.யின் இதயம், வழக்குகளை எடுத்து வாதாடு வதிலும் எங்ஙனம் பற்றுக்கொள்ளும்?

வழக்கறிஞராகப் பதிவு செய்ததும், பதிவு செய்திருப் பதைப் பலகையில் எழுதித் தொங்கவிட்டதும்தான் மிச்சம். வழக்கறிஞர் தொழிலில் டி. கே. சி.க்குப் பற்று தலும் இல்லை. வேலையும் இல்லை என்று சொல்லிவிடலாம். கி. பி. 1915 முதல் 1918 வரை வழக்கறிஞர் என்னும் பலகை டி. கே. சி.யின் இல்லத்தில் தொங்கியது. பிறகு எடுத்து உள்ளே வைக்கப்பட்டது.

டி. கே. சி.க்குத் தமிழ்க் கவிகளிடத்து ஏற்பட்ட மோகம் வெறியாகிப் பக்தியாக மலர்ந்துவிட்டது.

# ஆங்கில மோகமும் தமிழ்ப் பண்பாடும்

டி. கே. சி. திருநெல்வேலியிலிருந்த காலம் 1915 முதல் 1927 முடிய. இந்தக் காலம் அதாவது இற்றைக்கு நாற்பது ஆண்டுகட்கு முன் தமிழ்நாட்டில் ஆங்கில மோகம் தலைவிரித்தாடியது. தமிழிற் பேச வராது, தமிழில் எழுத வராது என்கிற பரிதாப நிலைக்குப் படித்தவர்களை ஆக்கிவிட்ட காலம். அதுமட்டும் அன்றித் தமிழில் என்ன இருக்கிறது, எல்லாம் ஆங்கிலத்தில்தான் செழிப்பாக நவ நவமாக இருக்கின்றன என்று கண்ணை மூடிக்கொண்டு சொல்லியும்; மனப்பூர்வமாக நம்பியும் வந்த காலம். தமிழும், தமிழ்ப் பண்பாடும் அங்ஙனம் அக்காலப் படிப்பி லிருந்து அறவே ஒதுக்கி வைக்கப்பட்டுக் கேவலமாகத் தூற்றப்பட்ட வேளையில் அதே படித்த குழாத்திடைப் படித்து வளர்ந்த நம் டி. கே. சி. தமிழில் எல்லாம் இருக் கிறது, எதையும் தமிழிற் சொல்ல முடியும், தமிழில்தான் எளிமையாகவும், தெளிவாகவும் சொல்ல முடியும், அப்படி எல்லாம் பல உண்மைகளைத் தொன்மையிலிருந்தே இன்று வரை தமிழ் சொல்லி வந்திருக்கிறது என்பதை அழுத் தம் திருத்தமாக எடுத்துச் சொல்லி விளக்கி வந்தார்கள்.

இவ்வளவு தூரம் ஆங்கில மோகத்தில் நம்முடைய படிப்பாளிகள் சிக்கித் தடுமாறி உழன்ற போதிலும், நாணயமும் கண்ணியமும் மட்டும் அக்காலத்தில் இருந்தன. அதாவது தமிழைப் படிக்காமல், தமிழ்ப் பண்பில் தோயா மல், "தமிழில் என்ன இருக்கிறது" என்று பலர் சொல்லி வந்தது உண்மையாயினும், தமிழின் பெருமையை, தமிழ்ப்

பண்பின் உயர்வை விளக்கிக் காட்டியவுடன், அடடா, இத்தகைய மொழியையும், பண்பாட்டையுமா நாம் உதாசீனப் படுத்திவிட்டோம் என்று வருந்தித், தமிழை ஆசையோடு படிக்க விரும்பினார்கள். தமிழ்ப்பண்பை ஆத்திரத்தோடு பேண ஆரம்பித்தார்கள்; அவ்வளவு பக்குவமான இதயம் படைத்தவர்கள் அந்த நாளில் அதிகம் இருந்தார்கள்.

பழைய காலத்தில் அதாவது நாற்பது ஐம்பது வருடங்களுக்கு முன் ஆங்கிலப் படிப்பு இவ்வளவு அதிகமாக நம்முடைய நாட்டில் இல்லை. பட்டிதோறும், சிற்றூர் தோறும் ஆங்கிலப் பள்ளிகள் நிறுவப்பெறாத காலம் அது. ஆகவே கிராமங்கள் பூர்வீகமான பண்பை விடாமற் காத்துவர முடிந்தது. ஒவ்வொரு ஊரிலும் சாவடி ஒன்றிருக்கும். அதில் கம்பராமாயணம் திருவிளையாடற் புராணம் முதலிய தமிழ் நூலை மாதக்கணக்கில் மக்களுக்கு எடுத்துச் சொல்லிப் பௌராணிகர் விளக்குவார். கவிகளை இசையோடும், தாளக் கட்டோடும் பாடி, கவிகளுக்குரிய பொருளைக் கேட்போர் உள்ளத்தில் பதியுமாறு விளக்குவார். இனி, ஆரம்பப் பள்ளிகள் தான் அந்தக் காலத்தில் அதிகம். குழந்தைகள் கும்மி, கோலாட்டம் முதலிய கலைகளைப் பயின்று வந்தார்கள். மந்தை நாடகம் என்று ஊர்தோறும் நாடகம் நடைபெறுவதும் உண்டு. இப்படியாக இசையும், கூத்தும், கவிப்பாங்கும் தமிழ்நாட்டில் அழிந்து போகாவண்ணம் கிராமங்கள் தோறும் ஆங்கிலப் படிப்பிற்கு இரையாகாத மக்கள் காப்பாற்றி வந்தனர்.

ஆங்கில நாகரிகமும், ஊதாரித்தனமும் நாற்பது ஐம்பது ஆண்டுகட்கு முன்பு படித்தவர்களிடம்தான் இருந்ததே ஒழிய கிராமப் புறங்களில் அப்பொழுது அறவே இல்லை. ஆங்கில உடைகள் ஆங்கில நாட்டுப்

பழக்க வழக்கங்கள் அவ்வளவும் இருபது வருடங்களுக்குள்ளாகத்தான் கிராமங்களை ஊடுருவிப் பூர்வமான பண்பினை அழித்துச் சீரழித்துவிட்டன. ஆங்கிலப் படிப்பின் நிழலோடு மறைந்து சென்ற ஆங்கில மோஸ்தர் என்னும் பேய் நம் நாட்டுக் கிராமங்கள் தோறும் வாடாமல் வளர்ந்த நம் பண்பாடாகிய கற்பகச் சோலையை அழித்து ஒழித்துவிட்டதைப் போன்ற அநியாயம் சகிக்க முடியாது.

நாற்பது வருடங்களுக்கு முன்பு தமிழ் நாட்டில் ஆங்கிலம் படித்தவர்கள் பலர் ஆங்கில மோகத்தில் உழன்று கூத்தாடிய காட்சியும், கிராமங்கள் தோறும் லட்சோப லட்சம் மக்கள் தமிழ்ப் பண்பாட்டை அருமையாக வளர்த்து வந்த காட்சியும் ஒரு சேர இருந்தன.

அதே நேரத்தில் ஆங்கிலம் படித்தவர்கள்தான் உயர்ந்தவர்கள் என்றும், ஆங்கிலத்தில் தான் உண்மையை உணர முடியுமென்றும் போலி மனப்பிராந்தி ஒன்றுபடித்தவர்களிடை இருந்தது. ஆங்கில அரசாட்சியின் காரணமாகச் சமுதாயத்தின் மேல்தட்டில் ஆங்கிலம் படித்தவர்கள் வீற்றிருந்த காரணமாக, ஆங்கிலத்தால் அல்லவா சுகமாய், உயர்வாய் இவர்கள் வாழ்கிறார்கள் என்ற எண்ணம் கிராம மக்களிடம் நிலவி வந்தது.

குறிப்பிட்ட இரண்டு வகை எண்ணப் போராட்டங்களின் விளைவாக, கிராமங்களில் அடைக்கலம் பெற்றிருந்த அதிசயமான தமிழ்ப் பண்பாடும், தமிழ்க் கவிகளும், படையெடுத்துவரும் ஆங்கில மோகத்திற்கு இரையாகவும், இரையாக்கவும் தயாராய் இருந்தன.

ஆங்கில மோகம் சிறிது சிறிதாகத் தமிழ் மொழியையும், தமிழ்ப் பண்பாட்டையும் அழித்து நசித்து வந்ததை

நாற்பது ஆண்டுச் சரித்திரத்திலும் தெளிவாய்ப் பார்க்கலாம். ஆங்கில மோகத்தின் மோகவெறியை அடக்கி ஒடுக்குவதற்கும், ஆங்கில மோஸ்தரில் மயங்கிப் பயந்து கிடக்கும் லட்சோப லட்சம் மக்களைத் தட்டி எழுப்பி அவர்களுடைய பெருமையை அவர்களுக்கு உணர்த்தி அவர்களைத் திடப்படுத்துவதற்கும் தகுதியான ஒரு மகனை நினைந்து தமிழன்னை தவங்கிடந்தாள்.

அந்த வேளையில்

"தமிழர்களாகிய நாம் பாக்கியசாலிகள்."

"ஆயிரம் வருஷத்திற்கு முன்னுள்ள மகாகவி ஒருவரின் இதயத்தை அறியக் கொடுத்து வைத்திருக்கிறது நமக்கு."

"ஆயிரம் வருஷத்திற்கு முன்னிருந்த ஆங்கில நூல் எதையும் தற்காலத்து ஆங்கிலேயர் வாசிக்க முடியாது. அப்படியேதான் இத்தாலியர் லத்தீன் பாஷையைத் தாய் பாஷையாகக் கருதி வாசிக்க முடியாது. கிரேக்கர்களுக்கும் இதே சங்கடந்தான்."

எனவும்.

"பாடலைப் பாடவேண்டுமே ஒழிய வசனத்தைப் போல வாசிக்கக் கூடாது. நாட்டியத்துக்கும், சாதாரண நடைக்கும் எவ்வளவு வித்தியாசமோ அவ்வளவு வித்தியாசம் பாடலுக்கும் வசனத்துக்கும்."

"தமிழ்ப்பாடல்களுடைய அமைப்பையும் அழகையும் அனுபவிக்க வேண்டுமானால் பாடவேண்டும். எந்த ராகத்தைக் கொண்டாவது பாடவேண்டும். இந்த விஷயத்தில் ஆங்கில ஹோதா உத்தியோக ஹோதா முதலியவை வந்து குறுக்கிட்டு நிற்கக்கூடாது."

"தமிழர்கள் நாடகத்தில் மூங்கி முழுகினவர்களாகத் தெரிகிறது. சாமான்யமாக இப்போது வழங்கி வருகிற கோவைப் பிரபந்தங்களைப் பார்த்தால், எல்லாச் செய்யுள் களும் நாடகத் துறைகளாகவே இருக்கும். கலம்பகத் தைப் பார்த்தாலும், அநேகமாக நாடகச் செய்யுள்கள் தான். அவ்வளவு ஆசை, நாடகத்தில் நம்மவருக்கு."

* * *

உண்மையான கவி ஒன்று பாடப்படுமானால், கவிஞன் செய்த புண்ணியம் என்று மாத்திரம் சொல்லக்கூடாது. அந்தப் பாஷையும் பாஷைக்குரிய மக்களுமே சேர்ந்து செய்த புண்ணியம் என்று சொல்ல வேண்டும்.

மனிதனுக்குக் கடவுள் எத்தனையோ சக்திகளைக் கொடுத்திருக்கிறார். விஷயத்தைத் தெரியப்படுத்த பாஷை யைக் கொடுத்திருக்கிறார். ஆனால் உணர்ச்சி பாவங்களை எடுத்துச் சொல்ல உதவுவதில்லை. எடுத்துச் சொன்ன போதிலும் இதயத்தில் நிறுத்துவதில்லை. பதியவைப்ப தில்லை. சங்கீதம் அதைச் சாதித்து விடுகிறது.

* * *

கோபாலகிருஷ்ண பாரதியாரின் பாடல்களை ஜனங்கள் எல்லோரும் நன்றாய் அனுபவித்தார்கள், கேட்டு உருகி னார்கள். முத்துத் தாண்டவர் கீர்த்தனைகள் இன்னும் பழமையான பாடல்கள், மிக அருமையான சாகித்தியம். அற்புதமான சங்கீதம். எப்படியோ, இந்த அருமையான, பக்தி மயமான பாடல்கள் பின்னுக்குப் போய்விட்டன. எங்கே? தமிழ் நாட்டில்தான்.

* * *

தமிழ் பாஷை தோன்றிய நாளிலிருந்தே வசனம் உண்டென்று சொல்ல வேண்டும். தமிழில் மாத்திரம் அல்ல, பேசப்படுகிற எந்தப் பாஷையிலுமே வசனம் என்பது எப்போதும் உள்ளது. பாஷை எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. பாஷை என்ருல் மக்கள் உள்ளத்தில் நிகழ்வதை வெளிப்படுத்துவதுதான். கோபமோ, ஆத்திரமோ, சோகமோ, கருணையோ, மனத்தில் உண்டானுல் அதை அப்படியே வாய் திறந்து சொல்லி விடுகிருன். அவ்வாறு சொல்லுவதே வசனம்.

* * *

சத்தியமானது மனிதனுடைய இரத்தத்தோடும் உணர்ச்சியோடும் ஒட்டிக் கிடக்கின்றது.

சத்தியத்துக்கு விரோதமாக வாய் பேசுகிறதென்ருல், இதயத்தைக் கத்தியினுல் அறுத்து வெளியே எடுக்கிற கணக்குத்தான். ஆனுலும் தற்காலத்து அரசியல், வழக்கியல், வியாபார இயல், பத்திரிகை இயல், இவைகள் காரணமாக, மேலே சொன்ன இயற்கை உணர்ச்சிதான் உண்டோ இல்லையோ என்று சந்தேகிக்கக்கூட இடமுண்டாகிறது.

* * *

தமிழ் நாட்டிலுள்ள சமையலைப்பற்றி உலகத்திலேயே சிறந்தது இது என்று பதார்த்தங்களைப் பகுத்துணர்ந்த நிபுணர்கள் சொல்லுகிருர்கள். நமக்கு அனுபவத்திற் கண்ட விஷயங்கள் அவை. குழம்பில் எத்தனையோ விதம். ரசம் என்ருல் எத்தனையோ விதம். கறி வகைகளும் அப்படியே.

இவ்வளவையும் கண்டு மறந்து போகாமல் தொடர்ச்சியாகப் பாதுகாத்து வந்திருக்கிறார்களே—தமிழர்கள்—என்று வியக்கிறார்கள் மேலே சொன்ன நிபுணர்கள்.

* * *

நம்முடைய தமிழ் நாட்டில் வழங்கி வருகிற ராகங்களும் அவைகளால் சங்கீதமும் (பாட்டும்) உருப் பெற்று விளங்குவதற்குப் பல்லாயிர வருஷங்கள் ஆகியிருக்கின்றன. அப்படியானால் அதன் பண்பாடு உலகத்திலேயே சிறந்தது என்று உலகத்து இசைவல்லார் சொல்லுவதில் வியப்பில்லை. சங்கீதம் இருக்கட்டும் அப்படி.

கலையிலெல்லாம் கலை கவி. தமிழ்க் கவியின் அற்புதமான அமைப்பை எடுத்துச் சொல்ல வேண்டுமானால் கடவுளுடைய சிருஷ்டியைத்தான் சொல்ல வேண்டும். வாழைப்பூ அமைந்திருக்கிற அற்புதம்தான் என்ன! உள்ளும்புறமுமாக மாதுளம் பழம் அமைந்துள்ள அற்புதம் தான் என்ன! இந்த இரண்டு வஸ்துக்களைக் கொண்டு கடவுளுடைய அற்புதச் சிருஷ்டியை ஒரு வகையாக உற்று நோக்கி அனுபவிக்க முடியும்.

கிட்டத்தட்ட தெய்வப் புலமையோடு கூடிய கவிகளிலும் இந்த அற்புதத்தைப் பார்க்கிறோம். ஆம், அமைப்பு அத்தனை அதிசயம்தான்.

கவியாகிய கலை வளர்வதற்குப் பல்லாயிர வருஷம் வேண்டி இருக்கிறது. அப்படி வளர்ந்தது தமிழ்க் கவி.

* * *

கவிச் செல்வம் என்பது அரிய செல்வம். அதற்காக ஒரு இனத்தார் எதையும் ஈடாகக் கொடுத்து விடலாம் என்று தெள்ளத் தெளிந்த ஆசிரியர்கள் சொல்லுவார்கள்.

தமிழரது கவிச் செல்வம், இதர பாஷைகளைக் கவனிக்கும்போது, மிக வளமான செல்வந்தான். ஒருவருக்கு ஆயுள் நாள் முழுதும் திளைத்து அனுபவிக்கத்தக்க செல்வந்தான்.

* * *

வானத்தில் விளைந்த சுடர்களைப்போல இயற்கையில் விளைந்த கவிகளைத்தான் கவிகள் என்று ஒப்புக்கொள்ள வேண்டும். மின்மினிப் பூச்சியையும் காக்காப் பொன்னையும் பார்த்து ஏமாந்து போகக்கூடாது.

* * *

தமிழ் நாட்டில் எந்த ஊரிலும், அது எவ்வளவு சிறு ஊராய் இருந்தாலும், கோயில் ஒன்று உண்டு. அதில் சேவிப்பதற்காக மேளமும் சின்ன மேளமும் (பரதநாட்டியம்) ஏற்படுத்தி மானியமும் விட்டிருக்கிறார்கள். இந்தச் சர்வ வியாபகமான ஏற்பாடு உலகத்தில் வேறு எங்குமே சங்கீதத்துக்கு இல்லை என்று சொன்னால் பொருந்தவே செய்யும். இந்த வியாபகம் உண்டாவதற்குப் பல்லாயிரக் கணக்கான வருஷம் வேண்டும்.

* * *

இயற்கை தன் மடிக்குள் ஒளித்து வைத்திருக்கிற அதிசயங்களைக் கண்டுபிடிக்க முயல்வதிலும், கண்டு பிடிக்கிற திறத்திலும், கண்டுபிடித்தவுடன் உண்டாகும் ஆனந்தத்திலும் மனிதன் தனித்தே நிற்கிறான். இத்தோடு நிற்கவில்லை. அந்த ஆனந்தத்தை மற்ற மக்களுடன் கூடி அனுபவிப்பதிலும், தலைமுறை தலைமுறையாக மக்கட் சமுதாயம் அனுபவிக்கும்படியான விழாக்கள் ஏற்படுத்துவதிலும், நூல்கள் எழுதி வைப்பதிலும் அப்படியே

தனித்து நிற்கிறான். மற்ற ஜீவராசிகள் எல்லாம் அவனை விட்டு எவ்வளவோ தூரத்தில் விலகி நிற்கின்றன. நான்முகனுக்குச் சிறந்த கிரீடம் நாமே என்று சொல்லிக் கொள்ளலாம்.

* * *

ஒன்றைப் பார்த்து உண்மையாகவே அனுபவிக்கிறதுக்கும், அதன் இயல்பைப் பூரணமாகத் தெரிந்துகொள்வதற்கும் அதிகாரிகள் தாய்மார்கள்தான். ஆடவர்களாகிய நாமோ கொஞ்சம் எட்டி நிற்க வேண்டியதுதான். தாய்மார்களால் அனுபவித்துப் பாராட்ட முடியாத ஒரு விஷயம் இருக்குமானால் அதன் தரத்தைப் பற்றிக் கொஞ்சம் சந்தேகப்படுவது குற்றம் அல்ல.

உண்மையை நிறுத்துப் பார்ப்பதற்கும், அதன் மாத்தை நிர்ணயம் செய்வதற்கும், தாய்மார்கள் உரை கல்லாய் இருக்கிறார்கள்.

குழந்தைகளை வளர்ப்பதும் குடும்பத்தைக் காப்பதும் அற்புதமான கலை. இந்தக் கலையைப் பல்லாயிரம் ஆண்டுகளாய்த் தொடர்ந்து பாதுகாத்து வருகிறார்கள் தாய்மார்கள். அதன் மூலம் எங்கும் இல்லாத ஆனந்தத்தை அடைகிறார்கள்.

* * *

ஆங்கிலக் கல்விமுறையால் ஆடவர்கள் கெட்டுவிடுகிறார்கள். ஆனால், அக்கல்வியின் மூலம் தாய்மார்கள் கெடுவதுதான் கொடுமையிலும் கொடுமை.

* * *

குழந்தை வளர்ப்பைப் பற்றியும், சமையலைப் பற்றியும், குடும்ப நிர்வாகம் பற்றியும் தாய்மார்களுக்கா சர்வ கலாசாலை சொல்லித் தரவேண்டும்!

* * *

ஆடவர்களுடைய இதயப்பாங்கும், தாய்மார்களுடைய இதயப் பாங்கும் ஒன்றுக்கொன்று சம்பந்தம் இல்லாதவை. இரும்புக்கும் பிச்சிப் பூவுக்கும் உள்ள வேறு பாட்டை விட அதிகம் வேறுபாடு கொண்டவை. ஆடவர்களின் இதயத்தையே கெடுத்து ஏமாளியாக்கிவிடுகிற ஆங்கிலக் கல்வி தாய்மார்களைச் சும்மா விடுமா ? படித்த பெண்களுக்குச் சமைக்கத் தெரியாது. குடும்பத்தைப் பேணத் தெரியாது. குழந்தைகளைப் பாதுகாக்கத் தெரியாது. எல்லாவற்றையும்விடக் கோடி கோடி ஆண்டுகளாய்த் தொடர்ந்து வருகிற ஆனந்தமான தாய்மைத் தத்துவம் இருக்கிறதே, அதனுடைய குரல்வளையையே நெரித்து விட்டது இந்த ஆங்கிலப் படிப்பு.

* * *

மேலே குறிப்பிட்ட வாசகங்களைப் படித்துப் பாருங்கள் ; மீண்டும் மீண்டும் படித்துப் பாருங்கள். தமிழன்னை தன்னைப் பாதுகாப்பதற்கு எத்தகைய மகன் வேண்டுமென்று நெடுங்காலம் தவம் இருந்தாளோ, அத்தகைய மகன் அவதாரம் செய்து, தன் அன்னையின் பெருமையை உன்னதத்தைத் தெளிவாகவும், கம்பீரமாகவும் எடுத்து விளக்குகிற அற்புதத்தையும், .தமிழ் மக்கள் எல்லோரும் அந்த மகானுடைய உபதேசத்தில் ஈடுபட்டுத் தமிழன்னையின் தவப் புதல்வர்களாக ஒன்று கூடுகிற பெருமையையும் கண்ணாரக் காணலாம்.

தமிழ், தமிழ்ப் பண்பாடு இவைகளின் மகோன்னதத்தை, அளப்பரிய தெய்வீகப் பொலிவை விளக்கமாக எடுத்துச் சொல்கிற குரல், சத்தியத்தின் அமைதியான, சுகமான, ஆழமான, மங்களகரமான குரல், டி. கே. சி. என்கிற மகானிடமிருந்து பதட்டமில்லாமல், எத்தனை அடக்கத்தோடும் உறுதியோடும் வெளி வருகின்றன என்பதைக் காதாரக் கேட்கலாம்.

ஆங்கிலக் கல்வி முறையால் சமுதாயத்திற்குள் நுழைந்துவிட்ட படாடோபத்தையும், போலித் தன்மையையும் அம்பலப்படுத்தி, அதனிடம் மக்களுக்கிருந்த மோகத்தை விலக்கி எத்தனை நம்பிக்கையோடு தமிழ் மக்களைத் தட்டிக் கொடுக்கிறது, அந்தக் குரல்.

ஆங்கில வலையில் சிக்காமல், தமிழிலும், தமிழ்ப் பண்பாட்டிலும் மயங்கி, அதன் தெய்வீகத் தன்மையில் வசமாகிக் காத்து வருகிற மக்களை, அப்பாவி மக்களை எவ்வளவு பெருமையோடு உயர்த்தித் தூக்கி நிறுத்துகிறது அந்தக் குரல்.

ஞானமும், ஆனந்தமும், உண்மையில் பூத்துக் குலுங்குகின்றன அந்தக் குரலில். உறுதியும், பிரகாசமும் தெளிவாய் விளங்குகின்றன அந்தக் குரலில். ஏமாளித் தனத்தைப் புலப்படுத்திக் கைகொட்டிச் சிரிக்கின்றது அந்தக் குரல். சிரித்து ஆனந்த உலகத்திற்கு வாசலைத் திறந்து விடுகின்றது அந்தக் குரல்.

மனித சமுதாயத்தின் ஏக்கமும், ஆசையும், வேட்கையும் பொங்கிக் கொண்டு வருகின்றன. அநியாயத்தை உதறி எறிந்துவிட்டுத்தன்னுடைய தொன்மையையும் சிறப்பையும் எல்லோரும் காண வெளிப்படுத்துகின்ற தமிழன்

ணையின் வாய் மொழி, தமிழ் மக்களின் தாக சாந்தி, அவர்களின் குறைவற்ற பெரும் பேறுயக் காட்சி தருகிறது அந்தக் குரல்.

ரசிகமணியாம் நம் தமிழ்த் தந்தை மேலே குறிப்பிட்ட கொள்கையை ஆணித்தரமாக வாழ்நாள் முழுவதும் உணர்த்தி வந்தார்கள். ஏதோ, ரயிலில் போகிற இடை வேளையிலோ, அல்லது ஒரு கூட்டத்திற்கு ஏற்ற சந்தர்ப்பத்திலோ இதுதான் தன் கொள்கை என்று சொல்லிவிட்டு நிறுத்திவிடவில்லை.

தமிழும், தமிழ்ப் பண்பாடும் எத்தகைய பெருமையும் ஆனந்தமும் கொண்டவை, அவை எப்படித் தமிழ் மக்களின் வாழ்க்கையோடு வாழ்க்கையாய் வளர்ந்து வந்துள்ளன என்பதை ஆயுள் நாள் முழுவதும் தெளிவாக விளக்கி வந்தவர்கள் டி. கே. சி.

டி. கே. சி.க்குக் கடந்த ஐம்பது ஆண்டுகளாகத் தமிழ், தமிழ்ப் பண்பு, தமிழ்க் கலை இவைகளின் ஆற்றலை எடுத்து விளக்குவது ஒன்றே தொழில். வேறு தொழில் இல்லை. இதைக் கருதியே தம்முடைய வழக்கறிஞர் தொழிலையும் மூன்று ஆண்டுகளில் விட்டுவிட்டார்கள். வழக்கறிஞராக இருந்த மூன்று ஆண்டுகளிலும், தமிழ்த்தொண்டு ஒன்றைத் தவிர, சட்ட நூல்களோ நீதி மன்றமோ அவர்களை ஆட்கொள்ளவில்லை.

# இலக்கியச் சங்கம்

தமிழ், தமிழ்ப் பண்பாடு இவைகளின் உன்னத நிலையைத் தமிழுலகு முழுவதும் தெரிந்து அநுபவிக்க 1924-ல் தம்முடைய இல்லத்தில் இலக்கியச் சங்கம் என்ற பெயரில் ஒரு தமிழ்ச் சங்கத்தை ஏற்படுத்தி, நண்பர்களுக்கும், புதிதாக வரும் தமிழ் அன்பர்களுக்கும், அங்கத்தினர்களுக்கும் விளக்கி வந்தார்கள்.

கம்பர், மாணிக்கவாசகர், முத்தொள்ளாயிர ஆசிரியர், ஆழ்வார்கள், அப்பர் சுவாமிகள் போன்ற நாயன்மார்கள், காரைக்காலம்மையார், நந்திக் கலம்பக ஆசிரியர், ஜயங்கொண்டார், பெருந்தேவனார், எண்ணிறந்த தனிப் பாடல் ஆசிரியர்கள் அவ்வளவு கவிஞர்களும் டி.கே. சி.யின் நாவில் வந்து சதா களிநடம் புரிவார்கள். கவியை எடுத்து விளக்குவதற்கு, டி. கே. சி. முதலில் போடுகிற பீடிகை ஞான பீடமாக இருக்கும். பின்பு, தெய்வீகமான, கனிந்த கர்நாடக (தமிழ்) இசையோடு கவியை நிறுத்தி, வளைத்து வளைத்துப் பாடுகிற செயல் ஞானபீடத்தில் நடராஜ மூர்த்தி வந்து ஆனந்த நடனம் ஆடுவதாகவே இருக்கும்.

டி. கே. சி. கவிஞர்களிடம் எத்தகைய பக்தியும், மரியாதையும் வைத்து மதித்தார்கள், அநுபவித்தார்கள், அதன் மூலம் எவ்வளவு ஆனந்தம் அடைந்தார்கள் என்பதை அவர்களிடம் கவிகேட்ட ஒவ்வொருவரும் அறிவர்.

1915-ம் ஆண்டிலிருந்து டி. கே. சி. திருநெல்வேலியில் வசித்து வந்தார்கள் என்று குறிப்பிட்டிருந்தேன்.

1924-ம் வருடம் டி.கே.சி. யின் இல்லத்தில் டி. கே. சி.யால் இலக்கியச்சங்கம் ஏற்பட்டதென்றும் குறிப்பிட்டிருந்தேன்.

இலக்கியச் சங்கம் வாரம் ஒரு முறை கூடும். உயர்திரு எஸ். வையாபுரிப்பிள்ளை, ரா. பி. சேதுப்பிள்ளை, ஜே. சக்கரபாணி நம்பியார், எஸ். சுப்பையா முதலியார் போன்ற அங்கத்தினர்களும், பல தமிழ் அன்பர்களும் கூடுவார்கள். டி. கே. சி. தமிழ்க் கவிகளை அமிர்த மழையாகப் பொழிந்து, தமிழ்ப் பண்பாட்டை ஆனந்தமாய் ஒவ்வொரு தடவையும் விளக்கி அன்பர்களின் மனதில் பதிய வைப்பார்கள். ஆனால், டி. கே. சி. இலக்கியச் சங்கத்தில் வாரம் ஒருதடவை வந்து தமிழ்க்கவிகளை எடுத்துவிளக்குவது ஒன்றைத்தான் செய்துவந்தார்கள் என்று கருதிவிடக்கூடாது. டி. கே சி. யின் இல்லத்தில் எப்பொழுதும் கல்யாணக் கூட்டமாகவே இருக்கும். இறைவனுடைய திவ்ய க்ஷேத்திரத்திற்குப் பக்த கோடிகள் சதா வந்துகொண்டிருப்பதைப் போல தமிழன்பர் குழாம் தமிழ்ச் சன்னிதானமாகிய டி. கே. சி. யின் இல்லத்தில் வந்து குழுமி இருப்பர். அவர்களை அருமை பாராட்டி, உறவு கொண்டாடி உபசரிக்கும் நம் டி. கே. சி. அவர்களுக்கு அறுசுவை உண்டி உண்பித்து அமிழ்தினும் இனிய தமிழ்ப் பாடல்களை எடுத்து விளக்கிக்கொண்டே இருப்பார்கள்.

இங்ஙனம் தமிழையும், தமிழ்ப் பண்பையும் தமிழ் மக்களுக்கு வாரி வழங்குவதையே தொடர்ந்து, விடாத குறிக்கோளாக 1915 முதல் நடத்திவந்தார்கள் டி. கே. சி.

ஆகவே, இலக்கியச் சங்கம் என்பது மழை பெய்து ஓய்ந்த உடன் சிந்தும் தூவானம் போன்று தம் இடையறாத் தொண்டில் இடை இடையே பேணும் ஒருவகைத் தொண்டென்பதை மறந்துவிடக்கூடாது.

# புத்திரச் செல்வம்

1909-ம் ஆண்டு டிசம்பர் மாதம் நம் தமிழ்த் தந்தை டி. கே. சி. அவர்களுக்கு தீத்தாரப்பன் என்னும் ஆண் குழந்தை பிறந்தது. பிறந்த பையன் நன்கு கல்வி கற்று, சிரித்த முகமும், தெளிந்த உரையும், சிறந்த ஞானமும் பெற்று வளர்ந்து வந்தான்.

"விளையும் பயிர் முளையிலேயே தெரியும்" என்னும் மெய்யுரையை மெய்ப்பிக்கும் தீத்தாரப்பன் அவர்களுக்குப் பள்ளிப் படிப்போடு தமிழ்க் கவிகளில் திளைத்து அனுபவிக்கும் திறனும், தம் அனுபவத்தை சகாக்கள் பலரிடம் எடுத்து விளக்கும் ஆற்றலும் இளமையிலேயே வந்து விட்டது.

தீத்தாரப்பன் உயர்நிலைப் படிப்பும் கல்லூரிப் படிப்பும் முடித்துபல்கலைக் கழகத்தாரின் கலைச் செல்வன் என்னும் பட்டத்தையும் பெற்றவர்.

இளமையிலேயே தந்தையார் மூலம் அரும்பெருங் கவிகளைக் கேட்டு அனுபவித்த தீத்தாரப்பன் சிறந்த சிறு கதை பலவற்றை—தமிழ் மணமும், தமிழ்ப் பண்பாடும் கலந்து மணம் கமழும் உயரிய சிறுகதைகள் பலவற்றை—எழுதி வெளியிட்டார்.

தீத்தாரப்பனுடைய கதைகளில், சிருஷ்டிதத்துவமும், கட்டுக்கோப்பும், உருவ அமைப்பும் அற்புதமாக இருக்கும். கரடுமுரடான, வழக்கொழிந்த வார்த்தைகளை நிரப்பிக் கதைப் போக்கையும், வாசகர்களையும் உருக்குலைக்காமல்,

சரளமான ஓட்டத்தில், மக்களின் வாயில் நடமாடி மணங் கமழும் வார்த்தைகளைக் கொண்டு, "அவர் கதை எழுதுகிறார் நாம் வாசிக்கிறோம்" என்னும் உணர்ச்சி வாசகர்களுக்கு ஏற்படாமல் தாமே பேசி அனுபவிப்பது போன்ற அத்தனை அற்புதமான முறையில் தமிழ் பாஷையைக் கையாண்டவர் தீத்தாரப்பன்.

தீத்தாரப்பன் கதைகள் பல எழுதியது போல அருமையான பல கவிதைகளையும் இயற்றி இருக்கிறார். இலக்கியம், கலை, பண்பாடு இவைகளைப் பற்றிய உன்னதமான அபிப்பிராயத்தோடு பல கட்டுரைகளும் எழுதி இருக்கிறார்.

தீத்தாரப்பன் தம் நண்பர்கள் பலருக்கும் அவ்வப்போது பல கடிதங்கள் எழுதி உள்ளார். அவருடைய கடிதம் ஒவ்வொன்றிலும் கலைஞனுடைய உள்ளத்தில் சுழன்று வட்டம் போடுகிற பல குறிக்கோளோடு கூடிய ஆனந்த அனுபவங்களையும் பளிங்கில் வைத்துப் பார்ப்பது போன்று நேருக்கு நேராகப் பார்க்கலாம். தீத்தாரப்பனிடத்துச் சரஸ்வதி தேவியின் திருநோக்கும், கடாட்சமும் இவ்வளவு தான் என்று எண்ணி விடலாகாது.

தீத்தாரப்பனிடம் அருமையான இசைஞானம் இருந்தது. அத்தகைய பூர்வீகமான நயமான, சுத்தமான இசை ஞானத்தைத் தற்காலத்திற் பார்க்கமுடியவில்லையே என்று பல அறிஞர்கள் அங்கலாய்க்கிறார்கள்.

கலைமகளின் கருணையால், தேனினும் இனிய சாரீரப் பொலிவும் தீத்தாரப்பனிடம் வாய்த்திருந்தது. டாக்டர், உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் பழந்தமிழ் நூலாராய்ச்சி

யின் எவ்வளவோ வேலைகளை ஒதுக்கி வைத்துவிட்டுத் தீத் தாரப்பனிடம் வந்து (1930 முதல் 1940 வரை டி. கே. சி. சென்னையில் வசித்து வந்தார்கள்) பூர்வமான பதங்களையும், தமிழ்க் கீர்த்தனைகளையும் பாடச் சொல்லிக் கேட்டுப் பரவசம் அடைவார்கள். தீத்தாரப்பனுடைய இசை ஞானத்தையும், சாரீர வளத்தையும் வாயாரப் புகழும் 'டாக்டர், ஐயரவர்கள், தீத்தாரப்பனுக்குத் 'தேன்' என்றே பெயர் வைத்துவிட்டார்கள்.

சங்கீதக் கலைக்கும், நடனக் கலைக்கும் அதிதேவதைகளாய், அக்கலைகளின் இருப்பிடமாய் இருந்த வீணை தனம்மாள், ஜெயம்மாள், பாலசரஸ்வதி, போன்ற மேதாவிகளே தீத்தாரப்பனுடைய இசை ஞானத்தைப் பாராட்டி அனுபவித்திருக்கிறார்கள் என்றால் வேறு என்ன அத்தாட்சி வேண்டும் !

மதுரை மணி ஐயர் போன்ற சங்கீத வித்வான்கள் தீத்தாரப்பனின் இசையுலக நண்பர்கள், இணைபிரியா நண்பர்கள்.

தீத்தாரப்பன் பல கீர்த்தனைகளை, அற்புதமான பல பதங்களை இயற்றி இசை உலகிற்கு நன்கொடை புரிந்துள்ளார்.

தீத்தாரப்பன் பள்ளியிற் படிக்கிற காலத்தும் அருமையாய் உயர்ந்த கீர்த்தனைகளை, பதங்களைப் பாடிப்பாடி அனுபவிப்பதுண்டு. தம் பள்ளித் தோழர்களிடம் பாடி அனுபவிக்கச் செய்வார்.

கல்லூரியிற் பயின்ற காலத்தும், அதன் பின்பும் தம் அருமை நண்பர்களிடம் சதாப் பாடிப்பாடி அனுபவிக்கச் செய்யும் அருங்குணம் வாய்ந்தவர்.

புதுக்கோட்டை சப்ஜட்ஜ் ஸ்ரீ மகாராஜ பிள்ளை, கல்கி ஆசிரியர், சோமசுந்தரம், ஸ்ரீமான் காந்திமதிநாதன், காலஞ் சென்ற, ஆ. முத்துசிவன் முதலிய நண்பர்கள் தீத்தாரப்ப னுடைய இசை ஞானத்தை நினைந்து நினைந்து குழை வார்கள்.

தீத்தாரப்பனின் தந்தையும், தமிழ்த் தந்தையுமாய நம் டி. கே. சி. அடிக்கடி கீழ்க்கண்டவாறு சொல்வதுண்டு. "செல்லையாவுக்கு (தீத்தாரப்பனின் செல்லப் பெயர் செல்லையா) சங்கீதஞானம் அபாரமாய் இருந்தது. அவ னுடைய பாடலும், சாரீரமும் கேட்கக் கேட்க அற்புத மாயிருக்கும்."

தீத்தாரப்பனுக்கு, இசை, நடனம், கவி முதலிய நுண் கலைகளில் தான் உயிர்.

## சட்டசபையில் தமிழ் முழக்கம்

நெல்லை மாவட்டக் கழகத் தலைவராகவும், சென்னை மாகாணக் கல்வி மந்திரியாகவும் பலகாலந் தொடர்ந்திருந்து நாட்டிற்கு நற்பணி பல புரிந்த காலஞ் சென்ற திரு. குமாரசாமிரெட்டியார் அவர்களும், டி. கே. சி.யும் அருமை நண்பர்கள், இணைபிரியாத் தோழர்கள்.

ஸ்ரீமான் ரெட்டியார் அவர்களும், டி. கே. சி. யும் 1927ம் வருடம் சென்னை மேல் சபை உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். மேல் சபைத் தேர்தலுக்கு நிற்குமுன்பே இரண்டு பேரும் ஆலோசித்து இணைந்தே தேர்தலிற் கலந்து கொண்டார்கள். இணைந்தே வாக்குச் சீட்டுக்களைப் (ஓட்டுக்களை) பெற்றார்கள். இணைந்தே (M. L. C.) வெற்றி பெற்றார்கள்.

ஆனல் பொது மக்களிடம் வாக்குச் சீட்டுக் களைப் பெறவும், தங்களை ஆதரிக்கவேண்டியும், திரு. ரெட்டியார் அவர்களும், டி. கே. சி. யும் ஒரே காரிற் சேர்ந்து பல இடங்களிற் சுற்றி அலைந்து வந்தாலும் டி. கே. சி. கம்பராமாயணமும் கையுமாகத்தான் காரில் இருந்து படித்துக்கொண்டிருப்பார்கள். ஓட்டுக் கேட்பதற் குப் பதிலாக தமிழ், கவி, கலை இவைகளைப் பற்றித்தான் மக்களிடம் எடுத்து விளக்குவார்கள்.

தங்களை ஆதரிக்குமாறு பொதுமக்களை வேண்டிக் கொள்வதும், இரண்டு பேருக்கும் சேர்த்து ஓட்டுக்களை வாங்கிச் சேகரித்ததும் திரு. ரெட்டியார் அவர்கள்தான்.

திரு. ரெட்டியார் அவர்களும் டி. கே. சி.யும் மேல் சபை உறுப்பினர்களாக வெற்றிபெற்றார்கள். வெற்றி

பெற்ற பின்பும் டி. கே. சி. தமிழ்க் கவிகளை அனுபவிக்கிற தும், மற்றவர்களுக்குக் கவியின் அருமையை விளக்கி அனு பவிக்கச் செய்கிறதுந்தான் சட்டசபையிலும் வேலையாக இருந்தது.

சட்டசபை அங்கத்தினராக டி. கே. சி. இருக்கும் போது சர். சி. பி. ராமஸ்வாமி ஐயர், ராமநாதபுரம் ராஜா முத்துராமலிங்க சேதுபதி, சர். உஸ்மான் முதலிய சக அங்கத்தினர்களிடம் கவிகளை எடுத்து விளக்கி அவர்களைத் தமிழில் மோகங்கொள்ளுமாறு செய்தார்கள். **1927** முதல் **1930** வரை மேல்சபை உறுப்பினராக இருந்த டி. கே. சி. சட்டசபையையே தமிழ்ச் சங்கமாக மாற்றிவிட்டார்கள் என்று சொல்லலாம்.

சட்டசபை சக உறுப்பினர்களிடம் அடிக்கடி கம்ப ராமாயணப் பாடல்களைச் சொல்லி விளக்குவார்கள். அவற்றை ஆந்திர நாட்டைச் சேர்ந்த உறுப்பினர் பலரும் உடனிருந்து அனுபவிப்பதுண்டு. ஒருநாள் "கங்கையிரு கரையுடையான்" என்னும் கம்பராமாயணப் பாடலை எடுத்து ரசிகமணி விளக்க, அதிற் சொக்கி மயங்கிவிட்ட ஆந்திர உறுப்பினர் ஒருவர் டி. கே. சி. யை அதன் பின் எங்கு பார்ப்பினும் தம் சிரசின் மேல்இரண்டு கைகளையும் எடுத்துக் குவித்து "கங்கைகரை யுடையான்" என்று சொல்லிக் கொண்டே வணங்கி வரவேற்பார் என்றால் டி. கே. சி. சட்டசபையை எவ்வளவு லாகவமாகத் தமிழ்ச் சங்கம் ஆக்கிவிட்டார்கள் என்று தெரிய முடியும்.

டி. கே. சி. மேல் சபை உறுப்பினராக இருந்த காலத் தில் தமிழ் நாட்டில் தமிழ்ப் பல்கலைக் கழகம் வேண்டு மென்ற பெரு நோக்கோடு, அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஏற்படப் பல அரிய தொண்டு செய்தார்கள்.

அது மட்டுமா? சென்னை நகரத்தில் உள்ள கனதன வான்கள் பலரையும் தமிழிலும், தமிழ்க் கவிகளிலும், கம்பரிலும் பக்தி கொண்டு பரவசமுறும் வண்ணம், பல அரிய சொற்பொழிவுகளாற்றியும், நண்பர்களிடமெல்லாம் தமிழ்க் கவிகளின் அற்புத நிலையை விளக்கியும் வந்தார்கள்.

டி. கே. சி. கவிகளை எடுத்து விளக்குகிற ஆற்றலையும், சுற்றி இருப்பவர்களைக் கவி இன்பத்தில் திளைக்கச் செய்கிற வித்தையையும் நேரில் அனுபவித்த காலஞ்சென்ற வி. வி. சீனிவாச ஐயங்கார் அவர்கள், (சென்னையின் பிரபல வழக்கறிஞராகவும், சென்னை உயர் நீதிமன்ற நீதிபதியாகவும் இருந்தவர்கள்) தம்முடைய இல்லத்தில் ரசிகமணியைக் கொண்டு கம்ப ராமாயண வகுப்பை நடத்தும்படி வேண்டினார்கள். ரசிகமணியும் ஒப்புக்கொண்டு பல நாட்கள் தொடர்ந்து கம்பருடைய கவிகளை எடுத்து விளக்கி, ஸ்ரீமான் ஐயங்கார் அவர்களையும், ஐயங்காரின் சுற்றத்தார், மதிப்புக்குரிய நண்பர்கள் ஆகிய அவ்வளவு பேரையும், கம்பர் கவிகளாலும், அவற்றை அனுபவிக்கச் செய்யும் தம் அற்புத சக்தியாலும் களிப்புக் கடலில் ஆழ்த்தினார்கள்.

அப்பொழுது ஒரு நாள், ஸ்ரீமான் ஐயங்காரவர்கள், சபையில் அறிவித்த வாசகம். "எந்த விதத்தாலும் வார்த்தைகளைக் கொண்டு புலப்படுத்த முடியாத உண்மையை, உணர்ச்சி பாவங்களின் உன்னத நிலைகளை முதலியார் அவர்கள் எல்லோரும் அனுபவிக்க விளக்கி விடுகிறார். இத்தகைய மந்திரசக்தி முதலியாருக்கு எப்படிக் கிட்டியது என்பதை நினைக்க நினைக்க எனக்கு அதிசயமாக இருக்கிறது. அதுவே எனக்கு ஆனந்தமாகவும் இருக்கிறது."

# அறநிலையப் பாதுகாப்பாளர்

1930-ம் ஆண்டு முதல் 1935-ம் ஆண்டு முடிய டி. கே. சி. அவர்கள், சென்னை மாகாண, இந்து அறநிலையப் பாதுகாப்புக் கமிஷனர் பதவி வகித்து வந்தார்கள். அப்பொழுதும், தமிழ், கவி, கலை இவைகளின் பெருமையை மக்களுக்குத் தெரிவிப்பதுதான் டி. கே. சி. யின் தொழில்.

தமிழ் நாடு முழுவதும், டி. கே. சி. அவர்கள் கோயில்களின் நிர்வாக சம்மந்தமாகச் சுற்றுப் பிரயாணம் செய்தார்கள். ஒவ்வொரு கோயிலுக்குஞ் சென்று அங்குள்ள நிர்வாக முறைகளை அறிந்து வேண்டும் திருத்தங்களை முன்னேற்றங்களை அளித்தார்கள். கோயில்களின், சிற்பங்களையும், சித்திரங்களையும் அங்குள்ள மக்களுக்கும் கோயில் நிர்வாகிகளுக்கும் விளக்கி அவைகளை எவ்வளவோ ஜாக்கிரதையோடு பாதுகாக்குமாறு வற்புறுத்தினார்கள். கோயில்களால் வளர்க்கப்பட்டு நெடுங்காலமாய் மக்களுக்கு ஆனந்தம் அளித்து வருகிற மேளம், திருமுறைப் பாராயணம், தேர், திருவிழா முதலியவற்றின் உண்மை இயல்பையும், அவற்றினுல் ஏற்படுகிற சமுதாய ஆனந்தத்தையும் விளக்கி அவற்றைப் பாதுகாக்க வற்புறுத்தினார்கள்.

கோயில் நிர்வாகிகளிலிருந்து, கோயிலின் ஒவ்வொரு வேலைக்காரரையும் வரவழைத்து அவர்களுக்கு, கோயில், அதனுல் ஏற்பட்ட கலை வளம், ஆனந்தம், பக்தி, தமிழ் இன்பம் இவைகளை விளக்கி அவர்களோடு அளவளாவி டி. கே. சி. மகிழ்வார்கள்.

கோயில் நிர்வாகம் சம்பந்தமாகச் சுற்றுப் பிரயாணம் செய்து வருகிற காலை டி. கே. சி.க்கு ஆங்காங்கு பாராட்டுக் கூட்டங்கள் நடைபெறும். கூட்டத்தில் பல பெரிய மனிதர்களும், அதிகாரிகளும் கலந்து கொள்வார்கள். டி. கே. சி. யோ ஒவ்வொரு கூட்டத்திலும், தமிழ் மொழியின் வளத்தையும், தமிழ்க் கவிகளின் அருமையையும், தமிழ் நாட்டுக் கலைகளின் இணையில்லாச் சிறப்பையும் நயமான தமிழில் பேசி எல்லோரையும் தமிழில் விழிப்புறச் செய்வார்கள்.

திருவிழாக் காலத்தில், தாம் அணிந்திருக்கும், தலைப் பாகை, மேல் சட்டை (கோட்டு) சட்டை இவைகளைக் கழற்றி வீட்டில் வைத்து விட்டு, துண்டை இடுப்பில் கட்டிக்கொண்டு, வடத்தைப் பிடித்துப் பல தடவை மற்ற வர்களுடன் தேரை இழுத்து ஆனந்தம் அடைந்தவர்கள் • டி. கே. சி.

கோயில்களில் மகோதர பூஜையை நடத்தி எல்லோ ரையும் சாப்பாட்டிற்கு வரவழைத்து டி. கே. சி.யும் அவர் கள் மத்தியிலிருந்து சாப்பிடுவார்கள். இறைவனுடைய சந்நதியில் தோட்டி முதல் தொண்டைமான் வரை அவ்வளவு பேரையும் வரவழைத்து, உபசரித்து ஒன்று போல் நடத்திய டி. கே. சி. ‘யின் இதயப் பண்பாட்டை எத்தனையோ நண்பர்கள் சொல்லி ஆனந்தம் அடை கிருர்கள்.

கோயிலில் உள்ளவர்கள் நன்ருகச் சாப்பிடுவார்கள் என்றும், குறைவில்லாமல் நன்ருகச் சாப்பிடுகிறவர்களைப் பார்க்கப் பார்க்கத் தமக்கு மகிழ்ச்சியாக இருக்குமென்றும் டி. கே. சி. அடிக்கடி சொல்வார்கள்.

"ஆங்கிலம் படித்தவர்களைப் போல அன்னத்தைக் கூசிக் கூசித் தொட்டு வயிற்றை உலர வைத்து விட்டால், தோளில் ஒரு குடம் தண்ணீரும், கையில் ஒரு குடம் தண்ணீருமாக அர்ச்சகர்கள் சுமந்து கொண்டு வர முடியுமா, அல்லது பந்தாடுவது போல சப்பரத்தைத் தோளுக்குத் தோள் மாற்றி இறைவனை ஆனந்தமாக எழுந்தருளச் செய்ய முடியுமா" என்று டி. கே. சி. சொல்வதுண்டு.

மலையாளம், கன்னடம் முதலிய இடங்களுக்குக் கோயில் நிர்வாக சம்மந்தமாகச் சுற்றுப் பிரயாணம் செய்த டி. கே. சி. அவ்விடங்களில் தமிழ்க் கவிகளின் செல்வாக்கையும், தமிழ்ப் பண்பாட்டின் வளர்ச்சியையும் நேரில் கண்டு தெரிந்து கொண்டார்கள்.

கோயில்களின்மூலம், இசை, நடனம், கலை, பண்பாடு இவைகளைத் தமிழ் மக்கள் நெடுங்காலமாக விடாமல் பாதுகாத்து வளர்த்து வந்திருப்பதை அறிந்த காரணத்தால் தான், தமிழ் நாட்டின் பல்கலைக் கழகங்களே நம்முடைய கோயில்கள்தான் என்று தெளிவுபடச் சொல்ல முடிந்தது.

கோயில்கள்தான் தமிழ் மக்களின் ஞான பீடங்கள் என்பது டி. கே. சி.யின் உறுதி.

தமிழ் மக்கள் சமய உண்மையைப் பல கலைகளின்மூலம் எடுத்து விளக்கி இருக்கிறார்கள். அத்தகைய கலைகளைக் கோயில்கள் தொன்று தொட்டுப் பாதுகாத்து வருகின்றன. கோயில்களில் உள்ள ஒவ்வொரு அம்சத்திலும் அற்புதமான கலை அழகைக் கண்டு இன்புறலாம். எங்கும் நிறைந்த பரம்பொருளின் உண்மைத் தத்துவத்தை உணர்ந்தும் பரவசம் அடையலாம். கோயில்கள் இவ்வாறு உருவ வழிபாடு, ஞான வழிபாடு இரண்டிற்கும் மூலாதார

மாய் விளங்குகிற நிலையை டி. கே. சி. எப்படி அனுபவித்தார்கள் என்பதை அவர்களுடைய வாக்குமூலத்தில் பார்க்கலாம்.

"சமயத்தில் இரண்டு விஷயங்களைக் கவனிக்க வேண்டும். ஒன்று தத்துவ உண்மை. அதாவது கடவுள் இறுதி இல்லாத இடம் எங்கும் பரவி நிற்கிறான். உயிர் உள்ளன உயிர் இல்லாதன ஆகிய எல்லாப் பொருள் களிலும், நின்று ஆட்டுகிறான். இந்த உண்மையில் திளைத்து ஆனந்திப்பது ஒருபுறம் இருக்க வழிபாட்டுக்குரிய உருவத்தில் ஈடுபட்டுப் பேரானந்தம் கொள்ளுகிறது சமயத்தின் மற்றைய முடிபான உண்மை.

"நம்முடைய மூதாதைகள் முதலில் சொன்ன உண்மையையும் இரண்டாவதாகச் சொன்ன அடையாளத்தையும் அபூர்வமாய் அனுபவித்திருக்கிறார்கள்.

"தமிழ் நாட்டுக்கு நிலையாய் உள்ள செல்வங்களாகப் பல கோயில்களும் கோபுரங்களும் இருக்கின்றன. அவைகள் தங்களிடம் பொதிந்து வைத்துள்ள பண்பாடு மிக அபூர்வமானது. ஆயிரக்கணக்கான வருஷங்களாக வந்த பண்பாடுகள் கல்லுகளுக்குள்ளே ஊறிக் கிடக்கின்றன. நம்முடைய கடமை அந்தப் பண்பாட்டுச் செல்வங்களை அந்தக் கல்லுகளுக்குள்ளிருந்து பிழிந்தெடுத்துப் பருக வேண்டியதுதான். செல்லரித்த மத சம்பிரதாயங்களின் சிறைகளாகக் கோயில்களை நாம் மதியாமல் கலைச் செல்வப் பொக்கிஷமாக நாம் கண்டு அனுபவிக்கவேண்டும்."

விஞ்ஞானத் துறையில் டி. கே. சி.க்கு அளவற்ற ஆர்வமும் ஞானமும் உண்டு. சமய தத்துவத்தில் ஆங்காங்கு வருகிற மரபுகள், அடையாளங்கள் அவ்வளவை

யும் விஞ்ஞான பூர்வமாக உணர்ந்து வெளியிட்டார்கள் டி. கே. சி.

கம்பர் தரும் ராமாயணம், முத்தொள்ளாயிரம் போன்ற நூல்களில் கடவுள் தத்துவமாக வருகிற பாடல்களுக்கு டி. கே. சி. கொடுத்திருக்கிற விளக்கமும் குறிப்பும் படிக்கப் படிக்கப் படிப்பவர்களின் உள்ளத்தைக் கனிவித்து உன்னத நிலையில் வைத்துவிடும். அப்படியே சமய சம்மந்தமான பல பாசுரங்களை எடுத்து விளக்கி உள்ள டி. கே. சி. யின் கட்டுரைகளைப் படித்துப் பார்ப்பின் டி. கே. சி. யின் விஞ்ஞான பூர்வமான சமய ஞானம் எவ்வளவு ஆழமும் அகலமும் உடையது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

விஞ்ஞானக் கலையின் மாசு மறுவற்ற அடிப்படை உண்மைகளையும், நவீன முடிபுகளையும் தெளிவாய்த் தெரிந்த டி. கே. சி. சமய சம்மந்தமான பாசுரங்களை விளக்குகிற நயம் எங்கும் இல்லாத அற்புத தத்துவமாகும்.

காலஞ் சென்ற பேராசிரியர் ஐன்ஸ்டீனுடைய தத்துவ நிலைகளைத் தெளிவாய்த் தெரிந்தவர் டி. கே. சி. ஐன்ஸ்டீனுடைய கோட்பாட்டையும் முடிபையும் இரண்டு மூன்று விநாடிகளில் லகுவாக விளக்கிவிட்டுத் தமிழ்ப் பாசுரங்களைப் பாடுவார்கள். கேட்பவர்களின் உள்ளத்தில் விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் பெருக்கெடுத்து ஓடுவதில் வியப்பென்ன ?

டி. கே. சி. யின் சமய ஞானத்தையும், தமிழ்க் கவிகளில் சமய உண்மைகளை வைத்து விஞ்ஞான நோக்கோடு விளக்குகிற திறத்தையும் தமிழ் நாட்டிலுள்ள எல்லா அறிஞர்களும் கேட்டு இன்புற்றிருக்கிறார்கள்.

திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள் முதலிய ஆதீன ஞானபீடங்கள் டி. கே. சி. யைஅடிக்கடி வரவழைத்துச் சமயம் பண்பாடு, சம்மந்தமான பாடல்களை விளக்கச் சொல்லிக் கேட்டு ஆனந்திப்பதுண்டு.

திருக்கோவலூர் ஞானியார் சுவாமிகள் சமயக் கலையின் உன்னத நிலைகளை அறிந்த உத்தம ஞானி என்று எல்லோராலும் போற்றப்பட்டவர்கள். கல்விக் கடலென்று பாராட்டப் பட்டவர்கள். அத்தகைய ஞானியார் சுவாமிகள் டி. கே. சி. எடுத்து விளக்கிய சமயப் பாடல்களைப் பல தடவை கேட்டு இன்புற்று "அடடா, முதலியார் அவர்கள் ஒருவர்தான் சமய உண்மையை நேருக்கு நேராகக் கண்டு அவற்றை மற்றவர்களுக்கும் தெளிவாய்க் காட்டும் பேறு பெற்றவர்கள்" என்று வாயாரப் பாராட்டி உள்ளார்கள்.

1926-ம் வருடம் டி. கே. சி. கன்னியாகுமரிச் சத்திரம் ஒன்றில் தங்கி இருந்தார்கள். டி. கே. சி எங்கு தங்கி இருப்பினும் நண்பர் குழாம் சூழ இருந்து பல்வேறு துறைகளைப் பற்றிய கவிகளைச் சொல்லச்சொல்லிக் கேட்டு இன்புறுவது வழக்கம். நாகர்கோவில் சத்திரத்திலும் அங்ஙனமே நண்பர் குழாம் கவிகளைக் கேட்டு ஆனந்திக்க டி. கே. சி. சொல்லிக் கொண்டிருந்தார்கள். சத்திரத்தில் வேறொரு அறையில் தங்கி இருந்த சந்நியாசி ஒருவர் (இவர் யாழ்ப்பாணம், சர். ராமநாதம் பிள்ளையின் நெருங்கிய உறவினர். ஆனந்த குமார சுவாமிக்கு மைத்துனர். தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், கிரீக், ஜர்மன் முதலிய மொழிகளை ஐயந்திரிபறக் கற்ற சகலகலா வல்லுநர்) தம் அறையிலிருந்தே டி. கே சி. யின் கவி இன்பத்தையும், கலை அழகையும் பருகிக்

கொண்டிருந்தார். அத்துடன், டி. கே. சி. தனியாக இருக்குங்கால் சந்திக்க வேண்டுமே என்று துடித்துக் கொண்டிருந்தார். ஒருநாள் அதிகாலையில் நண்பர்கள் வந்து சூழ்வதற்கு முன்பு சந்நியாசி டி. கே. சி. யிடம் வந்து தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டு கீழ்க்கண்டவற்றை எடுத்துச் சொன்னார். "நீங்கள் ஐந்து நாட்களாக நண்பர்களிடம் எடுத்துச் சொன்ன கவிகளையும், கவிகளைச் சமாதி நிலையிலிருந்து தன்னை மறந்த ஆனந்த தத்துவத்தோடு நீங்கள் அனுபவிப்பதையும் உங்கள் அனுபவ நிலைக்கு மற்றவர்களையும் அழைத்துப் போவதையும் கண் குளிரப் பார்த்தேன்; காதுகுளிரக் கேட்டேன். இறைவனுடைய திவ்ய தரிசனமும், ஆனந்த நடனமுமே உங்கள் மூலம் எனக்குக் கிடைத்துவிட்டது. நீங்கள் ஞானபீடமாக இருந்து அன்பர்களுக்குத் தொடர்ந்து கவிகளின் மூலம் இந்த தெய்வத் திருப்பணியை நடத்தி வரவேண்டும்."

டி. கே. சி. சகல சமயங்களிலும் உள்ள உண்மைகளை அறிந்து அனுபவித்தார்கள். அவர்களிடம் சமய பேதம் இல்லாதது மட்டுமல்ல ஒவ்வொரு சமய நூல்களிலும் உள்ள உண்மையை ஆர்வத்தோடு எடுத்து விளக்கி வந்தார்கள்.

நிலையாமையைப் பற்றி 1933 ம் வருடம் மயிலாப்பூரிலுள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தில் டி. கே. சி. பேச நேர்ந்தது. அவ்வமயம், "மின்னும் என உன்னுமுனம்" என்னும் சிதம்பர செய்யுட் கோவைப் பாடலொன்றை எடுத்து விளக்கி நிலையாமையை எவ்வளவு எக்களிப்போடு தமிழ் வெளியிடுகிறது என்பதைச் சுட்டிக் காட்டினார்கள். சமய உண்மையில் ஆனந்தம் ஒன்று தான் குறிக்கோள் என்பதை

யும் அழுத்தம் திருத்தமாக எடுத்து விளக்கினார்கள். டி. கே. சி. யின் சொற்பொழிவைக் கேட்டுக்கொண்டிருந்த ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்துச் சாமியார் தாரை தாரையாகக் கண்ணீர் விட்டு "இன்றுதான் எனக்குச் சமய ஞானமும் ஆனந்தமும் கிட்டியது" என்று சொன்னார்கள். அன்று முதல் டி. கே. சி. எந்தக் கூட்டத்தில், எந்தக் கலையரங்கத்தில் இருந்தாலும் அங்கே ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்து சாமி அவர்களும் இருந்து ஆனந்தம் அடைவார்கள்.

ஒரு தடவை தென்காசி முஸ்லீம் பெருமக்கள் நபி நாயகம் பெருநாள் கொண்டாடினார்கள். அதில் டி. கே. சி. யைப் பேசும்படி கேட்டிருந்தார்கள். டி. கே. சி. பந்தல் காலோடு கட்டி இருந்த வாழையைச் சுட்டிக் காட்டி வாழைக்குள்ளிருக்கிற அற்புத சக்தியைவிஞ்ஞான பூர்வமாக விளக்கி அதன் மூலம் சமய உண்மையைத் துலக்கிக் காட்டினார்கள். டி. கே. சி. யின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த முஸ்லீம் பெருமக்கள் அனைவரும் மெய்மறந்து பக்தியில் திளைத்தார்கள். கூட்டத்தில் வீற்றிருந்த ஜில்லா முன்சீபும் முஸ்லீம் கனவான். அன்று முதல் அவர்பல நண்பர்களுடன் டி. கே. சி. வீட்டிற்குத் தினமும் வந்து தமிழ்க் கவிகளைக் கேட்டு ஆனந்தித்தார்.

பாளையங்கோட்டை நூற்றாண்டு மண்டபத்தில் கிறிஸ்தவர்களின் மகாநாடு பல ஆண்டு கட்குமுன் நடந்தது. அதில் டி. கே. சி. யும் பேச நேர்ந்தது. ஏசுநாதருடைய உபதேச மொழிகள் சில வற்றை எடுத்து ரசிக மணி அன்று விளக்கினார்கள். கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய பாதிரியார் (இவர் ஆங்கிலேயர்) "கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரும் ஏசுநாதருடைய போதனைகளில் அடங்கி உள்ள

597
J5 O3I:bN821 ...
...SITY EXTENSIO...

உண்மைகளை திரு. டி. கே. சி. யிடம் கேட்டு அனுபவிக்க வேண்டும். அவ்வளவு தெளிவாய், இதய பூர்வமாய் உணர்ந்திருக்கிறார் டி. கே. சி. இதை நான் வெறும் உபசாரத்திற்குச் சொல்ல வில்லை. ஏசுநாதர் கிறிஸ்தவர்களுக்கு விளங்காமல் போய் விடக்கூடாதே என்று தான் சொல்கிறேன்."

வானமாமலை ஜீயர் சுவாமிகள், நான்குநேரி ஜீயர் சுவாமிகள் அடிக்கடி டி. கே. சி. யைவரவழைத்து ஆழ்வார்களின் பாசுரங்களை டி. கே. சி. யிடம் கேட்டு இன்புறுவார்கள். டி. கே. சி. யிடம் கேட்கிற பொழுதுதான் வைஷ்ணவ சமயத்தின் உண்மையும், பிரகாசமும் தெளிவாய்த் தெரிகின்றன என்று இரண்டு ஜீயர் சுவாமிகளும் பாராட்டி உள்ளார்கள்.

இவ்வாறு பல சமயங்களையும் ஐயம் திரிபறக்கற்று அவற்றில் உள்ள உண்மைகளையும், பண் பாட்டையும் எடுத்து விளக்கி வந்த டி. கே. சி. தமிழ்க்கலைகளை எவ்வளவு அருமையோடு பாதுகாத்து வளர்த்து வந்தார்கள் என்பதைச் சிறிது பார்ப்போம்.

# கலைத் தொண்டு

பரத நாட்டியம் தொன்று தொட்டு இன்றளவும் வளர்ந்து வந்துள்ள அற்புதக்கலை. பரத நாட்டியம் தமிழ்ப் பண் பாட்டையும், சமய ஞானத்தையும், பல கலைகளையும் அற்புதமான முறையில் வளர்த்து வந்துள்ளது. அத் தகைய பரத நாட்டியத்தின் மேன்மையையும், அருமை யையும் உணர்ந்த நம் முன்னோர்கள் கோயில்கள் தோறும் பரத நாட்டியம் நடைபெற்று வரத்தக்க ஏற்பாடுகள் செய்து, மானியமும் விட்டுப் பரத நாட்டியத்தைப் பேணி வந்திருக்கிறார்கள். கல்யாண வீடுகள் தோறும் அப்படியே பரத நாட்டியத்தை வைத்து மக்கள் அனுபவித்து ஆதரித்து வந்துள்ளார்கள். கோயில்களிலும், கோபுரங்களிலும் உள்ள எண்ணிறந்த சிற்பங்களையும், சித்திரங்களையும் பார்க்கிறவர் களுக்குத் தமிழ் நாடு இசையகமாய், கவியகமாய் எப்படி இருந்ததோ அப்படியல்லவா நடன அரங்காகவும் இருந்து வந்திருக்கிறது என்பதையும் தெரிந்து கொள்வார்கள்.

தமிழ் நாட்டிலுள்ள பரத நாட்டியம் இதயத்தில் கலை அழகை ஏற்படுத்திப் பக்தி வெள்ளம் பாயும் படி செய்யும் தெய்வத் தன்மை வாய்ந்தது. அத்தகைய புனிதமான, நடனக்கலை தமிழ் நாட்டில் எப்படியோ ஆபத்துக்கு உள் ளாகி இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டது. முப்பது ஆண்டுகளுக்குள்ளாக நடனக் கலைக்கு ஏற்பட்ட கேடு இவ்வளவு அவ்வளவல்ல. இளமை முதலே பரத நாட்டியத்தைப் பார்த்து அனுபவித்து அதில் உள்ளதெய் வீகத் தன்மையை அறிந்த டி. கே. சி. மறைந்து போன

நடனக்கலையை மீண்டும் தமிழ் நாட்டில் புத்துணர்ச்சியோடு தோன்றும்படி செய்தார்கள்.

நடனத்திற்கு உரிய பதங்களைப் பாடுகிறவர்களிடம் கேட்டுக் கேட்டுப் பதங்களைச் சேகரித்தார்கள்.

டி. கே. சி. யின் சலியாத முயற்சியின் மூலந்தான் இன்று தமிழ் நாடெங்கும் நடனக் கலையில் ஆர்வமும், விழிப்புணர்ச்சியும் ஏற்பட்டிருக்கின்றன. பெரிய பெரிய குடும்பத்துப் பெண்கள் எல்லாம் உண்மை உணர்ச்சியோடு அரும்பாடு பட்டு நடனக்கலையைக் கற்று வருகிறார்கள். நடனத்தைப் பார்த்து அனுபவிக்க வருகிற கூட்டத்திற்கு அளவே இல்லை என்று சொல்லி விடலாம்.

நாட்டியக்கலையின் இணை இல்லாத மேதை யாகிய ஸ்ரீமதி பால சரஸ்வதியைத் தமிழ் நாட்டிற்கு அறிமுகப் படுத்தி, பால சரஸ்வதியின் மூலம் நடனத்தின் தெய்வீகத் தன்மையையும், பக்திப் பரவசத்தையும் தமிழ் மக்கள் அனு பவிக்குமாறு செய்தவர்கள், டி. கே. சி. தான்.

டி. கே. சி. இந்து அறநிலையப் பாதுகாப்புக் கமிஷனராக இருந்த 1930-1935 வரை டி. கே. சி. வாரம் ஒருமுறை, அல்லது இரண்டு வாரத்திற்கு ஒருமுறை தம்முடைய வீட்டில் பால சரஸ்வதியின் நடனத்தைவைத்து நண்பர்கள் பலரையும் குடும்பத்தோடு வரவழைத்து அனுபவிக்கச் செய்வார்.

கலையோ பண்பாடோ எள்ளளவேனும் இல்லாமல் கூத்தாடுகிற ஆங்கில நடனத்தில் மயங்கிப் பரத நாட்டியத்தையே பார்த்திராத கனதனவான்கள் அவ்வளவு பேரையும் தமிழ் நடனத்தில் ஆசையும் பக்தியும் கொண்டு அனு பவிக்கச் செய்தவர் டி. கே. சி. ஆந்திர சர்வகலாசாலைத்

துணை வேந்தராய் இருந்த டாக்டர், சி. ஆர். ரெட்டி ஒரு நாள் டி. கே. சி. வீட்டிற்குத் தற்செயலாக வந்தார். அங்கு பாலசரஸ்வதியின் நடனம் நடை பெற்றுக் கொண்டிருந்தது. சி. ஆர். ரெட்டியும் நடனம் முடியும் வரை இருந்து பார்த்து விட்டு டி. கே. சி. யிடம் "ஐயா, இனிமேல் இத்தகைய நடனம் நடைபெறுகிற ஒவ்வொரு தடவையும் எனக்கும் தயவு செய்து அழைப்பு அனுப்புங்கள். நான் பார்க்கவேண்டும். இந்த நடனத்தில் அல்லவா கலை அழகு ஒளி விட்டுப் பிரகாசிக்கிறது" என்றார்கள்.

மறைந்துபோன நடனக் கலையைத் தமிழ் மக்களுக்குச் சீதனம் கொடுத்த மகான், என்றென்றும் நடனக் கலை நிலைத்து வாழ அதற்கு நிலையான பெருமையைக் கொடுத்துக் காப்பாற்றிய மகான், டி. கே. சி. நடனக் கலையை எத்தகைய பக்தி பூர்வமாக ஆதரித்து வந்தார்கள் என்பதற்குத் தம் நண்பருக்கு எழுதிய கடிதத்தின் மூலம் தெரிய முடியும்.

" தினம் காலைதோறும் குழந்தைகளிடம் பரத நாட்டியத்தைக் கற்று வருகிறேன். ஆடுவதற்காக அல்ல! அதன் அற்புதமான தத்துவங்களையும், சக்திகளையும் அறிந்து கொள்வதற்காகத்தான் பார்த்து வருகிறேன்.

"நம்முடைய நடனம்போல் உண்மைக்கு விளக்கம் கொடுக்கக்கூடிய நடனம் உலகத்திலேயே இல்லை. வேறு கலையே இல்லையோ - என்றுகூடச் சொல்லத் தோன்றும். அநேகமாக உண்மையும் அதுதான்.

"ஒரு இனத்தாருக்கு என்று வைத்து, கலையை ஒதுக்கி ஒழித்துவிட்டார்கள். ஒருகாலத்தில் கவியைக்கூட அப்படி எண்ணினார்கள் !"

தமிழ்நாட்டில் பரதநாட்டியக் கலை தேடுவாரற்று மறைந்துவிட்டது போன்று இசைக் கலையும் முப்பது ஆண்டுக் காலமாய் பாகவதர்களால் புறக்கணிக்கப்பட்டு மறைந்துவிட்டது. பரதநாட்டியக் கலையை ஆதரித்துத் தமிழகம் எங்கும் பரவித் தழைக்கச் செய்த ரசிகமணி தமிழிசைக்கும் அப்படியே புத்துயிரளித்துத் தமிழகம் எங்கும் ஒலிக்கச் செய்தார்கள்.

தமிழ்நாட்டில் பல்லாயிரக் கணக்கான வருடங்களாகத் தொடர்ந்து வளர்ந்து வந்துள்ளது இசை. தமிழிலுள்ள இசை கணக்கையும், வெறும் தடபுடல்களையும் அடிப் படையாகக்கொண்டு விளையப்பட்டதல்ல. தமிழ் மக்களின் இதய பூர்வமான பக்தி உணர்ச்சியிலிருந்தும், பண்பாட்டி லிருந்தும் விளைந்து வந்துள்ளது தமிழிசை. அத்தகைய தமிழிசையை - தமிழிலுள்ள கீர்த்தனைகள், பதங்கள், கண் ணிகள், வரிப் பாடல்கள், பாசுரங்கள் முதலிய ஆயிரக் கணக்கான இசைப் பாடல்களை இசை வல்லார்கள் நெடுங் காலமாய்ப் பாடி அனுபவித்து வந்துள்ளார்கள். தமிழ் மக்கள் அவ்வளவுபேரும் தமிழிசையில் திளைத்து ஆனந்தம் பெற்று வந்திருக்கிறார்கள்.

தமிழிசை மிகத் தொன்மையானது; என்றும் புதிய தாய்இன்பம் பயப்பது. தமிழ் மக்களின் இதயத்தைக் கரைத்துக் கனியச் செய்வது. அனுபவிப்பதற்கும் ஆனந் திப்பதற்கும் உரியது.

தமிழ் மக்கள் இசையைத் தமிழ்நாடு முழுவதும் ஆதரித்து வளர்த்து வந்துள்ளார்கள். கோயில்கள்தோறும் மேளம் ஒலிக்க மானியம்விட்டுக் காப்பாற்றி இருக்கிறார் கள். தேவாரம் திருவாசகம் போன்ற இசைப் பாடல்

களைப் பாடுவதற்கும் மானியம் வழங்கி இசையைக் காத்து வந்துள்ளார்கள்.

இறைவனைக் குறிக்கும்பொழுது "ஏழிசையாய் இசைப் பயனாய்" என்றும் "பண்ணவன்காண்" "வாயாரத் தன் அடியே பாடும் தொண்டர் இனத்தகத்தான்" என்றும் முன்னோர்கள் பாடி இருக்கிறார்கள் என்னின் தமிழிசையின் அற்புத சக்தியையும் அதைத் தமிழ் மக்கள் அனுபவித்து வளர்த்திருக்கிற பெருமையையும் நாம் தெரிந்து கொள்ளலாம் அல்லவா ?

ரசிகமணி டி. கே. சி. அவர்கள் கடந்த இருபதாண்டுகளாகத் தமிழிசையின் பெருமையையும், சிறப்பையும், அவசியத்தையும் தமிழ்நாடெங்கும் எடுத்து விளக்கி 1940 ம் வருடம் முதல் தீவிரமான முறையில் தமிழிசை இயக்கத்தை ஆரம்பித்து வந்தார்கள். 1941 ம் வருடம் தேவகோட்டையில் நடந்த தமிழிசை மகாநாட்டிற்குத் தலைமை வகித்த டி. கே. சி. தமிழிசையின் அவசியத்தையும் அற்புதத்தையும் விளக்கமாக எடுத்துச் சொல்லி பாகவதர்கள் தங்களுடைய அறியாமையையும், பிடிவாதத்தையும் விட்டுவிட்டு இசை மூலம் தொண்டு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள்.

டி. கே. சி. யால் ஆரம்பிக்கப்பட்டு வளர்க்கப்பட்ட தமிழிசை இயக்கத்திற்கு செட்டிநாட்டு வேந்தர் ராஜா. சர். அண்ணாமலை செட்டியார், கோவை, ஆர். கே. சண்முகம் செட்டியார், கனம். ராஜாஜி, கல்கி ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தி போன்ற பெரியார்களும், நாயன மன்னன் திருவாவடுதுறை ராஜரத்தினம்பிள்ளை, இசை அரசு. தண்டபாணி தேசிகர், ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலட்சுமி போன்ற இசை வல்லார்களும் ஆதரவு தந்தார்கள்.

5

டி. கே. சி. தமிழிசை இயக்கத்தில் ஈடுபட்டுச் செயலில் இறங்க இறங்க எதிர்ப்பும் வளர்ந்து வந்தது. தமிழ் நாட்டின் பிரபல தினசரி வாரப் பத்திரிகைகள் என்ன, செல்வாக்குள்ள கனவான்கள் என்ன எல்லோருமே எதிர்த்தார்கள்.

எதிர்ப்புக்கள் மலைமலையாய் வந்தாலும் அவைகளுக்கு எள்ளளவும் கலங்காமல் தமிழிசையைத் தமிழ்நாடு எங்கும் முழங்கச் செய்து, தமிழ் மக்களின் இதயமும், செவியும் குளிர தமிழிசைக்குப் புத்துயி ரளித்துவிட்டார்கள் டி. கே. சி.

எங்கு தமிழிசைக் கச்சேரி நடப்பினும் அங்கு டி. கே. சி. தலைமை வகிப்பதையும், தலைமை வகித்துத் தமிழிசையின் தெய்வீகத்தை எடுத்து விளக்குவதையும் பார்க்கலாம். 1944-ம் வருடம் முதல் முதல் நடைபெற்ற தமிழிசை விழாவிற்கு டி. கே. சி. தலைமை வகித்து அறிவுறுத்திய உண்மைகளை ஒவ்வொரு தமிழ் மகனும், படித்து இன்புறவேண்டும்.

தமிழிசை சம்மந்தமாக டி. கே. சி. சொல்லியதைப் பாருங்கள்.

"நான் ஆடம்பரமான வெற்றொலியில் மயங்கிவிட மாட்டேன். பாடுகின்ற பாட்டின் பொருள் பாடுகிறவர்களுக்கும் தெரிய வேண்டும். கேட்கிறவர்களுக்கும் தெரிய வேண்டும். அப்போதுதான் பாட்டிலே வருகிற பாவம் தெரியும். பாட்டையும் கேட்பவர் அனுபவிக்க முடியும்."

"நம்முடைய இசைக் கலையானது உலகத்தில் எங்கும் இல்லாத சிறந்த கலை. அதை இதுவரை பாகவதர்கள் கெடுத்தது போதும். இளைஞர்கள் முன்வந்து இசைக்

கலையை வளர்க்க வேண்டும். இப்போது நடமாடுகிற சங்கீதம் நம்முடைய உண்மைச் சங்கீதத்தின் போலி, கேலிக் கூத்து. அதை மீட்கவேண்டும். உண்மைச் சங்கீதம் தெய்வீக சங்கீதம் என்று காட்டவேண்டும்."

"பதங்களை உயர்ந்த பாவ உருவத்துக்காக - தெய்வத் தன்மை வாய்ந்தது என்று அனுபவிக்கிறேன். பக்தி உணர்ச்சியோடு கிளிக்கண்ணி, சித்தர் பாடல், காவடிச் சிந்து முதலியனவைகளைப் பாடினாலும் பரவசம் அடையத் தான் செய்கிறேன். ஆனால் சங்கதி சங்கதி என்று சுரங்களைக்கொண்டு கீச்சுக் கீச்சுத் தாம்பலம் விளையாடுகிறதை ரொம்ப அனுபவித்துவிட முடியாது. அதோடு அபசுரமும் சுருதி இன்மையும் சேர்ந்துவிட்டால் கேட்கவா வேண்டும்?"

டி. கே. சி. இசைக்கலை, நடனக்கலை இவற்றிற்கு எவ்வாறு புத்துயிரளித்துக் காப்பாற்றினார்களோ அவ்வாறே வசன இலக்கியத்திற்கும் புத்துயிரளித்துக் காப்பாற்றினார்கள். சுமார் இருபது முப்பது ஆண்டுகட்டு முன்பு தமிழகத்தில் வசன நூல்கள் விரல் விட்டு எண்ணத் தக்க அவ்வளவு குறைவாக இருந்தன. அவற்றிலும் சில நூல்கள் ஒரே வடமொழி வார்த்தைகளாக இருந்தன. பல நூல்கள் புரியாத வழக்கொழிந்த கொடுந்தமிழ்ச் சொற்களாக இருந்தன. மேலே குறிப்பிட்ட இரண்டு வகை வசன நூல்களிலும் வாக்கியங்களோ ஆங்கில முறையில் சுற்றி வளைத்து எதையும் தெளிவு படுத்தாத கோணல் மயமாகவே இருந்தன. வாக்கியங்களுக்கு முடிவோ, மூலமோ, கருத்தோ, பொருளோ தேவை இல்லை. வேண்டாத தடபுடல்களும் வெற்றுரைகளும் தான் அவற்றில் ஒலிக்கும்.

சிறந்த அறிஞர்கள் பலர் தமிழ் வசனத்தின் அலங் கோலத்தைக் கண்டு வருந்தினார்கள். அருவருப்புற்றார்கள். மற்றும் பலர் கரடு முரடான தன்மை தான் தமிழ் வசனத் தின் தன்மைபோலும் என்று ஒதுங்கியே விட்டார்கள். இந்த நிலையில் ரசிக மணி வந்து தித்திக்கும் செந்தமிழ்ச் சொற்களில் சரளமான வாக்கியங்களைத் துண்டு துண்டாக நின்று ஒலிக்கச் செய்யும் நயமான வசன இலக்கியத்தை உண்டாக்கித் தமிழை வளமைப் படுத்தினார்கள். தமிழ் வசனத்தின் நுட்பமான அரிய உண்மைகளை எடுத்தாள முடியாது என்று நினைத்திருந்தவர்கள், டி. கே. சி. யின் வசன நடையைப் பார்த்து மூக்கின் மேல் விரலை வைத்தார் கள். எவ்வளவு ஆழமான தத்துவ நுட்பங்களையும் தெளி வாய் எடுத்து விளக்குவதற்குத் தமிழ் தான் தகுதியான மொழி என்று பலர் சொல்லி விட்டார்கள். அது மட்டுமா, ரசிக மணியின் வசனப் படைப்பின் மூலம், உலகத்திலுள்ள நயமான, பதம்பட்ட (வசன) மொழிகளில் தமிழும் ஒன்று, தமிழ் வசனமே வேறு எந்த மொழியினும் சாலச்சிறந்த குறியீடுகளும், வழக்கும், மரபும் கொண்ட மொழியாகும் என்று பல அறிஞர்கள் எடுத்துக் காட்டவும் ஏதுவாக இருந்தது.

டி. கே. சி. அவர்கள் எத்தகைய நுட்பமான ஆழ்ந்த தத்துவ உண்மைகளை எடுத்து எழுதினாலும் சிக்கலில் லாமல், நேருக்கு நேர் நின்று வாசகர்களிடம் சொல்லி விளக்குவது போன்றிருக்கும்.

உயிர்த்துடிப்போடு கூடிய வார்த்தைகளைச் செட் டோடு நறுக் நறுக்கென்று எடுத்தாளுகிற ரசிக மணியின் வசனம் சிக்கலை உதறி உதறி எடுத்துத் தமிழ் மொழியை அருமையோடு கோதிக்கொடுக்கிற சாயல் பெற்றது.

# கடித இலக்கியம்

டி. கே. சி. தம்முடைய பலதிறப்பட்ட நண்பர்களுக்கும் எழுதிய கடிதங்களை ஒன்று சேர்த்தால் பல தொகுதிகளாக வெளியிடலாம். ஒவ்வொரு கடிதமும் நுண்ணிய ஆழமான பல உண்மைகளைத் தெள்ளத் தெளிந்த சீரிய வார்த்தைகளில் வெளியிடும் அற்புத இலக்கியங்கள்.

தமிழ் மக்களின் பண்பாடு, சமயம், இசை, நடனம், கவிப்பாங்கு, பழக்க வழக்கங்கள் அவ்வளவையும் அலசி அலசி முடிவுகட்டிய தீர்மானங்களை எளிமையாக வெளியிடுகிற மகானுடைய நூலை ஒவ்வொரு வரியும் ரீங்காரம் பண்ணிக்கொண் டிருக்கும்.

தற்காலத்திய விஞ்ஞானக் கலை, சரித்திர ஆராய்ச்சி, தத்துவ இயல் முதலிய பல துறைகளைப்பற்றியும் டி. கே. சி. யின் கடிதங்கள் அருமையோடு விளக்குகின்றன.

தமிழ் மொழியின் வளமும் பெருமையும் டி. கே. சி. யின் கடிதங்களில் கும்மாளி போட்டுக் களி நடம் புரிகின்றன.

தமிழ் நாட்டில் கடிதம் எழுதுவதை இலக்கியக் கலையாக, எத்தகைய உண்மையையும் அருமையோடும் எளிமையோடும் எடுத்து விளக்கும் இலக்கிய சாதனமாகப் படைத்து அதில் மகத்தான வெற்றியைக் கண்டவர் டி. கே. சி.

டி. கே. சி. இரவு பன்னிரண்டு மணிக்கு மேலாகத்தான் நண்பர்களுக்குக் கடிதம் எழுதுவது வழக்கம். அமைதியும், நிறைவும் கொண்ட சாந்த வேளையோடு, அவர்களுடைய தெய்வீக இதயம் கலந்து கரைந்து எழுத்

துக்களாய், முத்துக் கோத்தாற்போலக் கடிதங்களாக உருவெடுத்தன.

தமிழன்னையின் கழுத்தில் டி. கே. சி. யின் கடித இலக்கியமும் சிறந்த ஒரு முத்தாரந்தான்.

டி, கே. சி. க்கே உரிய தாளப் பண்போடு ஒலிக்கும் வசன நடையை, நேருக்கு நேர் நின்று பேசுவதை ஒத்த முத்திரைகொண்ட வசன நடையை அவர்கள் எழுதிய ஒவ்வொரு கட்டுரையிலும் பார்க்கலாம். ஒவ்வொரு கடிதங்களிலும் பார்க்கலாம்.

இதய ஒலி, கம்பர் யார், அற்புத ரசம் முதலிய நூல்கள் அவர்களுடைய வசனப் படைப்பிற்கு எடுத்துக் காட்டுக்கள். கம்பர் தரும் ராமாயணம், முத்தொள்ளாயிரம், தமிழ்க் களஞ்சியம்* முதலிய நூல்களிலும், அவர்களுடைய வசனத்தின் பெருமையைப் பார்க்கலாம். எத்தனையோ நூல்களுக்கு அவர்கள் எழுதி உள்ள முகவுரைகளிலிருந்தும் அவர்களுடைய வசனநடையையும், தமிழில் எவ்வளவு அற்புதமான சக்தியோடு வசனத்தை அவர்கள் படைத்துக் கொடுத்தார்கள் என்பதையும் பார்த்து அனுபவிக்கலாம்.

ரசிகமணி அவர்கள் "தமிழில் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாகவே வசனம், தெளிவான, சீரிய நிலையில் இருந்து வந்ததென்றும், தமிழ் வசனத்தின் ஆற்றலை மக்கள் பேசுகிற சாயலில் பார்த்தால்தான் தெரிய முடியும் என்றும், மக்களுக்குப் புரியாத முறையில் எழுதுவதுதான் வசனம் என்கிற கொள்கையைச் சிலர் பின்பற்றியதால்தான் தமிழில் வசன இலக்கியம் மங்கியது" என்றும் அடிக்கடி சொல்வார்கள்.

---

* இன்னும் அச்சில் வரவில்லை.

# விருந்தோம்பல்

டி. கே. சி. யோடு எப்பொழுதும் பதினைந்து இருபது பேர்கள் இருப்பார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையில் இறங்கி வேலை செய்கிறவர்கள். அவ்வளவு பேரும் தம்மை மறந்து லயிக்கும்படி கவிகளை எடுத்துப் பாடி விளக்கிக்கொண்டிருப்பது டி. கே. சி. யின் வழக்கம். புதிது புதிதாகத் தினந்தோறும் பல நண்பர்கள் வருவது உண்டு. இருக்கிற அன்பர், வருகிற அன்பர் அவ்வளவு பேரையும் அன்பாக விசாரித்து விருந்துபசாரம் நடத்தி வைக்கிற அரிய பண்பாடு டி. கே. சி. க்கே உரிய தனிப் பண்பாடு.

எந்த வேளையில் எத்தனை பேர்கள் எதிர்பாராத விதமாக டி. கே. சி. வீட்டிற்குப் போனாலும் சரி, அத்தனை பேரையும் மரியாதை நிறைந்த, மனப்பூர்வமான, மலர்ந்த முகத்தோடு வரவேற்று, அவர்களை விருந்தோம்பி உப சரிக்கிற அற்புத இயல்பு டி. கே. சி. யின் பிறவிக் குணம்.

மலேயாவில் வாழ்ந்துவரும் அன்பர் ஒருவர் எழுதி இருப்பதைப் பாருங்கள் :

"டி. கே. சி. வீட்டு உபசாரம் என்று ஒரு பழ மொழியையே சிருஷ்டித்துவிடலாம். ஏனென்றால் அதை விடச் சிறப்பாக எங்கும் யாரும் உபசரித்துவிட முடியாது. தெரிந்தவர்களானாலும் தெரியாதவர்களானாலும் படித்தவர் களானாலும் படிக்காதவர்களானாலும் பணக்காரர்களா லும் ஏழைகளானாலும் அங்கு நிச்சயமாகச் சமதையான வரவேற்பும் விருந்தும் உண்டு. அங்கு சென்றால் வாரக் கணக்கில்கூட அங்கேயே தங்கிவிடத் தோன்றும். பல நாட்களுக்குப் பிறகு விடைபெற்றுக் கிளம்பினாலும் "இன்

னும் இரண்டு நாட்கள் இருந்துதான் போகவேண்டும்" என்று வற்புறுத்தாமல் இருக்கமாட்டார். அந்த அன்பையும் தமிழ் மணங்கமழும் சூழ்நிலையையும் பிரிந்துவருவது சாமான்யமான காரியமல்ல. விருந்தினர் இல்லாத நாள்தான் டி. கே. சி. க்குக் கஷ்டமான நாட்கள். குற்றாலத்தில் டி. கே. சி. வீடு கல்யாண வீடுபோல இருக்கும். தினந்தோறும் விருந்தினர்கள் வருவார்கள். தமிழையும் உணவையும் ஒருங்கே ஊட்டும் திருமனை டி. கே. சி. இல்லம்.

"டி. கே. சி. யைப் பார்க்கப் போகிறவர்கள், அவரோடு பணக்காரர்களும், படிப்பாளிகளும் பெரிய அந்தஸ்தில் உள்ளவர்களும் அமர்ந்திருக்கும் பொழுதுதான் பார்க்கப் போகவேண்டும் என்று நான் அடிக்கடி கூறுவேன். அப்பொழுதுதான் அவருடைய பெருங் குணத்தையும் உபசரிப்பையும் நன்ருக அறிய முடியும். எல்லோருடனும் சமதையாக நடத்துவது மட்டுமன்றி, சாதாரண சமயங்களைவிட அந்தச் சமயத்தில் அளவுக்கு மீறிய கௌரவம் கொடுப்பார். இந்த ஒப்பற்ற பெருந்தன்மை டி. கே. சி. யைத் தவிர வேறு எந்தப் பணக்காரரிடத்திலும், மிராசுதாரிடத்திலும் இருந்ததும் இல்லை. இருக்கப்போவதும் இல்லை என்று டி. கே. சி. யை எல்லோரும் ஒருமிக்கக் கூறுவர்."

மேலே உள்ள வாக்கியங்களை எழுதியதுதான் மலேயாவில் வாழ்ந்துவரும் தமிழறிஞரும் தமிழன்பருமாகிய, கு. அழகிரிசாமி ஆவார். ஆனால் அன்பர் சொல்லியதை ஏற்கனவே வாயாரச் சொல்லிச் சொல்லி அனுபவிக்கிறவர்களோ டி. கே. சி. யோடு பழகிய அவ்வளவு பேருமேதான்.

# கவிஞர் டி. கே. சி.

டி. கே. சி. கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த காலம் முதற்கொண்டே பாடல்கள் பல பாடி இருக்கிறார்கள். வெண்பா, விருத்தம், கட்டளைக்கலித்துறை போன்ற பல பாவினங்களைக் கையாண்டு தமிழ்ப் பண்பும் தாளப் பண்பும் செறிந்த பல பாடல்கள் எழுதி இருக்கிறார். பாடல்கள் ஒவ்வொன்றும் இதய பாவத்தை உணர்ச்சி பூர்வமாக எடுத்து வெளியிடுகின்ற அற்புத சிருஷ்டிகளாகும். இது போக, யமகம், சிலேடை முதலிய சொற் சிலம்புகளாகிய கரடுமுரடான பல பாடல்களை அனுயாசமாக இயற்றி அக் காலப் புலவர்களைத் திணறடித்தவர் டி. கே. சி.

வெள்ளகால், **V. P.** சுப்பிரமணிய முதலியார், குன்னியூர், குமாரசுவாமி முதலியார், அழகிய சொக்கநாத பிள்ளை, கந்தசாமிக் கவிராயர், சாவடிப்பிள்ளை, கோமதிநாயகம் பிள்ளை போன்ற தமிழ்க் கவிராயர்கள் அக்கால இளைஞராகிய டி. கே. சி. யின் பாடல்களைக் கண்டு வியந்து பெருமூச்சு விட்டிருக்கிறார்கள்.

நினைத்ததை நினைத்தவாறு பாடவல்ல டி. கே. சி. அவர்கள் கம்பர், முத்தொள்ளாயிரம், மாணிக்கவாசகர் பாடல்கள் முதலியவற்றை அனுபவித்து அவற்றில் ஈடுபட ஈடுபடக் கவிபாடுவதையே நிறுத்திவிட்டார்கள். சூரிய ஒளிக்கு முன்பாக மின்மினி எவ்வாறு வெளிச்சம் போட முடியும் என்று அவர்கள் சொல்வதுண்டு.

# ரசிக சிகாமணி

சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு மேற்பட்டுத் தமிழி லுள்ள அவ்வளவு கவிகளேயும் கற்று, அனுபவித்து, ஆனந் தத்தை மக்களெல்லாரும் பருகும்படி செய்த பெருமை டி. கே. சி. க்கே உரியது. காலே ஆறுமணியிலிருந்து இரவு பன்னிரண்டு மணிவரை கவிகளே, நாட்டுப் பாடல் முதல் பூர்வீகமான பழம் பாடல்கள் முடிய அவ்வளவையும் அன்பர்களுக்கு வாரி வழங்கிக் கொண்டிருப்பதுதான் டி. கே. சி. யின் தொழில்.

டி. கே. சி. யின் மூலமாகத்தான் எல்லோரும் கவி யைப் படித்து ஆனந்தம் பெறவேண்டும் ஆனந்தம் பெற முடியும் என்னும் நிலே தமிழ் நாட்டில் ஏற்பட்டது.

தளர்ந்து தள்ளாடிய காலத்திலும், கடைசி மூச்சு உள்ள வரையிலும் கவியையே பாடிப் பாடி ஆனந்த மடைந்து மற்றவர்களேயும் ஆனந்தம் அடையச் செய்தவர். டி. கே. சி. க்குக் கவிதான் சஞ்சீவி, சத்தளிக்கும் அமிர்தம். அவர்களிடம் கேட்டு ரசிக்கும் அன்பர்களுக் கும் அப்படித்தான்.

கவி என்றால் ஆனந்தத்திலிருந்து பிறக்கவேண்டும். ஆனந்தத்திலிருந்து பிறக்கிற விஷயம் சிறியதாயினும், பெரியதாயினும் அவை கலேயாகிவிடும். கலேகளிலெல் லாம் மிக உன்னதமான கலே கவி என்று அடிக்கடி டி. கே. சி. சொல்வார்.

கவி ஒன்றுதான் டி. கே. சி. யின் உண்மையான சமயம். கவி ஒன்றில்தான் டி. கே. சி. எங்கும் நிறைந்த

பரம்பொருளைத் தரிசித்துப் பேரின்பம் பெறுவது. கவி அனுபவத்தை இறைவனோடு தோயும் சமாதி நிலையாக்கி அதன் மூலம் குறைவற்ற ஆனந்த நிலையைக் கண்டவர் டி. கே. சி.

கவிகளின் மூலம் உணர்த்த முடியாத தத்துவங்களோ நுட்பங்களோ ஒன்றும் இல்லை. கவியின் மூலம் ஏற்படுகிற தெளிவிற்கும் ஆனந்தத்திற்கும் ஈடாக எதையுமே சொல்ல முடியாது.

வேறு எதனாலும் சுட்டிக்காட்ட முடியாத உண்மையைக் கவி சுட்டிக் காட்டுகிறது. எதைக் கவி சுட்டிக் காட்ட வந்ததோ அதைத் தெரிந்துகொள்கிறார் டி. கே. சி. தெரிந்த உண்மையைப் பக்குவமாகச் சொல்லிவிடுகிறார். பிறகு கவியை வளைத்து வளைத்துச் சுகமாகப் பாடிக் கொண்டே இருப்பார்.

கவியைப் பாடுகிறபொழுது டி. கே. சி. யின் உணர்ச்சி மட்டும் அல்ல, அவர் உடலிலுள்ள ஒவ்வொரு அங்கங்களும் இசை மலர்களாகப் பூத்துவிடும். நடன மலர்களாகவும் பூத்துவிடும்.

"கவிக்குள் பொதிந்து வைத்துவிட்டால் எந்தப் பொருளும் பழுதுபடாமல் இருக்கும்."

"ரசிகர் என்றால் தேன் வண்டைப் போல் அனுபவிப்பதுதான். மறுபடியும் மறுபடியும் புஷ்பத்தில் வந்து விழவேணும். கவியை விட்டு நம்மால் போக முடிகிறதா, இல்லை."

"தங்கள் வாழ்த்துப் பாவை இந்திரா என்னும் பத்திரிகையில் பார்த்தவுடன் எனக்கு அபூர்வமான மன எழுச்சி

உண்டாயிற்று. அடடா, தமிழ் எவ்வளவு அருமையான பாஷை!"

முதலிய டி. கே. சி. யின் பொன்மொழிகள் அவர்களுக்குக் கவியிலும், தமிழிலும் அளவு கடந்திருந்த பக்தியையும், ஆனந்த அனுபவத்தையும் புலப்படுத்தும்.

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்களுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் முடிக்கிறபொழுது,

"தங்களுக்கு உடம்பு சௌகரியமாய் இருக்குமென்று நம்புகிறேன். தமிழர்களின் பிரார்த்தனைகளில் இது ஒன்று" என்று அன்போடு குறிப்பிடுகிற மகானுக்கும் கவிக்கும் அல்லவா ஆனந்த உறவு இருக்க முடியும்.

டி. கே. சி. யின் நண்பர்களில் ஒருவருடைய மகள் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தாள். அந்தப் பெண் டி. கே. சி. யின் பேத்தியாகிய பிச்சம்மாளுக்கு ஒரு கடிதம் எழுதி இருந்தாள். (1945-ல்) கடிதத்தை டி. கே. சி. யும் படித்துப் பார்த்தார்கள். தமிழும், விஷயமும் கடிதத்தில் அழகாய் வந்திருந்தன. உடனே கடிதம் எழுதிய பெண்ணிற்கு டி. கே. சி. யே ஒரு கடிதம் எழுதிவிட்டார்கள். அந்தக் கடிதம் எப்படி முடிகிறது என்று பாருங்கள்.

"பிச்சம்மாளுக்கு நீ எழுதிய கடிதத்திலிருந்து நல்ல முறையில் கடிதம் எழுதுவதற்கு யுக்தி இன்னதென்று தெரிந்துகொண்டேன். யாருக்கு எழுதுகிறோமோ அந்த ஆசாமியைக் கண்முன் நன்றாய் இருத்திக் கொள்ளவேண்டும். பிச்சம்மாளை அப்படி நீ இருத்திக் கொண்டாய். கடிதம் அற்புதமாய் வந்துவிடுகிறது.

"ஆனால் இது வெண்ணெய் வைத்துக் கொக்குப் பிடிக்கிற காரியந்தான். மனக்கண்ணுக்குள் "இரு" என்றால் யாராவது இருந்து விடுவார்களா, மாட்டார்கள். அதற்குரிய சாதனம், பக்குவம், அன்பு, அருமை எல்லாம் நம்மிடத்தில் இருந்தால்தானே, அவர்கள் இருப்பார்கள். உன்னுடைய உள்ளத்தில் அதெல்லாம் வேண்டிய மட்டும் இருக்கிறது. பிச்சம்மாள், நான் எல்லாரும் "இரு" என்றால் அப்படியே இருந்துவிடுகிறோம். இப்படித்தான் மாணிக்கவாசகர், சுந்தரர், பொய்கை ஆழ்வார் முதலிய பக்தர்கள் "இரு" என்றால் இருந்துவிடுகிறான் இறைவன். அவனது அருள் பாலிப்பதாக உனக்கு."

கடிதத்தைப் படிக்கப் படிக்க மண்ணுலகத்திலிருக்கிற நம்மை வானுலகிற்குக் கொண்டு போய் ஆனந்தமாக எங்கெங்கோ சுற்றிக் காட்டுவது போலிருக்கிறது. ஆனந்த பரவசத்தை உண்டாக்கும் ரசிகமணியின் கவி அனுபவம். தன் பேத்தியை ஒத்த சின்னஞ்சிறு பெண்ணின் எழுத்தை அனுபவித்து, அனுபவத்தை வெளியிடுகிற காலைத் தம்மையும் மறந்து, பெண்ணையும் மறந்து தமிழை அல்லவா காட்டுகிறார்கள்.

கவியை அனுபவிக்கிறது ஒரு வகை, கவிக்குப் பதவுரை பொழிப்புரை கொடுத்து அக்கு அக்காய்ப் பிரித்துக் காட்டி விளக்குவது ஒரு முறை. பின் சொல்லிய முறை எல்லோராலும் பின் பற்றக்கூடிய, பொதுமுறை. ஆனால் முதலில் குறிப்பிட்ட முறை அபூர்வமானது. உண்மை ஞான, இதய பக்குவமும் கொண்ட அருளாளர்களுக்கு மட்டுமே சித்திக்கக்கூடியது. கவியின் ஆனந்த நிலைபெற்று அதை மற்றவர்களுக்கும் வாரி வழங்குவதென்றால் அது வெறும் புத்

தகப் படிப்பால் மட்டும் ஏற்படுவதல்ல. இறைவனுடைய திருவருளால், அன்னை கலைமகளின் கடாட்சத்தால் ஏற்படக் கூடிய வரப்பிரசாதம், அன்னை கலைமகளின் கடாட்சம் கிடைக்கவேண்டுமானால் எத்தனையோ பிறவிகளில் முயன்று முயன்று பெற்ற இதய பக்குவமும், பண்பாடும் நிரம்பி இருக்கவேண்டும். அத்துடன் இதயத்தில் அருள் வெள்ளம் பொங்கித்ததும்ப வேண்டும். கள்ளங்கபடமற்ற சத்தியம் நிறைந்து விளங்கவேண்டும்.

டி.கே.சி.க்கு இணையில்லாத கல்வி அறிவும் இருந்தது. அன்னை கலைமகளின் கடாட்சமும் நிறைய இருந்தது. அதனால்தான் தமிழ்க்கவிகள் அவ்வளவையும் கற்றுப்பதவுரை சொல்வதை விட்டு விட்டுக் கவியின் லட்சியத்தை ஆனந்தத்தை அனுபவிக்க முடிந்தது. அனுபவித்த ஆனந்தத்தை மக்களுக்கு வழங்கவும் முடிந்தது.

# அருட் செல்வர்

டி. கே. சி. யின் சத்திய வேட்கையும் நீதிநெறியில் திளைத்த நிலைமையும் யாவரும் அறிந்ததே. டி. கே. சி. யைப் பார்த்த உடனேயே அவருடைய சத்திய நிலை அப்படியே முகத்தில் காந்தியோடு பிரகாசிப் பதைப்பார்க்கலாம். டி. கே. சி. யின் பேச்சைக் கேட்கிறபொழுதும், எழுத்தைப் படிக்கிறபொழுதும் உண்மை ஆனந்தத்தோடு விஸ்வரூபம் எடுக்கிற அற்புதம் தெரிந்து விடும். பழகப் பழக நாம் டி. கே. சி. என்கிற மனிதரோடு பழகவில்லை, எங்கும் நிறைந்த ஆனந்த மயமான தருமதேவதையோடு பழகுகிறோம் என்பது எளிதாய் விளங்கி விடும்.

கெய்த்தான் என்னும் அமெரிக்க நாட்டைச் சேர்ந்த பாதிரியார் ஒருவர் முதல் முதல் டி. கே. சி. யைச் சந்திக்க வரும்பொழுது அறுபதடி தூரத்திற்கு அப்பாலிருந்தே "எங்களுடைய நாட்டிலும் ஐரோப்பா முழுவதிலும் இவ்வளவு தெய்வ ஒளிவீசும் திருமுகம் படைத்தவர்கள் யாரும் இல்லை. இந்த மனிதர் பெரிய சத்தியசீலர் என்பதையும், கலை நலம் தோய்ந்த உண்மை ஞானி என்பதையும் இவருடைய திருமுக ஒளியே எடுத்துக் காட்டுகிறது" என்று நண்பரிடம் சொன்னார்.

சுமார் முப்பது ஆண்டுகட்கு முன்பு டி. கே. சி. யின் தமையனார் குமாரர் டி. கே. சி. யின் மேல் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தொடர்ந்திருந்தார். டி. கே. சி. நீதியான முறையில் தமக்குரிய சொத்தைப் பாகம் செய்து கொடுக்கவில்லை என்பது வழக்கு. நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு வந்தது. டி. கே. சி. விசாரிக்கப்பட்டார். அப்பொழுது நீதிமன்றத்தில் டி. கே. சி. "நீதிபதியவர்களே நான் வைத்திருக்கும் சொத்துக்கள் அவ்வள

வையும் தங்களிடமோ, வழக்குத் தொடர்ந்திருக்கும் என் (தமையனர்) குமாரனிடமோ இப்பொழுதே ஒப்படைத்து விடுகிறேன். தேவையான சொத்தை எடுத்துக்கொண்டு மீதத்தை எனக்குக் கொடுத்தால் போதும்'' என்று சொன்னர்.

நீதிபதி, வழக்கறிஞர், வழக்குத் தொடர்ந்தவர், பொதுமக்கள் யாவரும் டி. கே. சி. யின் வாய்மொழியைக் கேட்டுத் திகைத்து விட்டார்கள். இருபதாம் நூற்றாண்டிலும் இப்படியும் ஒரு தருமசீலர் வாழ்கின்றாரே என்று வியந்தார்கள். வழக்குத் தொடர்ந்தவருக்கு ஆஜரான வழக்கறிஞரோ டி. கே. சி. போன்ற அருளாளரைப் பார்க்கமுடியாது என்று போற்றினர்.

சுமார் ஐந்து ஆண்டுகட்கு முன்பு இருபத்தைந்து வயதுள்ள வாலிபர் ஒருவர் டி. கே. சி. வீட்டிற்கு வந்தார். ஆசாமியின் நடை உடை பாவனை அவ்வளவும் அவர்யோக்கியப்பொறுப்பற்றவர் என்பதை நெற்றியில் எழுதி ஒட்டியவை போன்றிருந்தன. அந்த வாலிபரை டி. கே. சி. மரியாதையாக வரவேற்று, உபசரித்து, சாப்பிடச்செய்து அதன் பின்பு ஊர்பேர் விசாரித்தார். ஆசாமி "தான் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவரென்றும், திருவனந்தபுரத்தைப் பார்க்கப் போனதாகவும்,' கொண்டு வந்த பணம் அவ்வளவும் செலவாகி விட்டதென்றும், தங்களைப் பார்த்தால் உதவி கிடைக்குமென்று சிலர் சொல்லியதாகவும், அதன் பேரில் இங்கு வந்ததாகவும்'' சொல்லி முடித்தார். "அப்படியா, அடடா என்று டி. கே. சி. சிரித்துக்கொண்டே தம் காரியதரிசியைப் பக்கத்தில் அழைத்துக் காதோடு காதாக ஏதோ சொன்னர். ஐந்து நிமிடங்களில் ரூபாய் வந்து விட்

டது. டி. கே. சி. அந்த வாலிபரிடம் இருபத்தைந்து ரூபா யையும் கொடுத்து, ஆசியோடும் அன்போடும் வழி அனுப் பினர்.

பக்கத்திலிருந்த நான் "அந்த ஆசாமி போக்கிரி போலல்லவா தோன்றுகிறார். அவருக்கா இவ்வளவு மரி யாதையும் கொடையும்" என்று டி. கே. சி. யிடம் கேட்டேன். "போக்கிரி என்பதை நான் தெரிந்து கொண்ட காரணத்தால்தான் அவ்வளவு மரியாதையும் அவருக்கு நான் செய்தேன். நான் இருபத்தைந்து ரூபாய் கொடுத்து விட்டதால் இப்பொழுதே ஆசாமி ரயி லேறி விடுவார். இல்லா விட்டால் குற்றாலத்திலிருக்கிற ஒவ்வொரு வீட்டாரையும் அல்லவா பணம் வேண்டும் பணம் வேண்டும்என்று சங்கடப்படுத்திக்கொண்டிருப்பார். மற்றவர்கள் துன்புறவேண்டாமே, நம்மிடமும் பணம் இருக்கத்தானே செய்கிறது. இவற்றைக் கருதித்தான் அவ ருக்கு மரியாதை செய்தேன்" என்று சொல்லி டி. கே. சி. சிரித்தார்கள். டி. கே. சி. யின் அருளுள்ளம் மென்மைக்கும் மென்மையான பூவுள்ளம் என்று தெரிகிறதல்லவா!

# சோகத்தில் புரண்டார்

1930முதல்1935 வரை இந்துமத தர்மபரிபாலன கமிஷனராக இருந்து விட்டு டி. கே. சி. வண்ணார்பேட்டைக்கு வந்து விட்டார்கள். வண்ணார்பேட்டையில் தம் இல்லத்தில் "வட்டத்தொட்டி" என்னும் தமிழ்ச் சங்கத்தை வைத்துத் தமிழ் நாடெங்கும் தமிழ் மணம் கமழச் செய்தார்கள்.

1938ம் வருடம் தம் ஒரே குமாரன் திரு. செல்லையாவுக்குச் சென்னை வானொலி நிலயத்தில் வானொலிப் பத்திரிகையின் உதவிஆசிரியர் பதவி கிடைத்ததால் மறுபடியும் டி. கே. சி. மகனோடு சென்னை வந்து விட்டார்கள்.

திரு. தீத்தாரப்பன் அவர்கள் வானொலி உதவி ஆசிரியராக இரண்டாண்டுகள் இருந்து தமிழ், இசை, நடனம் முதலிய நுண்கலைகளுக்கு அரிய சேவை செய்து கொண்டிருக்கும் போதே பாவி எமன் கொஞ்சங் கூட நீதி இல்லாமல் திரு. தீத்தாரப்பன் உயிரைக் கொண்டுபோய் விட்டான். சில மாதங்களாகப் படுத்த படுக்கையாக நோய் வாய்ப்பட்டு வதங்கிய திரு. தீத்தாரப்பன் உயிரை 15—3—41ல் எமன் பறித்துக் கொண்டு போய் விட்டான்.

திரு. தீத்தாரப்பனுடைய தந்தையும், தமிழ்த் தந்தையுமாகிய ரசிகமணி சோகத்தால் துடி துடித்து இருந்தினார்கள்.

# ஆறுதல் தந்த மருந்து

குடும்பத்திற்கு ஒருமகனாகிய தம் செல்வப் புதல்வன், கலையும், கல்வியும், பண்பாடும் நிறைந்த முப்பத்தைந்து வயது நிரம்பிய அருமைப் புதல்வன், மூன்று புதல்வர்களையும், ஒரு புதல்வியையும், அருமை மனையாளையும் விட்டு விட்டு வானுலகு சென்றால் யார்தான் பொறுக்க முடியும்? டி. கே. சி. யும் அவருடைய தர்ம பத்தினியும் கதறிக் கண்ணீர் சிந்தினார்கள்.

இரண்டரைக் கோடித் தமிழ் மக்களுக்கும் தமிழ்ப் பண்பாட்டிற்கும், தமிழ் மொழிக்கும் அருமைத் தந்தையாகிய டி. கே. சி. யை விருந்தோம்பல் என்னும் பண்பாடும், அன்பர்களுக்குக் கவி மழை பொழிந்து ஆனந்த வெள்ளத்தைப் பாய்ச்சும் தெய்வீக இயல்பும்தான் புத்திர சோகத்திலிருந்து காப்பாற்றியது.

**1941**-ம் வருடம் முதல் டி. கே. சி. திருக்குற்றாலம் வந்து, தம் தர்மபத்தினியோடும், மூன்று பேரன்மார், ஒரு பேத்தி இவர்களோடும் தங்கி வாழ்ந்து வந்தார்கள். திருவிழாக்கூட்டம் போன்று டி. கே. சி. யை நாடித் தமிழ் அன்பர்களும், கலை அன்பர்களும் வந்து பலநாள் தங்கி டி. கே. சி. யின் கவி மழையிலும், கலை வெள்ளத்திலும் மூழ்கி முக்குளிப்பது வழக்கம். இப்படியாக வருடம் பதின்மூன்று கழிந்தது.

# இறைவன் திருவடி

1954-ம் வருடம் பிப்ரவரி மாதம் பதினும் தேதி காலை ஏழு மணிக்கு டி. கே. சி. இறைவன் திருவடிப் பேறு பெற்றுர்கள். இமாசலத்தின் உயர்ந்த பகுதிகளிலிருந்து உற்பத்தியாகிவருமே ஜீவ நதிகள், அவைபோல ஆயுள் நாள் முழுவதும் கவிகளும், தத்துவங்களும் பெருக்கெடுத் தோடப் பொழிந்து கொண்டிருந்த டி. கே. சி. என்னும் ஆனந்த தத்துவம் எங்கும் நிறைந்த ஆனந்த நடனத்தோடு இரண்டறக் கலந்துவிட்டது.

பேராசிரியர் ஐன்ஸ்டீன் இஸ்ரேல் நாட்டில் ஜனதி பதிப் பொறுப்பேற்க மறுத்துவிட்ட செய்தியை ஒரு சமயம் டி. கே. சி. யிடம் சொல்ல நேர்ந்தது. அப்போது சிரித்துக் கொண்டே, டி. கே. சி. என்னிடம் சொன்னர், "மௌனச்சாமி மடத்திற்கு நீங்கள் அதிபதியாக வேண்டு மென்று என்னை அழைத்தால் நான் இணங்க முடியுமா? மௌனத்தைவிட மரணம் சிறந்ததல்லவா?" என்று. ஆனல் மரணம் வந்தல்லவா டி. கே. சி. என்கிற ஆனந்த தத்து வத்தை எங்கும் நிறைந்த மௌனத்தோடு கலந்துவிடச் செய்துவிட்டது.

டி. கே. சி. யின் பூத உடல் மறைந்துவிட்டாலும் அவர்கள் தமிழன்னைக்குச் செய்த அளவிறந்த தொண்டு களும் திருப்பணிகளும் என்றென்றும் நிலைபெற்று நிற்கும். கம்பர்தரும் ராமாயணம், முத்தொள்ளாயிரம், இதய ஒலி, கம்பர் யார், அற்புத ரசம், தமிழ்க் களஞ்சியம் முதலிய மாபெரும் இலக்கியங்கள் டி. கே. சி. யின் திருப்பணிகளை

நமக்குத் தெரிவித்துக் கொண்டே இருக்கும். சிரித்த முகமும், செந்தாமரை மலர்போன்று அகன்ற விரிந்த கண்களும், கருணையும் அன்பும் கலந்து தோய்ந்த பார்வையும், புன்முறுவலும், அடர்த்தியான மீசையும், அமிர்தமயமான நாதமும், அதில் நிறைந்து ஒளி வீசும் தத்துவங்களும், டி. கே. சி. யின் பூத உடலில் பார்க்க முடியாவிடினும், புகழுடம்பாகிய அவர்களின் நூல்களில் என்றென்றும் காணலாம்.

தமிழ் மக்கள் டி. கே. சி. க்குச் செய்யவேண்டிய கைம் மாறு டி. கே. சி. எழுதிய நூல்களை நன்கு கற்று, தமிழையும், தமிழ்ப் பண்பாட்டையும் அவரவர் ஆற்றலுக்கு ஏற்றாற் போன்று காப்பாற்றுவதுதான்.

தமிழ் மொழியும், தமிழ்க் கவிகளும், தமிழ்க் கலைகளும், தமிழ்ப் பண்பாடும், ஆனந்தமயமானது, ஆனந்தத்திலிருந்து பிறந்தது, ஆனந்தத்தை உண்டாக்குவது என்னும் டி. கே. சி. யின் உறுதி செறிந்த கொள்கையை ஐயந்திரபறத் தெரிந்து உள்ளன்போடு பேணுவோமானால், நன்றிமறவாமைக்கு நாமே லட்சியவாதிக ளாகிவிடுவோம்.

# பண்பாட்டைக் காப்பாற்றியவர்

பண்பாடு என்கிற வார்த்தையைத் தமிழில் உண்டாக்கியது டி. கே. சி. தான். வார்த்தையை உண்டாக்கியது பெரிதல்ல. அந்த வார்த்தைக் குரிய பொருள் அவ்வளவையும் டி. கே. சி. தம்முடைய வாழ்க்கையில் வாழ்ந்து காட்டினார்.

டி. கே. சி. யின் ஒவ்வொரு செயலும் பண்பாடு மயமாய் இருக்கும். அறிவு நிலையை அப்படியே வெளிப்படுத்துவதாகவும் இருக்கும்.

வந்தவர்களை வரவேற்பது, உட்காரச் சொல்வது, உபசரிப்பது, வேலையாளைப் பாய் விரிக்கச்சொல்லி அதன் மேல் ஜமக்காளத்தைப் போடச் சொல்வது இவை ஒவ்வொன்றிலும் அடக்கமான மரியாதை நிறைந்திருக்கும்.

பழகினவர்கள் ஆனாலும் சரி, பழகாதவர்களானாலும் சரி, தம்முடைய வீட்டில் டி. கே. சி. அவர்களைச் சாப்பிட வேண்டுகிற முறை இருக்கிறதே, அது அலாதியான அழகுள்ளது.

இலை போடச் சொல்வதும், விருந்தினர்களைப் பொருத்தமான முறையில் உட்காரவைப்பதும், டி. கே. சி. யிடம் படிக்கவேண்டியவை.

டி. கே. சி. யைப் பார்த்தவர்கள், பார்க்காமல் பிறர் சொல்லக் கேள்விப்பட்டவர்கள், ஒவ்வொருவரும் டி. கே. சி. யை அபூர்வமான முறையில் மதித்தார்கள். நேசித்தார்கள். டி. கே. சி. யைச் சொந்தம் பாராட்டி உற

வாடினதுபோல் யாரும் யாருடனும் உறவாடி இருக்க முடியாது. இதன் காரணம் என்ன ?

யாராக இருந்தாலும் சரி டி. கே. சி. எல்லோரையும் தாய்போல விசாரிக்கிறார். குழந்தைபோல அவர்களிடம் ஊடாடுகிறார். கௌரவம் நிறைந்த பணிவிடையாள் போன்று பணிவிடையும் செய்கிறார்.

டி. கே. சி. யை நேரில் பார்க்காமல், அவர் அன்பைக் கேள்விப்பட்டவர்கள்கூட அப்படியே மயங்கி விடுகிறார்கள். டி. கே. சி. யிடம் பக்தியே கொண்டு விடுகிறார்கள்.

பண்பாடு, மரபு முதலிய ஒவ்வொன்றின் ரகசியமும் டி. கே. சி. க்குத்தான் தெரிந்திருந்தது. அதனால்தான் ஆழங்காணமுடியாத அதி நுட்பங்களையும் சரி, மிக மிக எளியவை என்று நாம் கருதுபவையும் சரி, அவ்வளவையும் நுணுக்கமாக நோக்கி, யதார்த்தமாக அவைகளின் இயல்பை டி. கே. சி. யால் வெளியிட முடிந்தது.

தமிழ் மக்களுக்கே உரிய விருந்தோம்பல் என்னும் பண்பாட்டை ஆயுள் நாள் முழுவதும் எல்லோரும் அதிசயிக்கத்தக்க முறையில் பாதுகாத்து, மற்றவர்களையும் அப் பண்பாட்டைக் கைக்கொள்ளுமாறு கவர்ச்சியாக்கிய மகான் டி. கே. சி. வில்லுப் பாட்டு, காவடி எடுத்தல், கரகம் ஆடுதல், பாற்குடம் எடுத்தல், கோலம் போடுதல், சடுகுடு விளையாட்டு, வெற்றிலைக் கொடிக்கால் வைத்தல், வாழைத் தோட்டம் போடுதல் முதலிய காரியங்களை அற்புதமாக எடுத்து விளக்கிக் காட்டுவார் டி. கே. சி.

ஆங்கில மோகமும், வெறித்த வாழ்க்கையும் நிறைந்த இந்த நூற்றாண்டில் மேலே சொல்லிய தமிழ்ப் பண்பாடு

களும், கிராமியக் கலைகளும் நசுக்குண்டு அழிகின்றனவே என்று வருந்துவார்.

முன் சொல்லிய கலை நலந்தோய்ந்த பண்பாடுகளை வளர்க்கிறவர்கள் யாராக இருப்பினும் அவர்களிடத்திற்குப் போய் அவர்களைப் பலபடப் பாராட்டி உற்சாகப்படுத்து வது டி. கே. சி. யின் இயல்பு.

தமிழ்ப் பண்பின் உன்னதமான அமைப்புகள் தெரிய வேண்டுமானால் வில்லுப் பாட்டைக் கேட்க வேண்டும். காவடி ஆட்டத்தில் கலந்து ஆடவேண்டும் என்று சொல் லுவார் டி. கே. சி.

சடுகுடு, கிளியந்தட்டு போன்ற விளையாட்டுக்கள் அல்லவா உயர்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் வைக்க வேண்டுமென்று ஏங்குவார். கல்வி பயில்கிற பெண்களுக்கு, கோலம் போடுவதும், சமையலும் சொல் லித்தர வேண்டாமா என்று கேட்பார்.

டி. கே. சி. யோடு எப்பொழுதும் ரசிகர்குழாம் இருந்துகொண்டே இருக்கும். நீதிபதிகள், வக்கீல்கள், பேராசிரியர்கள், எஞ்சினீயர்கள், பண்ணையார்கள், தொழி ல்திபர்கள், வைத்திய நிபுணர்கள், அரசியல் தலைவர்கள், மந்திரிமார்கள் இப்படியாக வெவ்வேறு வகைப்பட்ட துறைகளில் இறங்கி அவைகளை இயக்குகிற பெரியார்களும் இளைஞர்கள், எழுத்தாளர்கள், இசைவல்லுநர், நடன், நாட்டிய சிகாமணிகள், கவிஞர்கள், இத்தகையோர்களும் டி. கே. சி. யைச் சுற்றி இருந்து டி. கே. சி. சொல்லு வதைக் கேட்டு இன்புறுவர்.

பழங்காலத்துப் பேரரசர்களுடைய கொலு மண்ட பத்தில் எப்படி முத்தமிழில் வல்ல புலவர்களும், கவிஞர்

களும், கலைஞர்களும் சூழ்ந்திருந்தார்களோ, அப்படியே டி. கே. சி. யைக் கலைஞர்குழாமும், ரசிகர்குழாமும் சூழ்ந்து களிப்புறும்.

பலவகைப்பட்ட அபிப்பிராய பேதம் உடையவர்களும் டி. கே. சி. யின் இல்லமாகிய கலைக் கோயிலில் ஒன்றுபட்டு உறவாடிக் கவியையும் கலை அழகையும் நீ முந்தி நான் முந்தி என்று அனுபவிப்பார்கள்.

டி. கே. சி. வந்தவர்களை எல்லாம் மரியாதை நிறைய வரவேற்றுத் தமிழ்க் கவிகளையும், தமிழ்ப் பண்பின் அற்புதச் சக்திகளையும் எடுத்துரைத்து, விருந்தோம்பி, திளைக்கச்செய்வார்.

காலஞ்சென்ற திவான் பகதூர் ஆவுடையப்ப பிள்ளை அவர்கள், டி. கே. சி. யின் மீது பாடிய ஒரு பாடலில் கம்பரும், சடையப்ப வள்ளலும் ஒருருவந்தாங்கிய அவதார புருடன்தான், டி. கே. சி. என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அவ்வாறு குறிப்பிட்டிருப்பது மிகப் பொருத்தம். தமிழ்ப் பண்பையும், கவிகளையும் விளக்கி, வந்தவர்களுக்கு வேண்டும் உபசரிப்போடு அடையா நெடுங்கதவாய் விருந்தோம்பியும் வாழ்ந்த பெரியாரை வேறு எவ்வாறு குறிப்பிடுவது?

டி. கே. சி. யின் உற்சாகம் நிறைந்த பாராட்டின் மூலமாகவும், தெய்வீகம் நிறைந்த தமிழ்த் தொண்டின் மூலமாகவும் உலகிற்கு அறிமுகமாகிய கலைஞர்களுக்கு அளவே இல்லை. உதாரணமாக, குடத்து விளக்குப் போன்று அடக்கமாய் இருந்த, தமிழ் உலகில் யாருமே அறியாத கவிமணி, தேசிகவிநாயகம் பிள்ளை அவர்களை, வெளிக் கொண்டுவந்து, அவர்கள் பாடிய பாடல்களை எல்லோரும் அனுபவிக்கச் செய்தது டி. கே. சி. அல்லவா?

எழுத்தாளர் ஆர். கிருஷ்ணமூர்த்தி, மீ. ப. சோமசுந்தரம், நடனமணி பால சரஸ்வதி, இசைமணி எம். எஸ். சுப்புலட்சுமி, பிருந்தா முதலிய எத்தனையோ பேர்களை எத்தனையோ காலமாக மக்களுக்கு அறிமுகப்படுத்தி, தமிழ் மக்கள் அவர்கள் பெருமையை உணர்ந்து அனுபவிக்கும்படி செய்த அற்புதம் முழுக்க முழுக்க டி. கே. சி. யைச் சார்ந்ததல்லவா !

டி. கே. சி. அவர்கள் இப்படியாகத் தமிழை, தமிழ்ப் பண்பாட்டை, கலைகளை, கவியை, கலைஞர்களைத் தாய் போல ஆதரித்துக் காப்பாற்றி, மக்கள் யாவரும் அநுபவிக்கச் செய்தார்கள்.

டி. கே. சி.யைக் கலைக்கோயில் என்றும், உண்மைக் கலைகள் அவ்வளவையும் எல்லாருக்கும் விளக்கிக் காட்டும் பல்கலைக் கழகம் என்றும் பெரிய பெரிய அறிஞர்கள் பாராட்டியது எவ்வளவு உண்மை.

டி. கே. சி.யாகிய பல்கலைக் கழகம் இருந்த இடத்தில் இருப்பதோடு இந்தியா முழுவதையும் இரயிலிலும், காரிலும், விமானத்திலும் சுற்றி வந்திருக்கிறது. அதாவது, டி. கே. சி. அடிக்கடி பிரயாணம் செய்துகொண்டிருப்பார்கள். அவர்கள் பிரயாணம் செய்யும் பொழுதும் சுற்றி உள்ள அன்பர்களிடம் கலைகளையும், பண்பாட்டையும் தமிழ்க் கவிகளிலிருந்து எடுத்து விளக்கிப் பாடிப் பாடி யாவரையும் அனுபவிக்கச் செய்வார்கள்.

கனம் ராஜாஜி வங்காள கவர்னராக இருந்தபொழுதும், இந்தியாவின் கவர்னர்-ஜெனரலாக இருந்தபொழுதும் டி. கே. சி. யை அரசாங்க விருந்தினராக வரவேற்றுப் பல்

நாட்கள் டி. கே. சி. யிடம் தமிழ்க் கவிகளைக் கேட்டு இன்புற்றார்கள்.

கடந்த இருபது வருடங்களாக ராஜாஜி அடிக்கடி குற்றாலம் வந்து டி. கே. சி. யுடன் அளவளாவி, டி. கே. சி. சொல்கிற கவிகளையும், விளக்கங்களையும் கேட்டு மகிழ்ந்தார்கள். இப்படியாகப் பல பெரியார்களை, அரசியல் போன்ற வேறு வேறு துறைகளிலிருந்த தலைவர்களைத் தமிழை நுகர்ந்து திளைக்கும்படி செய்தவர்கள் டி. கே. சி. உயர்திரு. ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்கள் சென்னை மாநில முதன் மந்திரியாக இருந்த காலத்து அடிக்கடி டி. கே. சி. தங்கி இருக்கும் இடம் நாடி வந்து அன்போடு பாடல்கள் பாடச் சொல்லிக் கேட்டு அகமகிழ்வார்கள்.

டி. கே. சி. கவிகளை எடுத்து விளக்கும்பொழுது, சமயம், விஞ்ஞானம், மருத்துவம், சரித்திரம், தாவர இயல், மன இயல் முதலிய பல துறைகளிலிருந்தும் கருத்துக்கள் பல தந்து கவியை விளக்குவதுண்டு.

டி. கே. சி. என்னும் உன்னதமான பல்கலைக் கழகம் கடந்த நாற்பது ஆண்டு காலமாய்ப் பல இடங்களிலும் சுற்றி வட்டமிட்டுக்கொண்டே தமிழையும், தமிழ்ப் பண்பாட்டையும் வானுற வளர்த்து ஒளி வீசியது.

# நாதமுதலியார்

டி. கே. சி. யின் குரல் அற்புதமான குரல். சுத்தமான கர்நாடக சங்கீதத்தில் அடக்கமாகவும், கம்பீரமாகவும், ஜீவத் துடிப்போடும் அவர்கள் பாடுவது சரஸ்வதி தேவி பாடுவதுபோல அவ்வளவு தெய்வீகமாக இருக்கும். டி. கே. சி. யின் குரல் எடுப்பான, நிறைந்த, கமகம் செறிந்த, சுருதி மயமான குரல். தேனும் பாலும் கலந்து செவியில் வார்ப்பது போன்ற அந்தக் கம்பீரக் குரல் மரியாதை நிறைந்து, புனிதத்தோடு ஆதரவோடு கேட்பவர்களைக் கட்டித் தழுவுவது போன்றிருக்கும்.

டி. கே. சி. கவிகளைப் பாடுகிற முறையும், கவியின் இடங்களுக்கு ஏற்றபடி சுருதி சேர்த்து எடுத்து முடிக்கிற விதமும் அலாதியான தனித்த பெருமை வாய்ந்தவை. மதிப்பிற்குரிய பல சங்கீத வித்வான்கள் முயன்றும் டி. கே. சி. பாடுவது போன்று கவியை நிறுத்தி, சுத்தமாகவும், தெளிவோடும் பாட முடியவில்லை.

சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்பே டி. கே. சி. யின் எடுப்பான நாதக் கட்டை, பொலிவான மந்திர ஒலியை அனுபவித்த வ. வெ. சு. ஐயரவர்களும், மாதவையா அவர்களும், யோகி சுத்தானந்த பாரதியார் அவர்களும், ஆனந்தத்தோடு "நாத முதலியார், நாதமுதலியாரிடத்திலிருப்பதல்லவா உண்மை நாதம்" என்று பாராட்டி உள்ளார்கள்.

டி. கே. சி. யின் குரலிலுள்ள ஒலியும், ஒலியுள் உள்ள மந்திர சக்தியும், தேவநாதம் என்றுதான் சொல்ல வேண்டும். அவர்கள் கவி ஒன்றைப் பாடுகிற பொழுது கட்டான நாத அலைகள், டி. கே. சி. யின் குரலோடு குரலாய் ரீங்காரம் செய்வதை,

**வீணையோ, மாங்குயிலோ, வெண்சங்கோ, மாணிழையார்**
**பாணி, தவறுத, பல்லியமோ என்று பெரும்**
**மோகன வாச்சியமோ முத்தமிழ்சேர் நற்கவிக்கு**
**வாகனமாம் வந்த குரல்**

என்னும் வெண்பாவால் அறியலாம்.

# சில இயல்புகள்

டி. கே. சி. அலசி அலசி அழகை எடுத்தார்கள். அதைத் திரட்டித் திரட்டி விக்கிரகங்களாக்கினார்கள். தம்முடைய வாழ்நாளையே அதற்கு ஆராதனையாக அர்ப்பணித்தார்கள். அந்த மகத்தான சாதனையில் மற்றவர்களையும் ஈடுபடுத்தினார்கள். குருடர்கள், நொண்டிகள், ஊமைகள், செவிடர்கள் அவ்வளவு பேரையும், விசித்திரம் நிறைந்த மாயைக் கனவுகள் போன்ற அந்த இன்பானுபூதிக்குள் அழைத்துப் போனார்கள். ஒரு கையால் விளக்கை ஏந்தி மற்றொரு கையால் அன்பர்கள் கையைப் பிடித்துக்கொண்டு பக்குவமாக அழைத்துப் போனார்கள். அவர் மூலம் பார்வையும், நடையும், பேச்சும், ஓசையும் பெற்றவர்கள் கணக்கிறந்தவர்கள்.

டி. கே. சி. யின் வார்த்தைகளில் உண்மை நிறைந்து பொங்கிக்கொண்டு இருக்கும். அதோடு ஒரு மந்திர சக்தியும் கலந்திருக்கும். மின்வெட்டுப்போல அப்படியும் இப்படியும் வந்து விழுகின்ற ஒரு சில வார்த்தைகள் எவ்வளவு பெரிய விஷயத்தையும் தெளிவாக விளக்கிவிடும். வார்த்தைகளை டி. கே. சி. எடுத்து ஆளுகிற வனப்பும், நிறுத்தி நிறுத்திச் சொல்கிற நிதானமும் கேட்கிறவர்களை மயக்கிவிடும். வேண்டாததைத் தள்ளிவிட்டு வேண்டியதை மாத்திரம் எடுத்துச் சொல்லுகிற முறையும், அளவும் அவருக்கே உரிய மேலான பண்புகளாகும். வார்த்தைகள் ஒவ்வொன்றும் தமிழ்ப் பண்போடு பேசும். சுகமான தமிழ் ஒலியை அவை காட்டும்.

வார்த்தைகளின் எந்தப் பகுதியில் உணர்ச்சி பூர்வமான பாவம் உண்டோ, அதைச் சுகமாகத் தீண்டியும், மற்ற பாகத்தை நழுவ விட்டு ஒதுக்கியும், கையாளுகிற லாகவம் பண்டிதர் பாமரர் எல்லோருக்கும் பிரமிப்பை உண்டாக்கிவிடும்.

டி. கே. சி. யின் கண் சிமிட்டும், கைகளின் அனுயாச மான வீச்சும், 'கருகரு' என்று வளர்ந்து அடர்ந்த புருவ மும், மீசையும், அதை ஒதுக்கிவிடுகிற முறையும், முகமும், முகத்தில் வந்து சேருகிற பாவ உணர்ச்சிகளும், டி. கே. சி. பேசுகிற வார்த்தைகளுக்கு அற்புதமான வியாக்கி யான்ங்களாக இருக்கும்.

அவர்கள் பேசுகிறார்கள். நாம் கேட்கிறோம் என்ற உணர்ச்சியே நமக்கு இருக்காது. நாமே பேசி நாமே கேட்பது போன்றிருக்கும்.

டி. கே. சி. காலமாவதற்கு மூன்று வாரத்திற்கு முன்னால் என்னிடம் சொன்னார்கள்.. "நீரோடையில் கிடக்கிற வழவழப்பான கூழாங் கற்களில் பாசி பிடிக் காது. தடாகத்தில் கிடக்கிற கற்களில்தான் பாசி பிடிக் கும். அதுபோல இதயத்திலும் ஒரு பிடிப்பு இல்லா விட்டால் எதுவுமே விளங்காது. பிடிப்பு, இருந்து விட்டாலோ சகலமும் விளங்கி விடும். உங்களுடைய இதயத்திலோ அத்தகைய பிடிப்பு இருக்கிறது. எனக்குக் கவலையே இல்லை."

டி. கே. சி. யினுடைய பேச்சில் எவ்வளவு விநயம் இருக்குமோ அவ்வளவு ஹாஸ்யமும் இருக்கும். ஒரு சமயம் சொன்னார்கள்:

"என்னுடைய மகன் கல்யாணத்திற்கு நடனமும் நாதசுரக் கச்சேரியும் ஏற்பாடு பண்ணியிருந்தது. திருநெல் வேலி பாண்டுவாத்தியக்காரன் தன்னுடைய கச்சேரியை யும் கல்யாண வீட்டில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தினுன். உடனே நான் கேட்டேன். கச்சேரிக்கு ரூபாய் எவ்வளவு? என்று. அவன் பதினைந்து ரூபாய் போதும் என்ருன். அப்படியானுல் இருபத்து ஐந்து ரூபாய் தருகிறேன், நீ வாசிக்காமல் மட்டும் இருந் தால் போதும் என்று சொல்லி விட்டேன்."

இப்படி டி. கே. சி. பேசுகிற சமயம், தமக்குள்ளாகச் சிரித்துக் கொள்வார்கள். சிரிப்பு முகத்தில் மலர்ந்து பிரகாசிப்பதும் உண்டு. நாணங்கொண்ட யுவதியைப்போல மீசைக்குள் நெளிந்து ஒளிந்து கொள்வதும் உண்டு.

சில சமயம் தான் டி. கே. சி. வாய்விட்டுப் பலமாகச் சிரிப்பார்கள். அது குழந்தை விழுந்து விழுந்து சிரிப்பது போல இருக்கும். இடி முழங்குவதுபோல எதிரொலிக் கவும் செய்யும்.

குன்றக்குடி அடிகளிடம் பண்பாடு எது என்பதை விளக்கும்பொழுது, "வாவிலங்குடி வயல் இருக்கிறதே அது ஐயாயிரம் ஆண்டுகளாகப் பண்படுத்தப்பட்டு வரு கிறது. (இது தென் காசியை ஒட்டியுள்ள வயல்) பாண் டியர்கள் காலம் முதலாக உழுது உரம்போட்டு வளமாக்கி இருக்கிருர்கள். விளைவும் ஏராளமாக இருக்கிறது. அளவும், படியும், நிலச்சுவான் வீட்டுக்குத் தானுக வந்து விடும். (அளவும் படியும்—குத்தகைக்காரன் கொடுக்கும் நெல்) சரள்த் தரையில் நெல்லை விதைத்தால் வருமா? இனி வாவிலாங்குடி வயல் மண்ணை ஒரு பிடி வாயில் போட்டுப் பார்த்தால்தான் நிலத்தின் பண்பாடு தெரிந்து

விடுமா? நிலத்தின் பண்பாட்டை அதன் விளைவில் பார்க்க வேண்டும். மக்களுடைய பண்பாட்டை மக்களின் வாழ்க்கையில் பார்க்கவேண்டும்'' என்று சொன்னார்கள்.

சர். சி. வி. ராமனின் விஞ்ஞானத்தையும், அவருடைய பேச்சையும் டி. கே. சி. வியந்து வியந்து பாராட்டுவதுண்டு. ராமனுடைய பேச்சுக் கவிபோல இருக்கும் என்று சொல்லிக்கொள்வார்கள்.

''உங்களுடைய ஞாபக சக்தி இவ்வளவு எளிதாக இருக்கக் காரணம் என்ன?'' என்று நான் ஒரு தடவை கேட்டேன். ''நல்லதையே படிக்கிறேன்; அதையும் திரும்பத் திரும்பப் படிக்கிறேன். அதுதான் காரணம்'' என்று சொன்னார்கள்.

## முடிவுரை

டி. கே. சி. ''படிப்பு என்றால் ஆனந்தமயமாக இருக்க வேண்டும்'' என்று அடிக்கடி சொல்வார். ஆனால் ரசிகமணியின் உன்னதமான இந்தக் கொள்கையை அறியாத சிலர், டி. கே. சி. படிப்பையே வெறுக்கிறார் என்று சொல்லிவிட்டார்கள். ரசிகமணியோ, ''ஒவ்வொரு மனிதனும், ஆணும், பெண்ணும், குழந்தையும், வயதானவரும் எல்லோருமே படிக்கவேண்டும். படித்துக் கொண்டே இருக்கவேண்டும். படிக்கப் படிக்க நேர்மையும் ஆண்மையும் நிறைந்த ஒரு சமுதாயத்தை உருவாக்குவதே அத்தகைய கல்விதான். ஆகவே ஆனந்தமயமான கல்வி இல்லாமல் தனி மனிதனோ சமுதாயமோ முன்னேறமுடியாது'' என்று அடிக்கடி வற்புறுத்தி யிருக்கிறார்கள்.

இந்த இருபதாம் நூற்றுண்டு படாடோபமான வெறும் டாம்பீகக் காலம். குழப்பமும் கலக்கமும் நிறைந்த இந்த வேளையில் டி. கே. சி. என்னும் ஞானசூரியன் வந்து தெளிவையும் பிரகாசத்தையும் அள்ளி வழங்கியது. அந்தத் தெய்வீகக் கொடையின் மூலம் அறியாமையும் மயக்கமும் அழிகின்றன. அழிவதை எண்ணி மனம் கலங்குவது இயல்புதான். மனம் தெளிய வேண்டுமானால் வருடங்கள் சில கழியவேண்டும். அறியாமையும், மயக்கமும் சமுதாயத்தில் அப்பொழுது இருக்காது. கலையும், கலை ஆர்வமும் மக்களுடைய உள்ளத்தில் அப்பொழுது யானைப் பசியாக இருக்கும். அப்பொழுது சொல்வார்கள், நம்மவர்கள்: "அடடா இந்த டி. கே. சி. என்பவர் யார், கலா தேவியின் பொன்முடியை எப்படி எல்லாமோ சீவிச் சிக்கெடுத்துக் கொண்டை போட்டு அலங்கரித்துப் போயிருக்கிறுரே அந்த மகான் யார்?" என்று. அத்தகைய காலம் வரும், சமீபத்திலேயே வரும்.

**சைவம் தழைக்கத் தமிழ்தழைக்கப் பண்பாட்டின்**
**மெய்மை தழைத்து விரிந்தோங்கப்—பொய்மைஎலாம்**
**தாம்அகல வந்தான் சடைமுடிமேல் திங்களான்**
**நாமம், டி.கே.சி. எனக்கொண்டு**

UNIVERSITY EXTENSION
LIBRARY, MADURAI

31 MAY 1957

MADRAS

UNIVERSITY EXTENSION
16 DEC 1957

Univ. Grants Commission